விலை: 30.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/- மட்டுமே

சங்கு 19 வள்ளுவர் ஆண்டு 2049 புரட்டாதி 15 திங்கட்கிழமை (01.10.2018) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 286

# முதலமைச்சர் வேட்பாளராக விக்னேஸ்வரன் இல்லை!


## சுமந்திரன் அறிவிப்பு



(கொழும்பு) எதிர்வரும் வட மாகாண சபை தேர்தலில் கூட்டமைப்பின் சார்பில் புதியவர் ஒருவரை முதலமைச்சர் வேட்பாளராக நிறுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார். (23-ம் பக்கம்...)

# புதிய கட்சியில் போட்டியிடுவேன்

## வடக்கு முதலமைச்சர் விக்னேஸ்வரன் தெரிவிப்பு



(கொழும்பு) தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தம்முடன் மகிழ்ச்சியாக இல்லை என்றால் அடுத்த மாகாண சபைத் தேர்தலில் புதிய அரசியல் கட்சி ஒன்றின் மூலம் போட்டியிடப் போவதாக வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார். (24-ம் பக்கம்...)

## பொலிஸாரை மோதித்தள்ளிய பாரவூர்தி

(யாழ்ப்பாணம்)

ஏ9 வீதி கொடிகாமம் சந்திக்கு அருகில் பொலிஸாரின் மோட்டார் சைக்கிளை பாரவூர்தி மோதி விபத்துக்குள்ளானதில் பொலி 23

## மானிப்பாய் வாள்வெட்டு முக்கிய சந்தேக நபர் பொலிஸாரால் கைது

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய் பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற வாள்வெட்டுச் சம்பவத்துடன் தொடர்புடைய முக்கிய சந்தேகநபர் வட்டு 23

## ரயில் கட்டணம் இன்று முதல் அதிகரிப்பு

(கொழும்பு)

தொடருந்துக் கட்டணங்கள் இன்று முதலாம் திகதி தொடக்கம் 15 சதவீதத்தால் அதிகரிக்கப்படவுள்ளன.

எவ்வாறாயினும், குறை 23

## அரசியல் கைதிகள் விடுவிப்பு நாளை முடிவு கிடைக்கும்!

### த.தே.கூட்டமைப்பு நம்பிக்கை

(யாழ்ப்பாணம்)

அரசியல் கைதிகளை விடுவிப்பது தொடர்பில் அரசியல் தீர்மானம் ஒன்றை ஜனாதிபதி எடுக்கவேண்டும் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நேரில் வலியுறுத்தவுள்ளது என தெரிவித்த தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாள ரான நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன், அநுராதபுரத்தில் உணவு ஒறுப்பு போராட்டத்தில் உள்ள கைதிகளின் விடயம் குறித்து நாளை முடிவு கிடைக்கும் எனவும் தெரிவித்துள்ளார்

யாழில் உள்ள அவரது 23

## யாழ். குடாநாட்டில் நேற்று வன்முறைகள் உக்கிரம்!

(யாழ்ப்பாணம்)

யாழ் குடாநாட்டில் நாளுக்கு நாள் இடம்பெற்று வந்த குற்றச் செயல்களை தொடர்ந்து நேற்று திடீரென பல்வேறு பகுதிகளில் வன்முறைச்சம்பவங்கள் உக்கிரமடைந்து காணப்பட்டதால் பொதுமக்கள் மத்தியில் அச்சநிலை ஏற்பட்டுள்ளது.

குறித்த வன்முறைச் சம்பவங்களில் 50 க்கும் மேற்பட்ட குழுவினர் ஈடுபட்டிருந்த போதும் 6 நபர்களே இதுவரை பொலிஸாரால் நேற்று கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதனால் பொதுமக்கள் மீண்டும் பதட்டமான சூழ்நிலைக்குள் தள்ளப்பட்டுள்ளார்கள் என்பதுடன் மக்களின் பாதுகாப்பை உறுதிசெய்யுமாறும் பொதுமக்கள் 23

## தமிழரின் அபிலாசைகளை விக்னேஸ்வரன் உரத்துச் சொல்வதில் வெற்றி பெற்றுள்ளார்

### சுமந்திரன் ஒப்புதல்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண முதலமைச்சர் தனது ஆட்சிக்காலத்தில் தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளை உரத்துச்சொல்வதில் வெற்றி பெற்றுள்ளார் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

யாழில் உள்ள அவரது இல்லத்தில் நேற்று நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் எழுப்பப்பட்ட கேள்விகளுக்கு பதிலளிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மாகாணசபை காலத்தில் முதலமைச்சர் மேற்கொண்ட செயற்திட்டங்கள் தொடர்பாக கேள்வி எழுப்பப்பட்ட போது,

மாகாணசபையில் இருந்து எமது அரசியல் அபிலாசைகளை உரத்துச்சொல்வதில் வெற்றி 23

## அரசியல் கைதிகள் போராட்டத்தில் மேலும் இருவர் இணைவு

(யாழ்ப்பாணம்)

அநுராதபுரம் சிறைச்சாலையில் உணவு தவிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டுள்ள 10 தமிழ் அரசியல் கைதிகளுடன் மேலும் இரு அரசியல் கைதிகள் நேற்று ஞாயிற்றுக்கிழமை முதல் போராட்டத்தில் இணைந்துள்ளனர். யாழ்ப்பாணத்தை சேர்ந்த புருசோத்தமன் 23

## 2019 வரவு - செலவு திட்டத்திலும் பாதுகாப்பு அமைச்சுக்கே அதிக நிதி

(கொழும்பு)

2019 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில், பாதுகாப்பு அமைச்சுக்கே அதிகளவு நிதி ஒதுக்கப்படவுள்ளதாக, நிதி ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. 2019ஆம் ஆண்டுக்கான வரவுசெலவுத் திட்ட நிதி ஒதுக்கீடுகள் தயாரிக்கப்பட்டுள்ளன.

இதற்கமைய, 2019ஆம் ஆண்டில் பாதுகாப்புக்காக 306.1 பில்லியன் ரூபாய்க்கும் அதிகமாக ஒதுக்கீடு செய்யப்படவுள்ளது.

2018 ஆம் ஆண்டில் பாதுகாப்புச் செலவினங்களுக்காக, 290 பில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்டது. அடுத்த ஆண்டில் இது மேலும் அதிகரிக்கவுள்ளது. இராணுவம், விமானப்படை, கடற்படை, கடலோரக்காவல் படை 23

## கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி கிராமங்கள் தோறும் கவனயீர்ப்பு

### தீக்குளிப்பேன் என பெண்ணொருவர் எச்சரிக்கை

(யாழ்ப்பாணம்)

தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்யாவிட்டால் தீக்குளித்து தற்கொலை செய்யவேண்டிய நிலை ஏற்படும் என வயோதிபப் பெண் ஒருவர் கண்ணீர் மல்கத் தெரிவித்தார்.

அநுராதபுரம் சிறைச்சாலையில் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்ற தமிழ் அரசியல் கைதிகளின் போராட்டத்தை நிறுத்துவதுடன், சிறைகளில் உள்ள அனைத்து தமிழ் அரசியல் கைதிகளையும் விடுதலை செய்ய வலியுறுத்தி நேற்று ஞாயிற்றுக்கிழமை பொன்னாலை வரதராஜப் பெருமாள் ஆலயத்திற்கு முன்பாக கவனயீர்ப்பு போராட்டம் 23

## நாளை விசேட அமைச்சரவை கூட்டம்

(கொழும்பு)

பரபரப்பான அரசியல் சூழ்நிலைக்கு மத்தியில் நல்லாட்சிக்கான ஐக்கிய தேசிய முன்னணி அரசின் அமைச்சரவைக் கூட்டம் நாளை செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ளது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற 23

# கனகாம்பிகை குளத்திலிருந்து ஆணொருவரின் சடலம் மீட்பு



(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட இந்துபுரம் கிராமத்தினை சேர்ந்த குடும்பஸ்தர் ஒருவர் கனகாம்பிகை குளத்திலிருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

நேற்று மாலை குறித்த சடலம் மீட்கப்பட்டுள்ளதோடு கிளிநொச்சி பொலிஸார் விடயம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர்.

சடலமாக மீட்கப்பட்டவர் 5 பிள்ளைகளின் தந்தையான இந்துபுரம் திருமுருகண்டி பகுதியை சேர்ந்த 52 வயதுடைய பொன்னையா திருநீலகண்டன் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.(மு-281)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



-Best Wishes-

அதிபர்

திரு.சுப்பிரமணியம் ரவீந்திரன் (SLPS-I)

எமது பாடசாலையின் அதிபர் உயர்திரு.சுப்பிரமணியம் ரவீந்திரன் அவர்கள் 10.12.2010ஆம் திகதி தொடக்கம் இலங்கை அதிபர் சேவை முதலாம் தரத்திற்கு (SLPS-I) பதவி உயர் பெற்றுள்ளார்.

இவரை பாராட்டி வாழ்த்துவதுடன் இவர் மேலும் பல உயர் பதவிகளைப் பெற்று சிறப்புடன் வாழ மனதார வாழ்த்துகின்றோம்.

ஆசிரியர், பணியாளர் நலன்புரிச் சங்கம்
கிளி/இராமநாதபுரம் கிழக்கு
அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை

(த-4016)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



-Best Wishes-

எமது வித்தியாலய மாணவன்

செல்வன் விநாயகமூர்த்தி டிலக்சன்

தொடர்ச்சியாக நான்கு ஆண்டுகள் சமூக விஞ்ஞானப் போட்டியில் பங்கு பற்றி வெற்றி பெற்று வித்தியாலயத்திற்கு பெருமை ஈட்டித் தந்ததையிட்டு பாராட்டி வாழ்த்துவதில் பெரு மகிழ்வடைகின்றோம்.

| தரம் | பிரிவு | நிலை |
|---|---|---|
| 6 (2014) | Under-200 | 1ஆம் இடம் (தேசியம்) |
| 7 (2015) | Below-200 | 1ஆம் இடம் (தேசியம்) |
| 8 (2016) | Below-200 | 1ஆம் இடம் (மாகாணம்) |
| 9 (2017) | Below-200 | 2ஆம் இடம் (தேசியம்) |

பாடசாலை சமூகம்
(C-4017) கிளி/கண்டாவளை ம.வி

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



எமது பாடசாலையின் அதிபர்

திரு.வேலுப்பிள்ளை உதயமோகன் (SLPS-I)

அவர்கள் அதிபர் தரம் ஒன்றிற்கு பதவி உயர்வு பெற்றமையையிட்டு அவரை பாராட்டி வாழ்த்துவதோடு மேலும் பல சிறப்புகளையும் பதவி உயர்வுகளையும் பெற வாழ்த்தி நிற்கின்றோம்.

(8859)

வாழ்த்துவோர்:-
ஆசிரியர் நலன்புரிக் கழகம்
ஏழாலை மகா வித்தியாலயம், ஏழாலை

# தமிழர் பாரம்பரியம் ஆவணப்படுத்தாமை பாரிய பிரச்சினையை ஏற்படுத்தியுள்ளது!

## முதலமைச்சர் விக்னேஸ்வரன் ஆதங்கம்

(முல்லைத்தீவு)

தமிழர்களின் பாரம்பரியம் ஆவணப்படுத்தப்படாமையினால், பாரிய பிரச்சினை ஏற்பட்டுள்ளதாக வட மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவில் நேற்று இடம்பெற்ற வட மாகாண பண்பாட்டு அலுவல்கள் திணைகளம் நடத்தும் வடமாகாண பண்பாட்டு பெருவிழாவில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இந்த நிகழ்வுகள் கடந்த இரு நாட்களாக ஒட்டுசுட்டான் கற்சிலைமடு பண்டாரவன்னியன் மகா வித்தியாலயத்தில் இடம்பெற்றது.

பிரதம அதிதியாக கலந்துகொண்டு அவர் மேலும் தெரிவித்ததாவது.

தமிழர்களின் பாரம்பரிய கலாசாரங்கள், பண்பாடுகள் மற்றும் அவர்களின் கலைப் படைப்புக்கள் ஆகியன பெருமளவில் ஆவணப்படுத்தப்படாத காரணங்களினால் ஏனையவர்கள் தமது கலை நயம் பற்றியும், தமது இருப்புக்கள் பற்றியும் பல்வேறு தகவல்களை வசதிக்கேற்றவாறு மாற்றி மாற்றி புதிய வரலாறுகளை உட்புகுத்துவதன் மூலம் தமிழர்கள் என்ற ஒரு இனம் இலங்கையில் வாழ்ந்ததற்கான அறிகுறிகள் கூட தென்படாத வகையில் சரித்திரங்கள் மாற்றி எழுதப்படுகின்றன.

எனவே எமது படைப்புக்கள், எமது பூர்வீகங்கள், எமது சரித்திரங்கள், எமது கடந்த கால எச்சங்கள் ஆகிய அனைத்தையும் பற்றியும் நூல் வடிவில் படைப்புக்களாகக் கொண்டு வந்து அவை பேணிப் பாதுகாக்கப்பட வேண்டும். அப்போதுதான் எமது மக்கள் கிறிஸ்துவுக்கு முற்பட்ட காலத்தில் இருந்தே இப் பகுதிகளில் ஒரு நாகரிகம் அடைந்த சமூகமாக வாழ்ந்து வந்தார்கள் என்பது எமது மக்களுக்குத் தெரிய வரும்.

செம்மொழி அந்தஸ்தைப் பெற்ற எமது மொழி இயல், இசை, நாடக துறைகளில் மேலான பங்களிப்பை செய்கின்ற ஒரு மூத்த மொழியாக ஏற்றுக் கொள்ளப்பட்ட போதும் எம்மவர்கள் தமிழ் மொழியில் பேசுவதோ அல்லது தமிழ்மொழி மூல கற்கைநெறிகளை மேற்கொள்வதற்கு கொடுக்கின்ற முக்கியத்துவமோ திருப்திகரமானதாக இல்லை.

இன்று வட கிழக்கை இணைக்க மறுத்து இடையில் சிங்களக் குடியேற்றங்கள் நடைபெற்று வருகின்றன. முன்னம் வெலிஓயா இப்போது கியூல் ஓயா என்று வடகிழக்கு மாகாணங்களுக்கு இடைப்பட்ட இதுகாறும் தமிழ்ப் பெயர்களைக் கொண்டிருந்த நிலங்கள் பெயர்மாறி வருகின்றன. காலக்கிரமத்தில் அவர்களின் கலை, கலாசாரங்கள் எம்மவரின் வாழ்க்கையில் உள்நுழைவன. எமது தனித்துவம் பறி போய்விடுவன. இதனால்தான் முல்லைத்தீவு, வவுனியாக் காணிகள் பறி போவதை நாம் எதிர்த்து வருகின்றோம். எமது சுற்றாடல்களைப் பாதுகாப்பதும் எமது கலாசாரத்தின் ஒரு அங்கமே. ஆகவே மக்களுக்குத் தம் பாரம்பரியம் பற்றி எடுத்துச் செல்லும் இவ்வாறான பண்பாட்டு பெரு விழாக்கள் அத்தியாவசியம் என்பதை உணர்ந்து கொண்டிருப்பீர்கள் என அவர் மேலும் தெரிவித்தார். (மு)


## மணமகள் தேவை

இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1974 இல் பிறந்த 9 கிரகபாவம் மீன இலக்கினமும் பூர நட்சத்திரமும் உடைய மணமகனுக்கு மணமகள் தேவை. (5839)

தொடர்புகளுக்கு:- 076 930 0727

## மரண அறிவித்தல்

### இராசசேகரி வல்லிபுரம் (தெய்வம்)



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 25 - 07 - 1949 | 29 - 09 - 2018 |

கற்சிலைமடு ஒட்டுசுட்டானை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட இராசசேகரி வல்லிபுரம் (தெய்வம்) அவர்கள் நேற்றுமுன்தினம் (29.09.2018) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராசசேகரி-கற்பகம் தம்பதியரின் அன்பு மகனும், விஜயலட்சுமி அவர்களின் அன்புக் கணவரும், வீரசிங்கம், செல்லத்தம்பி, தனபாலசிங்கம், பாலச்சந்திரன், செந்தமிழ்ச்செல்வன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், சசிலா (லண்டன்), சசிதரன் (லண்டன்), துஸ்யந்தன் (ஆசிரியர்-மு/வேணாவில் ஸ்ரீ முருகானந்தா வித்தியாலயம்), சத்திதாசன் (லண்டன்), ஜதன் (பாடசாலைப் பணியாளர்-முத்துஐயன்கட்டு வலதுகரை மகா வித்தியாலயம்), தர்மிலா (யாழ்.பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்புத் தந்தையும், குகரூபன் (லண்டன்), வுகிர்தா (லண்டன்), பிரியதர்சினி ஆகியோரின் பாசமிகு மாமனாரும், தனுட்சன், கேசனா, கஜலினி, திம்சிகா, திசானா ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.10.2018) திங்கட்கிழமை காலை 10 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பேராறு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கற்சிலைமடு
ஒட்டுசுட்டான்

-குடும்பத்தினர்
0775940430

(அ-4014)

# வவுனியாவில் இன்று சத்தியாக்கிரகப் போராட்டம்

# அரசியல் கைதிகளின் விடுதலைக்காக தமிழ்-முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களை ஒன்றிணைய அழைப்பு

## சிவசக்தி ஆனந்தன் எம்.பி

(குருமன்காடு)

**அரசியல் கைதிகளின் விடுதலைக்காக வடக்கு, கிழக்கு மற்றும் மலையக தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களையும் சகோதர முஸ்லிம் பாராளுமன்ற மன்ற உறுப்பினர்களையும் ஒன்றிணையு மாறு வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் அழைப்பு விடுத்துள்ளார்.**



வவுனியாவில் பொது அமைப்புக்களின் ஏற்பாட்டில் இன்று நடைபெறவுள்ள சத்தியாக்கிரப் போராட்டம் தொடர்பில் அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

அநுராதபுரம் சிறைச்சாலையில் உண்ணாவிரதம் இருக்கும் அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி இன்று திங்கட்கிழமை இரண்டாவது தடவையாக பெரும் சத்தியாக்கிரகப் போராட்டம் வவுனியாவில் நடைபெறவுள்ளது. பொது அமைப்புக்கள், அரசியல் கட்சிகள் எனப்பலரும் இதற்கு தமது ஆதரவை வழங்கியுள்ளனர்.

இந்த அரசியல் கைதிகளின் நிலைமை ஒவ்வொரு மணிநேரமும் மிகவும் மோசமான கட்டத்தை அடைந்து கொண்டிருக்கின்றது. இந்த அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பாக இதுவரை ஜனாதிபதி, பிரதமர், சட்டமா அதிபர் ஆகியோர் உருப்படியான எந்தவொரு நடவடிக்கையும் எடுக்காமல் வெறுமனே, சட்டமா அதிபருடன் பேச வேண்டும் அல்லது நீதி மன்றங்களில் நிலுவையில் உள்ள அரசியல் கைதிகளின் வழக்குகளை கவனிக்க வேண்டும் என்று சாட்டுப் போக்குகள் சொல்லப்படுகிறதே தவிர, இவர்களுடைய விடுதலை தொடர்பாக காத்திரமான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. இது உண்மையில் அரசியல் ரீதியான பிரச்சினை. அரசியல் ரீதியாகத் தான் தீர்வு காணப்பட வேண்டும்.

ஆகவே அரசியல் ரீதியாக தீர்வு காணும் விடயத்திற்கு அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுப்பதற்கு வடக்கு, கிழக்கு மற்றும் மலையகத்தில் இருக்கக் கூடிய தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள், முஸ்லிம் சகோதர பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் இணைந்து காத்திரமான முறையில் குரல் கொடுக்க வேண்டியுள்ளது.

இன்னும் சொல்லப்போனால் இந்த அரசியல் கைதிகளுக்கு விடுதலை கிடைக்கும் வரைக்கும், பாராளுமன்றத்தை புறக்கணிப்பதற்கு தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும். தமிழ், முஸ்லிம் மக்களின் பேராதரவுடன் இந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்தது. முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினால் 12 ஆயிரம் பேர் புனர்வாழ்வளிக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டுள்ளார்கள்.

ஆனால் தற்போது ஜனாதிபதி, பிரதமரால் 130 இற்கு உட்பட்ட தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்ய முடியாமல் இருக்கிறது. இந்த நிலையில் ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் பொதுச் சபையில் ஜனாதிபதி உரையாற்றும் போது இலங்கைப் பிரச்சினை உள்நாட்டுப் பிரச்சினை. இது உள்நாட்டில் தீர்வு காணப்பட வேண்டும். இந்தப் பிரச்சினையை ஒரு புதிய கண்ணோட்டத்துடன் பார்க்க வேண்டும் என்று கேட்டுள்ளார். இலங்கை அரசாங்கத்தின் போர்க்குற்றம், மனிதவுரிமை மீறல்கள் தொடர்பாக ஐ.நா.மனிதவுரிமை பேரவையில் இலங்கை அரசாங்கம் இணை அனுசரணை வழங்கிய வாக்குறுதிகள் எவையுமே நிறைவேற்றப்படவில்லை.

புதிய அரசியலமைப்பின் ஊடாக இந்தப் பிரச்சினைக்கு தீர்வு காணப்பட வேண்டும். போர்க்குற்றம், மனிதவுரிமை மீறல் தொடர்பாக ஒரு சர்வதேச கலப்பு விசாரணை செய்யப்பட வேண்டும். அரசியல் கைதிகளின் விடயம், காணாமல் போனோரின் விடயம், காணிவிடுவிப்பு என பல விடயங்கள் குறித்து இந்த அரசாங்கம் ஐ.நா மனிதவுரிமை பேரவைக்கு வாக்குறுதிகளை வழங்கி விட்டு தற்போது ஐ.நா. பொதுச் சபையில் ஜனாதிபதி இந்த விடயங்கள் தொடர்பாக எதனையும் கூறாமல் புதிய கண்ணோட்டத்தில் பார்க்க வேண்டும் எனக் கூறும் ஜனாதிபதி குறைந்த பட்சம் அரசியல் கைதிகளை கூட விட முடியாமல் இருக்கும் போது தமிழர் பிரச்சினையை எவ்வாறு தீர்க்கப் போகிறார்.

தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் அரசாங்கத்தை பாதுகாத்துக் கொண்டும், முண்டு கொடுத்துக் கொண்டும் இருக்காமல் காத்திரமான நடவடிக்கை எடுக்க அரசாங்கத்திற்கு கடுமையான அழுத்தம் கொடுக்க வேண்டும். அரசியல் கைதிகளை விடுவிக்கும் வரைக்கும் பாராளுமன்றத்தை புறக்கணிக்க வேண்டும்.

அதைவிடுத்து மக்களை ஏமாற்றுவதற்காக ஜனாதிபதி, பிரதமர் எங்களை ஏமாற்றிவிட்டார்கள் எனக் கூறாது காத்திரமாக செயற்பட வேண்டும்.

ஆகவே, அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி நடைபெறும் போராட்டத்திற்கு அனைவரும் ஆதரவு தெரிவிக்க வேண்டும் எனக் கேட்டுக் கொள்கின்றேன் எனத் தெரிவித்தார். (இ-250)

# நாடளாவிய ரீதியில் கடந்த 8 மாதங்களில் விபத்துக்களில் சிக்கி 1890 பேர் உயிரிழப்பு

(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் கடந்த எட்டு மாதங்களில் இடம்பெற்ற விபத்துக்களில் சிக்கி ஆயிரத்து 890 பேர் உயிரிழந்துள்ளனர்.

பொலிஸ் தலைமையகத்தினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையிலேயே இந்தத் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது. உயிரிழந்தவர்களில் 570 பாதசாரிகள் உள்ளடங்குவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், கடந்த 8 மாதங்களில் மோட்டார் சைக்கிளில் பயணித்த 123 பேரும், வாகனச் சாரதிகள் 151 பேரும், பயணிகள் 259 பேரும், சைக்கிளில் பயணித்த 144 பேரும் உயிரிழந்துள்ளதாக அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (இ-7)

# ஜனாதிபதி நாடு திரும்பினார்



(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் சபையின் 73 ஆவது பொதுச் சபைக் கூட்டத்தில் கலந்து கொள்ள நியூயோர்க் சென்றிருந்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்று ஞாயிற்றுக்கிழமை அதிகாலை நாடு திரும்பினார்.

இம்முறை ஐக்கிய நாடுகளின் பொதுச் சபை கூட்டத்தில் உரையாற்றிய ஜனாதிபதி, இலங்கையில் யுத்தத்தின் பின்னர் ஏற்பட்டுள்ள நல்லிணக்கம் தொடர்பிலும் அதற்கான செயற்பாடுகள் குறித்தும் தெளிவுபடுத்தி இருந்தார்.

அத்துடன், ஐக்கிய நாடுகளின் பொதுச் செயலாளர் மற்றும் பொதுநலவாய நாடுகளின் பொதுச் செயலாளர் உள்ளிட்ட பல உலக நாடுக ளின் தலைவர்களையும் ஜனாதிபதி சந்தித்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)



# ராஜபக்ஷவினர் ஆட்சிக்கு வர இடமளிக்கப் போவதில்லை

## அமைச்சர் நவீன் உறுதி

(கேகாலை)

ராஜபக்ஷவினரை மீண்டும் ஆட்சிக்கு வர இடமளிக்க போவதில்லை என ஐக்கிய தேசியக் கட்சியின் தேசிய அமைப்பாளரான அமைச்சர் நவீன் திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

கேகாலையில் நேற்று முன்தினம் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

தற்போதைய அரசாங்கம் கடந்த சில வருடங்களில் மக்கள் உணரும் வகையிலான அபிவிருத்திகளை செய்துள்ளது.

எனினும் பல்வேறு பிரச்சினைகள் ஏற்பட்டது என்பதை ஒப்புக்கொள்கிறோம். ஐக்கிய தேசியக் கட்சியினர் அச்சம் கொள்ள தேவையில்லை.

எதிர்காலத்தில் ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சியின் கீழ் அனைத்து துறைகளிலும் அபிவிருத்திகள் முன்னெடுக்கப்படும் என தெரிவித்தார்.

அத்துடன், ஐக்கிய தேசியக் கட்சி மட்டுமே இளைஞர்களுக்காக குரல் கொடுக்கும் கட்சி எனவும் அமைச்சர் நவீன் திஸாநாயக்க தெரிவித்தார். (இ-7)

# ஆலயங்களில் மிருகபலி பூஜை தடையை சட்ட வரைவுக்கு உட்படுத்த நடவடிக்கை

## அமைச்சர் சுவாமிநாதன் தெரிவிப்பு

(கொழும்பு)

இந்து ஆலயங்களில் மிருக பலி பூஜையை தடை செய்ய அமைச்சரவை மேற்கொண்ட தீர்மானத்தை சட்ட வரைவுக்கு உட்படுத்தும் நடவடிக்கைகள் தற்போது இடம்பெற்று வருவதாக இந்துமத விவகார அமைச்சர் டி.எம். சுவாமிநாதன் தெரிவித்துள்ளார்.

கடந்த 11ஆம் திகதி இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் இந்து மத அலுவல்கள் அமைச்சர் டி.எம்.சுவாமிநாதனினால் சமர்ப்பிக்கப்பட்ட பத்திரத்திற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியிருந்தது.

பழைமை வாய்ந்த மத சம்பிரதாயங்கள் என்ற ரீதியில் கருதப்படும் மிருக பலி பூஜை நடத்துதல் இன்னும் சில கோயில்களில் பகிரங்கமாக மேற்கொள்ளப்படுகின்ற போதிலும் பெரும்பாலான இந்து பக்தர்கள் அதில் உடன்படவில்லை என்பது தெரியவந்துள்ளதாக அந்த அமைச்சரவை பத்திரத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது.

இந்து ஆலயங்களில் மிருகபலி பூஜை வழிபாடு நடப்பதற்கு இந்தியாவில் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய இலங்கைக்குள் ஆலயங்களில் அல்லது அதன் எல்லைப் பகுதிக்குள் மிருக மற்றும் பறவை பலிப் பூஜையை தடை செய்வதற்கான திருத்தச் சட்டத்தை தயாரிக்குமாறு இந்துமத அலுவல்கள் அமைச்சரால் முன்வைக்கப்பட்ட யோசனைக்கு அமைச்சவை அங்கீகாரம் வழங்கியிருந்தது.

இந்த நிலையில், குறித்த அமைச்சரவை தீர்மானத்தை சட்ட வரைவுக்கு உட்படுத்தும் பணிகள் சட்டவரைஞர்களினால் மேற்கொள்ளப்படுவதாகவும், குறித்த பணிகள் நிறைவு பெற்றதன் பின்னர் எதிர்வரும் நான்கு மாதங்களுக்குள் அதனை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்து சட்டமாக அங்கீகரிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் அமைச்சர் சுவாமிநாதன் தெரிவித்துள்ளார். (இ-7)


## உடற்பருமனை சீராக்கும் மருத்துவம்
Obesity Management Therapy

சிறுவர் உடற்பருமன் (Childhood Obesity), பருவ வயதினர் உடற்பருமன் (Teenage Obesity), வயது வந்தோர் உடற் பருமன், மகளிர்க்கு ஏற்படும் உடற் பருமன் (Female Obesity - due to thyroxin dysfunction, Menstrual disorders & Menopausal Problems), தவறான வாழ்க்கைமுறை, உணவுப் பழக்கவழக்கங்கள் மற்றும் நோய் நிலைகளில் ஏற்படும் உடற்பருமன் போன்றவற்றிற்கு சிறந்த உணவு முறைகளுடன் கூடிய மருத்துவ சிகிச்சை பெறலாம்.

● சிகிச்சைகளுக்கு தொலைபேசியில் முன் அனுமதிபெறவும்

Dr.R.LAKSHMANAIYER D A M (cey), D M G (ind)
Regd - (7966, Dep AYU - 6-3/1/2541)
மங்களபதி சித்த ஆயுள்வேத வைத்தியசாலை,
41/5, அரச வீதி (சங்கிலியன் வீதியின் உள்ளே) நல்லூர்-யாழ்ப்பாணம்.
Tel. 021 205 4066 / 077 872 5251
(5860)

# கிளாசன் அசத்தல்; தென்னாபிரிக்கா கலக்கல்



துடுப்பெடுத்தாடும் தெ.ஆபிரிக்காவின் கிளாசன்

சிம்பாப்வே அணிக்கு எதிரான முதலாவது ஒரு நாள் போட்டியில் கிளாசன் அசத்த தென்னாபிரிக்க அணி 143 பந்துகள் மீதமிருக்கையில் 5 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

தென்னாபிரிக்கா சென்றுள்ள சிம்பாப்வே அணி மூன்று போட்டிகள் கொண்ட ஒரு நாள் தொடரில் பங்கேற்கிறது. முதல் போட்டி கிம் பெர்லியில் நேற்று நடந்தது.

நாணயச்சுழற்சியில் வென்ற தென்னாபிரிக்க அணியின் தலைவர் ஜே.பி.டுமினி களத்தடுப்பை தேர்வு செய்தார்.

சிம்பாப்வே அணிக்கு 'வேகங்கள்' தொல்லை கொடுத்தன. நிகிடி பந்தில் சொலமன் மிரே டக் அவுட்டானார். எர்வின் 7 ஓட்டங்களில் திரும்பினார். பலுக்வாயோ பந்தில் அணித் தலைவர் ஹமில்டன் மசகட்சா (25) ஆட்டமிழந்தார். பிரண்டன் ரெய்லர் (9), சீன் வில்லியம்ஸ் (4) ஒற்றை இலக்கை தாண்டவில்லை. நிகிடி 'வேகத்தில்' சிகும்புரா (27) ஆட்டமிழந்தார். மற்றையவர்களும் சொதப்ப, சிம்பாப்வே அணி 34.1 ஓவர்களில் 117 ஓட்டங்களுக்கு சகல விக் கெட்டுக்களையும் இழந்தது.

பந்துவீச்சில் தென்னாபிரிக்க அணி சார்பில் அதிகபட்சமாக நிகிடி 19 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

**கிளாசன் அசத்தல்**

எட்டிவிடும் இலக்கை விரட்டிய தென்னாபிரிக்கா ஆரம்பத்தில் தடுமாறியது. எல்கர் (2), ஹென்ரிக்ஸ் (5) அதிர்ச்சி அளித்தனர். அறிமுக வீரர் கிறிஸ்ரியன் ஜான்கர் (6) வாய்ப்பை வீணடித்தார். சடாரா 'வேகத்தில்' மார்க்ராம் (27) ஆட்டமிழந்தார்.

அதன்பின், இணைந்த கிளாசன், அணித் தலைவர் டுமினி ஜோடி வெற்றியை எளிதாக்கியது. வெலிங்டன் மசகட்சாவின் 22வது ஓவரின் முதலிரண்டு பந்தில் சிக்சர் விளாசிய கிளாசன் (44) நான்காவது பந்தில் ஆட்டமிழந்தார்.

முடிவில், தென்னாபிரிக்க அணி 26.1 ஓவர்களில் 5 விக்கெட்டுக் களை இழந்து வெற்றியிலக்கை (119 ஓட்.,) 5 விக்கெட்டுக்களால் அடைந்தது.

# என் வழி... தல தோனியின் வழி

## சொல்கிறார் ரோகித் சர்மா



"மைதானத்தில் இறங்கி விட்டால் தோனியைப் போல மாறி விடுவேன். நெருக்கடியான நேரத்திலும் எவ்வித பதட்டமும் இல்லாமல் 'மிஸ்டர் கூலாக' இருப்பேன். வாய்ப்பு கிடைத்தால் முழுநேர தலைவராக பதவி ஏற்கத் தயாராக உள்ளேன்," என ரோகித் சர்மா தெரிவித்தார்.

ஆசிய கிண்ணத் தொடரில் ஹோலிக்கு ஓய்வு கொடுக்கப்பட, ரோகித் சர்மா தலைவராகப் பொறுப்பேற்றார். பங்களாதேசுக்கு எதிரான இறுதியில் பதட்டப்படாமல் தோனி போல 'கூலாக' செயல்பட்ட இவர், ஆசிய கிண்ணம் வென்று கொடுத்தார்.

இதுகுறித்து ரோகித் சர்மா கூறியதாவது,

சீனியர் வீரர்கள் சிலருக்கு ஓய்வு கொடுக்கும் போது, அணித் தலைவராக செயற்படுவது சவாலானதுதான். ஓய்வில் இருப்பவர்கள் அடுத்து வந்து விடுவர் எனத் தெரிந்தாலும் மற்றைய வீரர்கள் தங்களுக்கு கிடைக்கும் வாய்ப்புகளில் பெரியளவில் ஓட்டங்கள் குவிக்க முயற்சிப்பர்.

அணித் தலைவர் என்ற முறையில் நானும், பயிற்சியாளரும் இவர்களுக்கு எவ்வித நெருக்கடியும் தரவில்லை. எப்படி வேண்டுமானாலும் விளையாடட்டும் என சுதந்திரம் கொடுத்தோம். என்னைப் பொறுத்தவரையில் அணியில் நிலவும் சூழலைப் புரிந்து கொண்டு அதற்கேற்ப எப்படி விளையாடுவது, அணியை முன்னெடுத்துச் செல்வது எப்படி போன்ற விடயங்களை புரிந்து கொண்டேன். இத் தொடரில் இவற்றை சரியாக செய்து முடித்ததாக நினைக்கிறேன்.

**இடம் உறுதி**

தலைவர் என்பவர் சக வீரர்களது நிலையை அணியில் நிச்சயமற்றதாக ஆக்கிவிடக் கூடாது.

டுபாய் வருவதற்கு முன் அம்பதி ராயுடு, தினேஷ் கார்த்திக்கிடம், 'உங்களை நீக்க மாட்டேன்,' என உறுதி கொடுத்தேன். இதற்கேற்ப அவர்கள் நன்கு விளையாடினர்.

இப்படித்தான் சிறந்த வீரர்களை உருவாக்க முடியும். மாறாக இரு போட்டிகளில் சரியாக விளையாடவில்லை என்றதும் நீக்குவது என்பது சம்பந்தப்பட்ட வீரருக்கு மிகுந்த சிரமத்தை தரும்.

ஒரு போட்டியை மட்டும் வைத்து வீரரின் திறமையை கணிக்க முடியாது. உலக கிண்ண தொடருக்கு முன் துடுப்பாட்ட வரிசையில் 4, 6வது இடத்தில் வரும் வீரர்கள் அதிக போட்டிகளில் விளையாட வேண்டும். இதற்கு இப்போது தான் சரியான தருணம். அடுத்த ஆண்டில் இதற்கு தெளிவான விடை கிடைத்து விடும். இவ்வாறு ரோகித் சர்மா தெரிவித்தார்.

**தோனி போல**

இப்போது கிண்ணம் வென்று விட்டோம். அடுத்து எப்போது வாய்ப்பு கிடைத்தாலும் முழுநேர தலைவராக பதவி ஏற்க தயாராக உள்ளேன். ஏனென்றால் நான் தோனியை போல. அவர் தலைவராக செயற்பட்ட காலங்களில் களத்தில் ஒரு போதும் பதட்டம் அடைய மாட்டார். முடிவுகள் எடுக்கும் முன் சிறிது நேரம் எடுத்துக் கொள்வார். எனக்கும் அதுபோன்ற ஒற்றுமைகள் உள்ளன.

என்னைப் பொறுத்தவரையில் முதலில் யோசித்து விட்டு பிறகு தான் முடிவெடுப்பேன். இதெல்லாம் தோனியிடம் இருந்துதான் கற்றுக் கொண்டேன். ஏனெனில் இவரது தலைமையில் பல ஆண்டுகள் விளையாடி உள்ளேன். எப்போதெல்லாம் உதவி தேவையோ, 'அட்வைஸ்' வழங்கத் தயாராக இருப்பார். சிறந்த தலைவராக தோனியிடம் இருந்து நாங்கள் தொடர்ந்து கற்றுக் கொண்டு வருகிறோம். களத்தில் எந்த சந்தேகம், கேள்விகளாக இருந்தாலும் சரி, இதற்கான பதில்கள் அவரிடம் இருக்கும்.

# விஜய், தவானுக்கு கல்தா

## டெஸ்ட் அணி அறிவிப்பு



மே.தீவுகளுடனான டெஸ்ட் தொடருக்கான இந்திய அணி அறிவிக்கப்பட்டது. ஆரம்ப வீரர்கள் முரளி விஜய், ஷிகர் தவானுக்கு இடம் கிடைக்கவில்லை. மயங்க் அகர்வால், மொஹமட் சிராஜ் அணியில் இடம்பெற்றனர்.

இந்தியா வந்துள்ள மே.தீவுகள் அணி இரண்டு டெஸ்ட், ஐந்து ஒருநாள், மூன்று 'ரி20' போட்டிகள் கொண்ட தொடரில் பங்கேற்கிறது.

இம்மாதம் ஒக். 4-8 (ராஜ்கோட்), ஒக். 12-16 (ஹைதராபாத்) டெஸ்ட் போட்டிகள் நடக்கின்றன.

டெஸ்ட் தொடர் ஆரம்பிக்க இன்னும் 3 நாட்கள் மட்டும் உள்ள நிலையில் 15 பேர் கொண்ட இந்திய அணி நேற்று முன்தினம் அறிவிக்கப்பட்டது. ஹோலி அணித் தலைவராக தொடர்கிறார். இவரது மணிக்கட்டு காயம் பெரியளவில் இல்லை என்பதால் சேர்க்கப்பட்டதாக தெரிகிறது.

**தவான் இல்லை**

இங்கிலாந்து டெஸ்ட் தொடரில் சொதப்பிய ஷிகர் தவான், தமிழகத்தின் முரளி விஜய்க்கு இடம் கிடைக்கவில்லை. இவர்களுக்குப் பதில் கடந்த ரஞ்சி தொடரில் 8 போட்டிகளில் 1160 ஓட்டங்கள் குவித்த மயங்க் அகர்வால் இடம்பெற்றார்.


மே.தீவுகள் அணிக்கு எதிரான பயிற்சி போட்டியில் 90 ஓட்டங்கள் எடுத்த மயங்க் அகர்வாலின் கடந்த சீசன் சராசரி ஓட்டக் குவிப்பு 105.45 ஆக உள்ளது. லோகேஷ் ராகுல், பிரித்வி ஷா அணியில் நீடிக்கின்றனர்.

விக்கெட் காப்பாளர் இடத்தில் தினேஷ் கார்த்திக்கிற்கு பதில் ரிஷாப் பண்ட் தேர்வு செய்யப்பட்டார். மற்றபடி புஜாரா, ரகானே, ஹனுமா விஹாரி நீடிக்கின்றனர். இங்கிலாந்து தொடரில் ஒரு போட்டியில் கூட வாய்ப்பு தரப்படாத கருண் நாயர் கழற்றி விடப்பட்டார். ஆசிய கிண்ணத் தொடரில் காயமடைந்த பாண்ட்யா இதில் இடம்பெறவில்லை.

**அணி விபரம்:-**

ஹோலி (அணித் தலைவர்), லோகேஷ் ராகுல், மயங்க் அகர்வால், பிரித்வி ஷா, புஜாரா, ரகானே, ஹனுமா விஹாரி, ரிஷாப் பண்ட், அஷ்வின், ஜடேஜா, குல்தீப், உமேஷ் யாதவ், மொஹமட் ஷமி, மொஹமட் சிராஜ், ஷர்துல் தாகூர்.

# ரீத்விகா வெற்றி



ஒரு வீடு 16 போட்டியாளர்கள், நல்லவர் யார் கெட்டவர் யார்? என்று வெளியான ப்ரமோவைத் தொடர்ந்து கடந்த ஜூன் 17ஆம் திகதி தொடங்கியது பிக் பாஸ் 2.

கமல்ஹாசன் தொகுத்து வழங்க, ஐஸ்வர்யா, ரித்விகா, ஜனனி, மும்தாஜ், சென்றாயன், பாலாஜி, நித்யா, பொன்னம்பலம், ஷாரிக், மகத், மமதி சாரி, வைஷ்ணவி, டேனி, ரம்யா என்.எஸ்.கே., அனந்த் வைத்தியநாதன், யாஷிகா ஆகிய 16 பேர் 'பிக் பாஸ்' வீட்டுக்குள் சென்றனர். பல்வேறு டாஸ்குகள் வழங்கப்பட்டன. தொடர்ந்து ஆரம்பமானது எவிக்ஷன் புராசஸ். ஒவ்வொரு வராக வெளியேறத் தொடங்கிய நிலையில், வைல்ட் கார்ட் எண்ட்ரி மூலம் அந்த வீட்டுக்குள் வந்தார் விஜயலட்சுமி. அடுத்தடுத்த எவிக்ஷனுக்குப் பிறகு, ஐஸ்வர்யா, ரித்விகா, ஜனனி, விஜயலட்சுமி ஆகிய நான்கு பேரும் இறுதிச் சுற்றுக்குத் தேர்வாகினர். தொடர்ந்து 29ஆம் திகதிய எபிசோடில், கிடைத்த வாக்குகளின் அடிப்படையில் குறைவாக வாங்கிய ஜனனி வெளியேற்றப்பட்டார்.

தொடர்ந்து நேற்று இரவு 12 மணிக்கு மேல் விஜயலட்சுமியும் அந்த வீட்டில் இருந்து வெளியேறினார். ஆக, ரித்விகா, ஐஸ்வர்யா இருவரும் இறுதியில் மோதினர். இறுதியில் ரித்விகா டைட்டில் வின்னராக அறிவிக்கப்பட்டார்.



# செரினா பாடும் பாடல்

மார்பக 'கான்சர்' விழிப்புணர்வு ஏற்படுத்த செரினா வில்லியம்ஸ் புதுமையான 'வீடியோ' வெளியிட்டுள்ளார்.

அமெரிக்க டென்னிஸ் வீராங்கனை செரினா வில்லியம்ஸ் (வயது-37), கிராண்ட்ஸ்லாம் ஒற்றையர் பிரிவில் 23 பட்டங்கள் வென்றவர். இவருக்கு 2017ல் பெண் குழந்தை பிறந்தது. தொடர்ந்தும் டென்னிஸ் போட்டிகளில் அசத்துகிறார்.

தற்போது, மார்பக 'கான்சர்' விழிப்புணர்வு ஏற்படுத்த அவுஸ்திரேலியாவை சேர்ந்த கிரிஸ்சி ஆம்ப்லெட் எழுதிய 'ஐ டச் மைசெல்ப்' என்ற பாடலை பாடியுள்ளார். இந்த 'வீடியோ'வில் மேலாடையின்றி தனது மார்பகத்தை கையால் மறைத்தவாறு தோன்றுகிறார்.

இதனை சமூகவலைதளமான 'இன்ஸ்டாகிராமில்' வெளியிட்ட செரினா,' நிற பேதமின்றி உலகின் அனைத்து பெண்களையும் 'கான்சர்' பாதிக்கிறது. வரும் முன் காப்பதே நல்லது. பெண்கள் தங்களது கைகளால் சுயபரிசோதனை செய்து கொள்ள வேண்டும். இதன் மூலம் உயிரை காக்க முடியும். மார்பக 'கேன்சரால்' மறைந்த கிரிஸ்சி ஆம்ப்லெட்டிற்கு மரியாதை செலுத்தும் விதமாக 'வீடியோ' வெளியிட்டுள்ளேன்.' என, குறிப்பிட்டுள்ளார்.

இந்த 'வீடியோ' இன்டர்நெட்டில் வைரலாகி வருகிறது. இதுவரை 17 லட்சம் பேர் பார்த்துள்ளனர்.

# போர்க்குற்றவாளிகளைக் காப்பாற்றும் அரசு எங்கள் மீது அக்கறை இன்றி செயற்படுகிறது

## காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் குற்றச்சாட்டு சர்வதேச சிறுவர் தினமான இன்று மாபெரும் பேரணி

(ஏறாவூர்)

சர்வதேச சிறுவர் தினமான இன்று (திங்கட்கிழமை) மட்டக்களப்பில் மாபெரும் பேரணியொன்றை நடத்துவதற்கு தீர்மானித்துள்ளதாக மட்டக்களப்பு மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கத்தின் தலைவி அ.அமலநாயகி தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

வடக்கு-கிழக்கில் உள்ள வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் இணைந்து இந்த பேரணியை நடத்தவுள்ளோம்.

இந்த நாட்டில் உள்ள போர்க்குற்றவாளிகளை காப்பாற்றிக்கொண்டும், எங்கள் தொடர்பில் அக்கறை செலுத்தா நிலையிலுமே இந்த அரசாங்கம் சென்று கொண்டிருக்கின்றது.

இந்நிலையில் சர்வதேசம் நேரடியான அழுத்தத்தினை கொடுத்து நேரடிக் கண்காணிப்பின் ஊடாக எங்களது பிரச்சினைக்கு தீர்வினை வழங்க வேண்டும் என வலியுறுத்தியே இந்த பேரணியை நடத்தவுள்ளோம்.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் குடும்பங்களிலுள்ள சிறுவர்கள் பல்வேறு ஏக்கங்களுடனும், கண்ணீருடனும் தமது உறவுகளை எதிர்பார்த்து காத்திருக்கின்றனர்.

அதன்காரணமாக சிறுவர் தினத்தில் ஏனைய சிறுவர்கள் சந்தோசமாக கொண்டாடிக் கொண்டிருக்கும் வேளையில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் பிள்ளைகள் அவர்களின் எதிர்பார்ப்புகள் தீர்க்கப்படாத நிலையில் கவலையுடனேயே வாழ்வினை கழிக்கின்றனர்.

அவர்களின் அபிலாசைகளை பூர்த்திசெய்யமுடியாத நிலையில் நாங்கள் இருந்து வருகின்றோம்.

அதன்காரணமாக இந்த சிறுவர் தினத்திலாவது சர்வதேச சமூகம் அவர்களின் உணர்வுகளைப் புரிந்துகொண்டு உறவுகள் கிடைக்க வழியேற்படுத்தவேண்டும். எங்களுக்கான நீதி கிடைக்க வேண்டும் என்பதற்காகவே இந்த பேரணியை நடத்துகின்றோம்' எனத் தெரிவித்துள்ளார். (இ-7)



நல்லூர் திருநெல்வேலி கிழக்கு ஜே/112 பொதுநோக்கு மண்டபம் மற்றும் அதன் சுற்றுப் புறச் சூழல் பூதவராயர் குளம் ஆகிய பகுதிகள் டெங்கு ஒழிப்பு செயற்றிட்டம் மற்றும் சுற்றுச் சூழலை அழகாக பேணும் செயற்றிட்டத்தின் கீழ் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை நல்லூர் மற்றும் திருநெல்வேலி CYCLE Lions கழகத்தின் அனுசரணையுடன் நல்லூர் பிரதேச சபை உறுப்பினர் தெய்வேந்திரம் கிரிதரன் தலைமையில் நேற்று நடைபெற்றது. இந்நிகழ்வில் நல்லூர் பொதுச் சுகாதார வைத்திய அதிகாரி சுகாதார உத்தியோகத்தர்கள், திருநெல்வேலி CYCLE Lions கழக உறுப்பினர்கள், கிராம உத்தியோகத்தர்கள், நொதேர்ன் விளையாட்டுக்கழக உறுப்பினர்கள், இளைஞர்கள், பொதுமக்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

## சிறுவர், முதியோர் தின விழா

(யாழ்ப்பாணம்)

யாழ். கோண்டாவில் சி.சி.த.க.பாடசாலையின் சிறுவர் முதியோர் தினவிழா இன்று திங்கட்கிழமை காலை 9 மணிக்கு பாடசாலை அதிபர் சி.நந்தகுமார் தலைமையில் இடம்பெறும். இதில் வடமாகாண சபை உறுப்பினர் ஐயூப் அஸ்மின் மற்றும் சிறப்பு விருந்தினராக யாழ்.கல்விவலய சேவைக்கால ஆலோசகர் மேரி திரேசா மரியநாயகம் கலந்து கொள்வார். (இ)

## மாகாணத் தேர்தலை நடத்த அச்சமில்லை

### அமைச்சர் ஹலீம் கூறுகிறார்



(கொழும்பு)

மாகாண சபைத் தேர்தலை நடத்தும் முறையில் உள்ள சிக்கல்கள் களையப்பட்டவுடன் தேர்தலை விரைந்து நடத்த வேண்டுமென்பதே ஐ.தே.கவின் நிலைப்பாடென அமைச்சர் ஏ.எச்.எம். ஹலீம் தெரிவித்துள்ளார்.

கண்டியில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சி தேர்தலை நடத்த அச்சப்படவில்லை. மாறாக தேர்தல் நடத்தும் முறையிலுள்ள சிக்கல்கள் களையப்பட்ட பின்னர் தேர்தலை விரைந்து நடத்தவேண்டுமென்பதே எமது நிலைப்பாடு என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)


## கண்ணீர்க் காணிக்கை



எமது பாடசாலை ஆசிரியை
**திருமதி.வ.ரகுநாதன்**
அவர்களின் அன்புத் தந்தையார்

**அமரர் திரு. பாலசிங்கம் லிங்கநாதன்**

அவர்களின் மறைவினால்
துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு
எமது ஆழ்ந்த அனுதாபங்களைத்
தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஆசிரியர் நலன்புரிக் கழகம்
(5846) யா/ சென்.ஜேம்ஸ் மகளிர் பாடசாலை


## இராசி பலன்

**மீனம்:** உறவினர்கள் வழியில் அன்புத் தொல்லைகள் ஏற்படலாம், பொன்னான நாள், தொலைபேசி வழியில் சுபதகவல்கள் வந்து சேரலாம், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம்.

**மேடம்:** சவால்களை சமாளிக்கும் நாள், உடன் பிறப்புக்கள் வழியில் உதவிகள் கிடைக்கும் நாள், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறும் வாய்ப்புண்டு.

**இடபம்:** சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, தொலைபேசி வழியில் சுப தகவல்கள் வந்து சேரலாம், வியாபார விருத்தியுண்டு, பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும்.

**மிதுனம்:** உறவினர்களின் அன்புத் தொல்லைகள் ஏற்படலாம், ஒரு வகையில் சிக்கனமாக இருந்தாலும் மற்றொரு வகையில் விரயங்கள் ஏற்படலாம், ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

**கும்பம்:** புதிய பொருட்களின் சேர்க்கையுண்டு, பூர்வீகச் சொத்துக்களால் ஆதாயமுண்டு, பிள்ளைகளின் நலனில் அக்கறை காட்டுவீர்கள், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**கடகம்:** தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகம் அடைவீர்கள், மாற்றங்களால் ஏற்றம் உருவாகலாம், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.

| | | | |
|---|---|---|---|
| | சந் | | |
| | இராசி பலன் | | ராகு |
| கேது, செவ் | கிரகநிலை | | |
| சனி | | குரு, சுக் | சூரி, புத |

கிரகநிலை
சந்திராஷ்டமம்
அனுசம், கேட்டை
மதியம் 1.03 மணிக்கு
மிதுன-சந்

**01.10.2018**
புரட்டாதி 15, திங்கட்கிழமை
சூரிய உதயம் காலை 6.03 மணிக்கு
சப்தமி பின்னிரவு 2.46 மணிவரை
மிருகசீரிடம் பின்னிரவு 12.23 மணிவரை
சுபநேரம் 12.02-1.32 மணிவரை
இராகுகாலம் 7.32-9.02 மணிவரை
சர்வதேச சிறுவர், முதியோர் தினம்
அமிர்த சித்தம்

வளவன்

**மகரம்:** சேமிப்பை அதிகரிக்க முற்படுவீர்கள், மறைமுகப் போட்டிகள் மாறும், பிரியமான சிலரின் சந்திப்பு இடம்பெறலாம், செய்தொழிலில் மேன்மையுண்டு, உயர்வும் கிடைக்கும்.

**சிம்மம்:** இல்லத்தில் இனிய சம்பவங்கள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு, தொழிலில் வருமானத்தை அதிகரிக்க முற்படுவீர்கள், போசன சுகமுண்டு, கௌரவமான நாள்.

**தனுசு:** நண்பர்களின் சந்திப்பு இடம்பெறலாம், நீண்ட நாளைய விருப்பமொன்று கைகூடும் வாய்ப்புண்டு, பயணங்களால் பலனுண்டு, வருமானம் திருப்திதரும் வகையில் அமையும்.

**விருச்சிகம்:** வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், அருகில் இருப்பவர்களை அனுசரித்துச் செல்வது நல்லது, எடுத்த காரியத்தை முடிப்பதில் கொஞ்சம் அலைச்சல்கள் ஏற்படலாம்.

**துலாம்:** ஆரோக்கியத்தில் தெளிவு ஏற்படலாம், உறவினர் வழியில் மனநிறைவான செய்தியொன்று வந்து சேரலாம், பயணங்களால் பலனுண்டு, உதவி கேட்டு சிலர் உங்களிடம் வரலாம்.

**கன்னி:** உறவினர்கள் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கலாம், புதிய பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள், போசன சுகமுண்டு.



கைதடி விக்னேஸ்வரா வித்தியாலய பரிசில் நாள் நிகழ்வுகள் அண்மையில் இடம்பெற்றது. பாடசாலை அதிபர் நா.கருணாகரன் தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக கிருபா சாரதி பயிற்சிப் பாடசாலையின் அதிபர் அ.கிருபாகரன் கலந்து சிறப்பித்தார். சிறப்பு விருந்தினராக தென்மராட்சி கல்வி வலய வரணி ஆசிரிய மத்திய நிலைய முகாமையாளர் வே.திருச்சபேசன் கலந்து கொண்டார். பிரதம விருந்தினராக கலந்து கொண்ட கிருபாகரன் மாணவர்களுக்கு பரிசில்களை வழங்கிக் கௌரவித்தார். (படங்கள்:- சுபேசன்)

## தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு மாணவர்களுக்கிடையே போட்டிகள்

வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை பொது நூலகங்கள் இணைந்து தேசிய மாதத்தினை முன்னிட்டு இவ்வருடமும் விசேடமாக பிரதேச சபைக்குட்பட்ட பாடசாலை மாணவர்களுக்கிடையே பின்வரும் போட்டிகளை நடத்துவதற்குதீர்மானிக்கப்பட்டுள்ளது.

போட்டிக்கான நிகழ்ச்சி நிரல்

இடம்: மானிப்பாய் பட்டினம்/ கிராமம்/ பண்டத்தரிப்பு பட்டினம்/ கிராம நூலகங்கள்

கட்டுரைப்போட்டி: திகதி 03.10.2018

கீழ்ப்பிரிவு தரம் 6-8 (150 சொற்கள்- 40 நிமிடம்)

நூலுடன் சிநேகம் கொள்வோம், ஒழுக்கமும் மாணவர் கல்வியும்- 9 மணி

மத்திய பிரிவு தரம் 9-11 (200 சொற்கள்- 40 நிமிடம்)

மாணவர் சமுதாயத்தில் இலத்திரனியல் ஊடகங்களின் பங்களிப்பு, சுற்றாடல் மாசடைய வித்திடுகின்ற நவீன யுகம் - 10 மணி

மேற்பிரிவு தரம் 12-13 (300 சொற்கள்- ஒரு மணித்தியாலம்)

தகவல் தொழில்நுட்ப யுகத்திலும் நிலைத்திருக்கும் புத்தகப் பயன்பாடு, நுண்கடனால் சமூகத்தில் ஏற்படும் பாதிப்புக்கள்- 11 மணி

சித்திரப்போட்டி: திகதி 04.10.2018

கீழ்ப்பிரிவுதரம் 6-9 போதையால் பாதை மாறும் சமூகம் -9 மணி, மேற்பிரிவு தரம் 10-13 போதையால் பாதை மாறும் சமூகம் -10 மணி

பேச்சுப்போட்டி: திகதி 05.10.2018

கீழ்ப்பிரிவு தரம் 3-5 (3 நிமிடம்)

கல்வியே எதிர்காலத்தில் கைகொடுக்கும், வீதி விபத்துக்களைத் தவிர்ப்போம் - 9 மணி

மத்திய பிரிவு தரம் 6-9 (5 நிமிடம்)

சுற்றுச்சூழல் மாசடைவும் பிளாஸ்ரிக், பொலித்தீன் பாவனையும், வளமான வாழ்வுக்கு வாசிப்போம்- 10 மணி

மேற்பிரிவு தரம் 10-13 (7 நிமிடம்)

அறவொளி தருவன நூல்களே, புகைத்தல் போதைப் பொருள் பாவனையற்ற சமுதாயம் - 11 மணி

பட்டிமன்றம்

மேற்பிரிவு தரம் 10-13 திகதி 10.10.2018 என பிரதேச சபைத் தவிசாளர் அ.ஜெபநேசன் அறிவித்துள்ளார். (இ








குரும்பசிட்டி சன்மார்க்க சபை இணைவுடன் சுவிட்சர்லாந்து பூரண ஆச்சிரமத்தின் நூல்அறிமுகமும் ஆன்மீக நிகழ்வும் குரும்பசிட்டி கலைஞானி கலாசார மண்டபத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை குரும்பசிட்டி சன்மார்க்கசபை தலைவர் சட்டத்தரணி சு.சிவபாதம் தலைமையில் இடம்பெற்றது.

படங்கள்: சக்தி

## கசிப்புடன் பெண் கைது



(கரணவாய்)

நெல்லியடி புலனாய்வுப் பிரிவுக்கு கிடைத்த தகவலின் படி நேற்றுக்காலை நெல்லியடிப் பொலிஸார் ஆண்டிப்பட்டியைச் சேர்ந்த பெண்ணொருவரை கைது செய்தனர். 15 ஆயிரம் மில்லி லீற்றர் கசிப்பு 40 லீற்றர் கோடாவோடும் கசிப்பு உற்பத்தி உபகரணங்களோடும் கைது செய்யப்பட்ட பெண் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டார். (இ-60)

## புத்தகலட்டி ஸ்ரீ விஸ்ணு வித்தியாலயத்தின் அறுபதாவது ஆண்டு நிறைவு விழா இன்று

யாழ்.புத்தகலட்டி ஸ்ரீ விஸ்ணு வித்தியாலயத்தின் அறுபதாவது ஆண்டு நிறைவு விழா இன்று திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு அதிபர் க.செந்தில் வடிவேலு தலைமையில் இடம்பெறும்.

இதில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் கலந்து கொள்வார்.சிறப்பு விருந்தினர்களாக வடக்கு மாகாண சபை உறுப்பினர் அ.பரஞ்சோதி, யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் இ.ரட்ணம், கோப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளர் நா. சிவநேசன் ஆகியோர் கலந்து கொள்வர்.

மலர் மதிப்பீட்டுரையை கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக்கலாசாலை பிரதி அதிபர் செந்தமிழ்சொல்லருவிச.லலீசன் வழங்குவார். (இ-7)

## பாராட்டும் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

சர்வதேச முதியோர் தினத்தை முன்னிட்டு இன்று திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு சிறுவர் மற்றும் முதியோரை வாழ்த்திப் பாராட்டும் நிகழ்வு வழித்தூண்டல் றோ.க.த.க பாடசாலையில் அதிபர் கணேசராசா தலைமையில் இடம்பெறும். இதில் பிரதம விருந்தினராக தெல்லிப்பழை கோட்டக் கல்விப் பணிப்பாளர் மா.ஆனந்தகுமார் மற்றும் சிறப்பு விருந்தினராக வழித்தூண்டல் பங்குத்தந்தை அருட்பணி பிடினேசன் மற்றும் கௌரவ விருந்தினராக இளவாலைவடமேற்கு அபிவிருத்தி உத்தியோகத்தர் அன்ரனி சதீஸ்வரி ஆகியோர் கலந்து கொள்வர் .(இ

## மகாத்மா காந்தியின்
## 150 ஆவது பிறந்தநாள் ஆரம்ப விழா நாளை யாழில்

(யாழ்ப்பாணம்)


யாழ். இந்தியத் துணைத் தூதரகமும் வடமாகாண கல்விப்பண்பாட்டலுவல்கள்விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சும் அகில இலங்கை காந்தி சேவா சங்கமும் யாழ். சென். ஜோன்ஸ் கல்லூரியும் இணைந்து வழங்கும் மகாத்மா காந்தியின் 150 ஆவது பிறந்த நாள் ஆரம்ப விழா நாளை செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணியளவில் யாழ். சென். ஜோன்ஸ் கல்லூரியில் கல்வி அமைச்சர் கலாநிதி க.சர்வேஸ்வரன் தலைமையில் இடம்பெறும். (இ

## மகாத்மா காந்தியின் பிறந்ததினத்தை முன்னிட்டு வடக்கில் நாளை நான்கு இடங்களில் அஞ்சலி

(யாழ்ப்பாணம்)

மகாத்மாகாந்தியடிகள் 149 ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு அகில இலங்கை காந்தி சேவா சங்கம் மற்றும் யாழ். இந்தியத்துணைத்தூதரகத்தின் ஏற்பாட்டில் நாளை 2 ஆம் திகதிசெவ்வாய்க்கிழமைகாலை வடக்கு மாகாணத்திலுள்ள நான்கு இடங்களில் காந்திக்கு அஞ்சலி செலுத்தப்படவுள்ளது.

காந்தியின் திருவுருவச் சிலைகள் அமைந்துள்ள யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதி, அரியாலை காந்தி சனசமூக நிலையம், பருத்தித்துறை நகரம், முல்லைத்தீவு ஆகிய இடங்களில் அடிகளாரின் சிலைக்கு மலர் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தும் நிகழ்வு இடம்பெறும்.(இ



நாவற்குழியில் அமைந்துள்ள அப்பன் கிராமத்தில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினரால் கற்றல் உபகரணங்கள் கடந்த 28 ஆம் திகதி வழங்கப்பட்டன. (படங்கள்:- மகாலிங்கம்)

# முதுமைக்காலமே வாழ்க்கையின் தத்துவப் பருவமாகும்-ஜனாதிபதி

(கொழும்பு)

அறிவும்அனுபவமும்அவற்றினால்பக்குவமடைந்தவாழ்க்கை பற்றிய புரிந்துணர்வுடனும் உலகினை நோக்கக்கூடிய ஆற்றல் முதுமைப் பருவத்தின் வரப்பிரசாதமாகும். கீழைத்தேய தத்துவங்களுக்கு அமைவாக முதுமைக் காலமே வாழ்க்கையின் தத்துவப் பருவமாகும்.

அதேபோன்று உலகில் தோன்றிய பல தத்துவவியலாளர்களும் விஞ்ஞானிகளும் தமது தலைசிறந்த ஆற்றல்களை இப்பருவத்திலேயே வெளிப்படுத்தியுள்ளனர் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

மேலும் மனிதர்களாக இன்று நாம் அனுபவிக்கும் பல உரிமைகளை எமக்காக வென்றெடுத்தவர்களும் இன்றைய எமது சமூகத்திலுள்ள சிரேஷ்ட பிரஜைகளே என்பதை நாம் கௌரவத்துடன் நினைவில் கொள்ள வேண்டும்.

அத்தகைய அபிமானமிக்க பிரஜைகளின் சமூகத்திற்கு உரியவாறு மதிப்பளிப்பதற்காக வருடாந்தம் கொண்டாடப்படும் சர்வதேச முதியோர் தினத்தின் இவ்வருட தொனிப் பொருளாக மானிட உரிமைகளை வென்றெடுத்த சிரேஷ்ட பிரஜைகளை அபிமானத்துடன் கௌரவிப்போம் என தேர்ந்தெடுத்துள்ளமைக்கு கைவிடப்பட்ட அந்த கருத்தாடலை மீண்டும் உருவாக்க வேண்டும் என்பதே காரணமாகுமென நான் நம்புகிறேன்.

உலக சனத்தொகையில் அதிகரித்து வரும் சிரேஷ்ட பிரஜைகளின் விகிதத்தினை மானிட சமூகத்தின் மேம்பாட்டிற்காக உபயோகப்படுத்திக் கொள்ளத்தக்க புதிய வழிமுறைகளைக் கண்டறியவும் சிரேஷ்ட பிரஜைகளின் அனுபவங்களை பயனுள்ள வகையில் உற்பத்தி செயற்பாடுகளில் உள்வாங்குவதற்குமான வாய்ப்புக்களைக் கண்டறியவும் ஏதுவாக அமையும் இந்த கருத்துக்களம், இளம் சமுதாயத்திற்கு சிரேஷ்ட பிரஜைகளுக்கும் இடையில் ஒரு ஆக்கபூர்வமான உறவினைக் கட்டியெழுப்ப உதவும் என்பது எனது நம்பிக்கையாகும் என அவர் மேலும் தெரிவித்தார்.(இ-7)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



அதிபர் திரு. குருசாமி விமலன்
(B.Ed,M.Ed, SLPS-I)

Congratulations

எமது பாடசாலையின் அதிபர் கடந்த (05.12.2015) ஆம் திகதி தொடக்கம் இலங்கை அதிபர் சேவை தரம் I இற்கு பதவி உயர்வு பெற்றுள்ளார். அவர் மேலும் பல உயர்வுகளைப் பெற்று ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாளின் அருள் பெற்று சீரும் சிறப்புடனும் வாழ பாராட்டி வாழ்த்துகின்றோம்.

(5922)

ஆசிரியர் நலன்புரிக் கழகம்,யா/நடேஸ்வரக் கல்லூரி, காங்கேசன்துறை.



## தவறிவிட்டது

ஆறுமுகம் ஆனந்தராஜா ஆகிய எனது மணிபேர்சுடன் தேசிய அடையாள அட்டை இல.422234527V மற்றும் முக்கிய ஆவணங்கள்கடந்த 27.09.2018 அன்று கோவில் வீதி நல்லூரிலிருந்து ஆஸ்பத்திரிக்கிடையில் தவறிவிட்டது. எனவே கண்டெடுத்தவர்கள் தயவு செய்து தொடர்பு கொண்டு உதவி செய்யவும். தொடர்புகளுக்கு:- (5862)

**021 222 2706**


## உலக ஆசிரியர் தின விழா

(யாழ்ப்பாணம்)

யாழ். மூளாய் சைவப் பிரகாச வித்தியாலய உலக ஆசி ரியர் தின விழா இன்று திங்கட்கிழமை காலை 8 மணி க்கு ரதிதேவி மண்டபத்தில் பழைய மாணவர் சங்க உப தலைவர் க.பாலச்சந்திரன் தலைமையில் இடம் பெறும்.

இதில் பிரதம விருந்தின ராக ஓய்வுநிலை கோட்டக் கல்விப் பணிப்பாளர் ஸ்ரீ விக்னேஸ்வரன் மற்றும் சிறப்பு விருந்தினர்களாக மூளாய் சமாதான நீதவான் ஆசுகவி கலாபூஷணம் செ.சிவசுப்பிர மணியம், ஓய்வுநிலை ஆசிரியர்சமாதான நீதவான் க.மனோகர் ஆகியோர் கலந்து கொள்வர். (இ



உதவும் உறவுகள் ஊடாக மாபெரும் இலவச புற்றுநோய் விழிப்புணர்வு மற்றும் கண்டறிதல் முகாம் விழிப்புணர்வு இருந்தால் புற்றுநோயில் இருந்து நலம் பெறலாம். எம் மக்களின் நல்வாழ்வு கருதி வடக்கு- கிழக்கு இலங்கை புற்றுநோய் உதவி அமைப்பு மற்றும் யாழ்.பல்கலைக்கழக மருத்துவ பீடம், கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலை ஆகியவற்றுடன் இணைந்து நேற்றுக் காலை 9 மணியளவில் கிளி/பரந்தன் இந்து மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற போது... (படங்கள்: குமார்)

### அரசியல் கைதிகளுக்கு ஆதரவு தெரிவித்து
## யாழில் கிராமங்கள்தோறும் கவனயீர்ப்பு போராட்டங்கள்

(யாழ்ப்பாணம்)

அநுராதபுரம் சிறைச் சாலையில் 17 நாட்களைத் தாண்டி உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுவரும் அரசியல் கைதிகள் கடந்த மூன்று நாட்களாக மருத்துவ உதவிகளையும் மறுத்து தாங்கள் உயிர்களையும், உடல் ஆரோக்கியத்தையும் மிகவும் அபாயக் கட்டத்திற்குக் கொண்டு சென்றுள்ள நிலையில்,

அவர்களுக்கு ஆதரவாக யாழ். மாவட்டத்தின் கிராமங்கள் தோறும் கவனயீர்ப்புப் போராட்டங்கள் இடம்பெறவுள்ளன

இதில் இன்று மாலை 4 மணியளவில் புத்தூர் மேற்கு கலைமதி மக்கள் மண்டப த்திற்கு முன்பாக இக் கவனயீர்ப்புப் போராட்டம் இடம்பெறும். (இ-7)


## சின்மயா மிஷன்



யாழ்ப்பாணம் வழங்கும்

### ஆன்மீக அருளுரை
(தமிழில்)

**இந்தியாவில் இருந்து வருகை தரும் சுவாமி கிருஷ்ணாத்மானந்தா** அவர்கள்

04.10.2018
அறிவியலும் சாஸ்திரமும்
05.10.2018
நிகழ்காலத்தில் வாழும் கலை
06.10.2018
வெற்றியின் இரகசியம்

காலம்:- 04.10.2018-06.10.2018
நேரம்:- மாலை 6.00 -7.30
இடம்:- நல்லூர் துர்க்கா மணி மண்டபம்

அனைவரும் வருக! அனுமதி இலவசம்!

021 222 3447
077 857 3447

சின்மயா மிஷன்
இல. 09, செட்டித்தெரு
ஒழுங்கை, நல்லூர். (இ)



## வர்ண இரவு விருது- 2018
## விளையாட்டுத்திணைக்களம்
## வடமாகாணம்

வடமாகாண விளையாட்டுத் திணைக்களத்தினால் எதிர்வரும் டிசெம்பர் மாதம் நடாத்த தீர்மானிக்கப்பட்டுள்ள வர்ண இரவு விருது வழங்கல் நிகழ்வுக்காக பொருத்தமான விண்ணப்பதாரி களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பதாரி வடமாகாணத்தை நிரந்தர வதிவிடமாகக் கொண்ட வராகவும் அவர் பங்குபற்றிய விளையாட்டு நடப்பாண்டில் நடைபெற்ற தாகவும் இருத்தல் வேண்டும்.

வர்ண இரவு விருது வழங்கலுக்கான விண்ணப்பப்படிவம் மற்றும் யாப்பு என்பனவற்றினை மாகாண கல்வித்திணைக்களத்திலோ அல்லது மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தரிடமோ அல்லது www.edumin.np.gov.lk எனும் இணையத்தள முகவரியூடாக பதிவிறக்கம் செய்வதன் மூலமாகவோ பெற்றுக் கொள்ள முடியும் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை பணிப்பாளர், விளையாட்டுத் திணைக்களம், வடமாகாணம், 25, செம்மணிவீதி, நாயன் மார்க்கட்டு, நல்லூர் எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

முழுமையாக பூர்த்தி செய்யப்படாத, புகைப்படம் இணைக்கப்பட்டிராத, வங்கிப்புத்தக முன்பக்கப்பிரதி இணைக்கப்படாத மற்றும் உரிய காலப்பகு திக்குள் அனுப்பி வைக்கப் படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரிகளின் விபரங்களை 30.11.2018 ஆம் திகதி தொடக்கம் www.edumin.np.gov.lk எனும் இணைய முகவரியில் பார்வையிடலாம்.

**விண்ணப்ப முடிவுத்திகதி:- 31.10.2018**

பணிப்பாளர்
விளையாட்டுத் திணைக்களம்
வடமாகாணம்.



## CERTIFICATE IN PHARMACY

மருந்தகங்களில் பணிபுரியும் ஊழியர்களுக்கும் (Pharmacy Staff) மருத்துவ பிரதிநிதிகளுக்குமான (Medical Representatives) ஆறு மாத கால பயிற்சி நெறி **October 2018** தொடக்கம் **March 2019** வரை யாழ்ப்பாணக் கல்லூரி, (வெளிவாரி பட்டப்படிப்பு) 464, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணத்தில் நடைபெற உள்ளது. இதற்கான குறைந்தபட்ச தகைமை G.C.E. O/L இல் ஆங்கிலம் உட்பட ஆறுபாடங்களில் சித்தி. வயது எல்லை இல்லை. மருந்தகங்களில் பணிபுரியும் ஊழியர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். மாதாந்த பயிற்சி கட்டணம் – ரூபா **2000/=**

இந்த பயிற்சி நெறியின் முதலாவது **Batch** புதன்கிழமை 03.10.2018 ஆம் திகதி காலை 8.30 மணிக்கும் இரண்டாவது **Batch** ஞாயிற்றுக்கிழமை 07.10.2018 ஆம் திகதி பகல் 12.30 மணிக்கும் ஆரம்பமாகவுள்ளது.

இவ் வருடத்திற்கான மருந்தியலாளர் வெளிவாரி பரீட்சை (EXTERNAL PHARMACIST EXAM) 17.10.2018 நடைபெறும். 2019/2020 ஆம் ஆண்டு பரீட்சைக்கான புதிய பயிற்சி வகுப்புகள் இவ் வருடம் மார்கழி மாதத்திலிருந்து ஆரம்பமாக உள்ளது. (5838)

தகவல்களுக்கு:-நேரு Sir,
மருந்தியலாளர் கல்வி இணைப்பாளர்
T.P:- 077 625 6292

# வடமாகாண பண்பாட்டு பெருவிழா முல்லைத்தீவில்






வடமாகாண பண்பாட்டலுவலல்கள் திணைக்களம் நடத்தும் வடமாகாண பண்பாட்டு பெருவிழா இம்முறை முல்லைத்தீவு மாவட்டத்தில் இடம்பெறுறுது. இந்த நிகழ்வு நேற்று முன்தினமும் நேற்றும் மு/ ஒட்டுசுட்டான் கற்சிலைமடு பண்டாரவன்னியன் மகா வித்தியாலயத்தில் இடம்பெற்றது. இந்த நிகழ்வின் இறுதி நாளான நேற்றைய நிகழ்வில் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரனின் பங்குபற்றுதலுடன் ஆரம்பமாகி ஒட்டுசுட்டான் தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தில் விசேட வழிபாடுகள் இடம்பெற்று தமிழர்களின் பாரம்பரிய கலை அம்சங்கள் அனைத்துடனும் கலாசார பேரணி கற்சிலைமடு பண்டாரவன்னியன் மகா வித்தியாலயத்தை வந்தடைந்தது. அங்கு கலை நிகழ்வுகள் இடம்பெற்றன.

(படங்கள:- பனிக்கன்குளம் செய்தியாளர்)

## போதைவஸ்து தரை இறக்கப்படும் களமாக

## வடமாகாணத்தில் வடமராட்சி கிழக்கு மாறியுள்ளது

### விடுதலைப்புலிகளின் காலத்தில் புனித பிரதேசம் என்கிறார் யாழ்.மாவட்ட மீனவர் ஒத்துழைப்பு இயக்கத் தலைவர்

(குருமன்காடு)

வடக்கு மாகாணத்தில் வடமராட்சி கிழக்கு பகுதியை போதைவஸ்து தரையிறக்கப்படும் இடமாக இருக்கிறது. இதனை அரசாங்கம் கட்டுப்படுத்த தவறியுள்ளது என யாழ்.மாவட்ட மீனவர் ஒத்துழைப்பு இயக்கத்தின் தலைவர் இ.முரளிதரன் தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கத்தின் ஊடகச்சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்.மாவட்டத்தின் வடமராட்சி கிழக்குப் பகுதியில் தான் சட்டவிரோத மீன்பிடித் தொழில் காணப்படுகின்றது. அங்கு சுருக்கு வலைகள் பயன்படுத்தப்படுவதுடன், அட்டை பிடிக்கும் நடவடிக்கையும் இடம்பெறுகின்றது. மக்கள் இது தொடர்பில் போராடி தற்போது, பிரதேச செயலாளர் ஊடாக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

அத்துடன் வடமாகாணத்தில் வடமராட்சி கிழக்கு பகுதியே போதைவஸ்து களமாக இருக்கிறது. வடமராட்சி கிழக்கு பகுதியில் போதைவஸ்து இறக்கப்பட்டு அவை தென்பகுதிக்கு கொண்டு செல்லப்படுகிறது. முன்னர் மன்னார் பகுதியில் இருந்து போதைவஸ்து கடத்தப்பட்டது. தற்போது அது சுழன்று வடமராட்சி கிழக்கு பகுதிக்கு வந்துள்ளது. இதை அரசாங்கம் தடை செய்யாமல் இருப்பது எங்களுக்கு சந்தேகமான பார்வையை உருவாக்குகின்றது.

இலங்கையில் சட்டத்தின் படி போதைவஸ்து தடை செய்யப்பட்டுள்ளது. ஆனால் அதை அவர்கள் கட்டுப்படுத்தாமல் இருக்கிறார்கள். இதை சரியான முறையில் கட்டுப்படுத்தி போதைவஸ்து இறங்காமல் தடுக்க வேண்டியது அரசாங்கத்தின் கடமையாக இருக்கிறது.

ஆனால் போதைவஸ்து வருகை நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டு இருக்கிறது. அண்மையில் கூட கடலில் போதைப்பொருள் பிடிக்கப்பட்டதாக சொல்கிறார்கள். அதற்கு என்ன நடந்தது என்று தெரியாது. அதனுடன் தொடர்புடையவர்கள் வெளியில் வந்து நிற்கிறார்கள். சமூகம் சீர்கெட்டு செல்கிறது. சிறுவர்கள் கூட கஞ்சாவுடன் திரிகிறார்கள்.

விடுதலைப் புலிகள் காலத்தில் வடமராட்சி பிரதேசம் ஒரு புனித பிரதேசமாக இருந்தது.

ஆனால் இன்று இவ்வாறு இருப்பதைப் பார்க்கும் போது அரசாங்கம் ஊக்குவிக்கிறதா என்ற கேள்வி எழுகிறது.

இது தொடர்பில் நாம் பல தடவை சம்பந்தப்பட்ட தரப்புக்களுக்கு தெரிவித்துள்ளோம்.

அவர்கள் கவனம் செலுத்த வேண்டும் என் பதே எமது கோரிக்கை எனத் தெரிவித்தார். (2-250)




## சர்வதேச முதியோர்தின விழாவும் சங்கக் கட்டடத் திறப்பு விழாவும்

(பூநகரி )

பூநகரி பிரதேச செயலகப் பிரிவின் சர்வதேச முதியோர் தினவிழா இன்று திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு முழங்காவில் முதியோர் பகல் நிலையத்தில் உதவிப் பிரதேச செயலர் யோ.கிரிஜா தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்விற்கு பிரதம விருந்தினராக பூநகரி பிரதேச சபையின் தவிசாளர் அ.ஐயம்பிள்ளை கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக கிளிநொச்சி மாவட்ட சமூக சேவைகள் அலுவலர் வே.தபேந்திரன். தலைமைப்பீட சமூக சேவைகள் அலுவலர் நா.ராஜமனோகரன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

இந்த விழாவில் வடக்கு மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தால் முழங்காவில் முதியோர் சங்கத்திற்கு 10 இலட்சம் ரூபா செலவில் கட்டிக் கொடுக்கப்பட்ட முதியோர் சங்கக் கட்டடம் திறந்து வைக்கப்படவுள்ளது. (2)

## கதிர்காமம் பயணித்த பேருந்தில் கஞ்சாவுடன் இளைஞன் கைது

(பனிக்கன்குளம்)

யாழ்ப்பாணத்திலிருந்து கதிர்காமம் நோக்கி பயணித்த பேருந்தில் கேரளாக் கஞ்சாவை கடத்தி சென்றவரை வவுனியா பொலிஸார் நேற்று முன்தினம் இரவு 9.30 மணியளவில் கைது செய்துள்ளனர்.

இச்சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது.

பொலிஸாருக்கு கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் யாழ்ப்பாணத்திலிருந்து - கதிர்காமம் நோக்கி பயணித்த பேருந்தை நொச்சிமோட்டை பகுதியில் வழிமறித்து சோதனை மேற்கொண்ட போது அப் பேருந்தில் பயணித்த மொனராகலையை சேர்ந்த விஜித பண்டார (வயது 34) என்ற நபரே 2 கிலோ கிராம் கேரளக்கஞ்சாவுடன் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

மேலதிக விசாரணைகளின் பின்னர் வவுனியா மாவட்ட நீதவான் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (2-281)

## தியாகதீபம் திலீபனுக்கு புதுக்குடியிருப்பில் அஞ்சலி




முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பிரதேச வணிகர் கழகத்தின் ஏற்பாட்டில் தியாகதீபம் திலீபனின் 31 ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு புதுக்குடியிருப்பு சந்தி பகுதியில் அமைக்கப்பட்ட நினைவுப் பந்தலில் திலீபனின் திருவுருவப்படம்வைத்து பொதுச்சுடர் ஏற்றப்பட்டு மாலை அணிவித்து வணக்கம் செலுத்தப்பட்டது.

புதுக்குடியிருப்பு நகர்ப்பகுதியில் உள்ள வணிக நிலையங்கள் அனைத்தும் மூடப்பட்டு வணிகர்கள் மற்றும் முச்சக்கரவண்டி உரிமையாளர்கள், சந்தை பகுதி வணிகர்கள், பொதுமக்கள் எனப் பலர் கலந்துகொண்டு திலீபனுக்கு வணக்கம் செலுத்தி இருந்தனர்.

புதுக்குடியிருப்பு வணிகர் கழக செயலாளர் கோல்டைன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பொதுச்சுடரினை புதுக்குடியிருப்பு வணிகர் கழக தலைவர் செல்வச்சந்திரன் ஏற்றி மலர் மாலையினை அணிவித்தார். (2-281)

## மின்சாரம் தாக்கியதில் இராணுவ வீரர் பலி

(முல்லைத்தீவு)

வவுனியாவில் இராணுவ முகாம் ஒன்றில் நேற்று முன்தினம் இரவு 9.30 மணியளவில் மின்சாரம் தாக்கியதில் இராணுவ வீரர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவரு வதாவது. வவுனியா ஈரட்டை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட வூவய எனனும் இடத்திலுள்ள இராணுவ முகாமில் மின்சாரம் தடைப்பட்டது. அதனை சீர்செய்வ தற்காக சென்ற போது மின்சார கசிவு ஏற்பட்டு மின்சாரம் தாக்கியதில் மயக்க நிலையில் இருந்துள்ளார்.

பின்னர் அம்புலன்ஸ்வண்டி மூலம் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட போதும் முன்னரே இறந்து விட்டதாக வைத்தியசாலையில் தெரிவிக்கப்பட்டது.

குறித்த சம்பவத்தில் கண்டி வத்தேகம பகுதியை சேர்ந்த சந்தறூவன் (வயது 22) என்ற இராணுவ வீரரே உயிரிழந்தவராவார்.

சடலம் பிரேத பரிசோதனைக்காக வவுனியா மாவட்ட வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதுடன் மேலதிக விசாரணைகளை ஈரட்டை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (2-281)

## முத்தமிழ் விழா இன்று

(கிளிநொச்சி)

கிளி/சிவநகர் அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் தமிழுக்கும் அமுதென்தென்று பேர் அந்த தமிழ் இன்ப தமிழ் எங்கள் உயிருக்கு நேர் எனும் தொனிப் பொருளில் முத்தமிழ் விழா நாளை செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு மேற்படி பாடசாலை பிரதான மண்டபத்தில் முத்தமிழ் மன்றத் தலைவர் க.லதாங்கி தலைமையில் நடைபெறும். பிரதம விருந்தினராக வடக்கு மாகாண முன்னாள் கல்வியமைச்சர் த.குருகுலராஜா, சிறப்பு விருந்தினராக உதவிக்கல்விப் பணிப்பாள்(தமிழ்) சே.செல்வகௌரி ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர். (2)

## ஒட்டுசுட்டான் ம.வித்தியில் சித்திரப் போட்டி




தேசிய சேமிப்பு வங்கி மற்றும் முல்லைத்தீவு பாதுகாப்பு படை தலைமையகமும் இணைந்து ஏற்பாடு செய்த மாபெரும் சித்திர போட்டி மு/ஒட்டுசுட்டான் மகாவித்தியாலயத்தில் நடைபெற்றது.

நேற்று காலை 9 மணிக்கு போட்டிகள் ஆரம்பமாகி, வெற்றிபெற்ற மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கப்பட்டன. போட்டியில் பங்கேற்ற மாணவர்களுக்கு தேசிய சேமிப்பு வங்கியினால் பாடசாலை உபகரணங்களும் வழங்கி வைக்கப்பட்டது. (2-281)

# மன்னாருக்கு ஜனாதிபதி 5 ஆம் திகதி விஜயம்



(மன்னார்)

மன்னார் நகருக்கு எதிர்வரும் 5ஆம் திகதி ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன விஜயமொன்றை மேற்கொள்ளவுள்ளார்.

தேசிய சுற்றாடல் தினத்தையொட்டி எதிர்வரும் 5 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மன்னார் மாவட்டத்தின் சுற்றுச்சூழல் பாதிப்புக்கள் மற்றும் சவால்கள் என்ற தொனிப்பொருளில் இடம் பெறவுள்ள நிகழ்வில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பிரதம விருந்தினராக கலந்து கொள்ளவுள்ளார்.

குறித்த நிகழ்வு தொடர்பான முன்னேற்பாடுகள் குறித்த ஆலோசனைக் கூட்டம், கடந்த 28 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மன்னார் மாவட்டச் செயலகத்தில் இடம் பெற்றது.

மன்னார் அரசாங்க அதிபர் சி.ஏ.மோகன்ராஸ் தலைமையில் இடம்பெற்ற ஆலோசனைக் கூட்டத்தில், அமைச்சர் றிசாத் பதியுதீன் கலந்து கொண்டிருந்தார்.

இதில் சுற்றாடல் அதிகார சபை உயரதிகாரிகள், ஜனாதிபதி செயலக உயரதிகாரிகள், சுற்றாடல் அமைச்சின் உயரதிகாரிகள், பிரதேச செயலாளர்கள் உட்பட பல்வேறு திணைக்களங்களின் உயரதிகாரிகளும் கலந்துகொண்டிருந்தனர்.

அன்றைய தினம் மன்னார் மாவட்டத்தில் இடம் பெறவுள்ள மர நடுகை நிகழ்வு குறித்தும் குறித்த கூட்டத்தில் கலந்தாலோசிக்கப்பட்டதுடன், சுற்றாடல் விழிப்பூட்டல் தொடர்பான பதாகைகள், சுவரொட்டிகள் போன்றவற்றை காட்சிக்கு வைத்தல் ஆகியன தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது.

-மன்னார் பொது விளையாட்டு மைதானத்தில் குறித்த நிகழ்வு இடம் பெறுவதோடு,மன்னார் மதவாச்சி பிரதான வீதி, தம்பனைக் குளம் 53 கட்டை பகுதியில் மரம் நாட்டும் நிகழ்வும் இடம் பெறவுள்ளது.

இதேவேளை மன்னார் மாவட்டத்தில் இந்த ஆண்டின் இறுதி மூன்று மாத காலத்திற்குள் 3 தேசிய நிகழ்வுகளை நடத்த ஜனாதிபதி செயலகத்தினால் ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதன் அடிப்படையில் மூன்று தேசிய நிகழ்வுகளிலும் முதல் நிகழ்வாக எதிர்வரும் 5 ஆம் திகதி வெள்ளிக்கிழமை தேசிய சுற்றாடல் தினம் மன்னார் நகர சபை மைதானத்தில் இடம் பெறவுள்ளது.

அதே நேரம் மரம் நட்டல் நிகழ்வுகள் மன்னார் மதவாச்சி பிரதான வீதி தம்பனைக்குளம் 53 கட்டை பகுதியில் இடம் பெறவுள்ளது.

மேலும் எதிர்வரும் நவம்பர் 20ஆம் திகதி தேசிய மீலாத் விழா இடம் பெறவுள்ளது. குறித்த மீலாத் விழா மன்னார் மாவட்டத்தின் முசலிப் பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட பகுதியில் இடம்பெறவுள்ளது.

மேலும் தேசிய நத்தார் தினம் டிசெம்பர் 22ஆம் திகதி மன்னாரில் இடம் பெறவுள்ளது.

குறித்த தேசிய நிகழ்வுகள் அனைத்திற்குமான ஏற்பாடுகளை மாவட்டச் செயலகத்துடன் இணைந்து ஜனாதிபதி செயலகம் முன்னெடுத்துள்ளதாகவும் தெரிய வருகின்றது.

ஜனாதிபதி தேர்தலுக்கு பின்னர் மன்னார் மாவட்டத்தின் பொது மக்கள் முன்னிலையில் மன்னார் நகர் பகுதியில் பொது நிகழ்வில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கலந்து கொள்வது இதுவே முதல் முறை என்பது குறிப்பிடத்தக்கது. (2)

## பிரதான வீதிகள் செப்பனிடல்; கோரிக்கைகள் எழுத்து மூலம் முன்வைப்பு

### துணுக்காய் பிரதேச செயலாளர் தெரிவிப்பு



(கண்டாவளை)

முல்லைத்தீவு மாவட்டத்தின் துணுக்காய் பிரதேசத்தின் கோட்டைகட்டியகுளம், அம்பலப்பெருமாள் ஆகிய கிராமங்களிற்கான பிரதான வீதி செப்பனிடுவது தொடர்பாக சம்பந்தப்பட்ட திணைக்களங்களுக்கு தொடர்ந்து கோரிக்கைகள் முன்வைக்கப்படுவதாக துணுக்காய் பிரதேச செயலாளர் கே.பிரபாகர மூர்த்தி தெரிவித்துள்ளார்.

துணுக்காய் பிரதேசத்திற்குட்பட்ட உயிலங்குளம், தென்னியன்குளம்,கோட்டைகட்டியகுளம், அம்பலப்பெருமாள்குளம் போன்ற கிராமங்களிற்கான பிரதான வீதி புனரமைக்கப்படாமலும் போக்குவரத்து வசதிகள் இன்றியும் குறித்த கிராமங்களில் வாழ்கின்ற மக்கள் அன்றாடம் சொல்லொணாத் துன்பங்களை அனுபவித்து வீருகின்றனர்.

குறித்த வீதிகளைப் புனரமைத்துத் தருமாறு தொடர்ச்சியாக கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டுள்ளபோதும், இதுவரை அந்தக் கோரிக்கைகள் நிவர்த்தி செய்யப்படவில்லை என பாதிக்கப்பட்ட அக்கிராம மக்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை பருவமழை பெய்ய ஆரம்பித்தால் பிள்ளைகள் கூட பாடசாலைக்குச் செல்லமுடியாதஒரு நிலை ஏற்படுமெனவும் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் துணுக்காய் பிரதேச செயலாளர் தொடர்பு கொண்டு வினவிய போது, குறித்த வீதி தொடர்பான கோரிக்கைகள் தொடர்ந்து முன்வைக்கப்பட்டுள்ளன.

இதுதொடர்பில் சம்பந்தப்பட்ட திணைக்களங்களுக்கு எங்களது கோரிக்கைகளை எழுத்துமூலம் முன் வைத்திருக்கின்றோம். நிதி கிடைக்கும் பட்சத்தில் அவற்றை விரைவாக முன்னெடுக்க முடியும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-315)



## கனகபுரம் மாவீரர் துயிலும் இல்லம் சிரமதானப்பணி மூலம் துப்புரவு





(கண்டாவளை)

கரைச்சி பிரதேச சபையின் ஏற்பாட்டில் கிளிநொச்சி கனகபுரம் மாவீரர் துயிலும் இல்லத்தில் சிரமதானப்பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

எதிர்வரும் நவம்பர் மாதம் மாவீரர் தின வாரத்தை முன்னெடுக்கும் வகையில் கனகபுரம் மாவீரர் துயிலும் இல்லவளாகத்தில் சிரமதானப் பணிகள் முன்னெடுக்கபட்டுள்ளன.

சிரமதானப் பணிகள் நேற்றுக்காலை முதல் ஆரம்பமாகியது. வடக்கு மாகாண சபை உறுப்பினர் சு.பசுபதிப்பிள்ளை,வடக்கு மாகாண சபை உறுப்பினர் த.குருகுலராஜா, பச்சிலைப்பள்ளிப் பிரதேச சபை தவிசாளர் சு.சுரேன், கரைச்சிப் பிரதேச சபைத் தவிசாளர் ஆ.வேழமாலிகிதன் மற்றும் கரைச்சி,பளை ஆகிய பிரதேச சபைகளின் ஆளும் கட்சி உறுப்பினர்கள், பொதுமக்கள், தமிழ் தேசியக் கூட்டமைப்பின் ஆதரவாளர்கள் ஆகியோர் இணைந்து மேற்படி சிரமதானப் பணியை முன்னெடுத்துள்ளனர்.(2-315)

## அதிக வரட்சியினால் முதலியார்குளம் நீர் வற்றியதால் கால்நடைகள் அவதி



(கண்டாவளை)

வவுனியா மாவட்டத்தின் செட்டிகுளம் பகுதியிலுள்ள முதலியார்குளம் வரட்சியினால் நீர் வற்றிக்காணப்படுவதுடன், கால்நடைகளுக்கான குடிநீரும் பற்றாக்குறையாகக் காணப்படுகின்றது.

செட்டிகுளம் பிரதேசத்திற்குட்பட்ட முதலியார்குளத்தில் நீர் வற்றிக் காணப்படுவதுடன், குளத்தில் காணப்பட்ட மீன் மற்றும் நீர் வாழ் உயிரினங்கள் முழுமையாக அழிவடைந்துள்ளன. இதேவேளை இந்தப் பிரதேசத்தில் உள்ள கால்நடைகளுக்கான குடிநீர்இல்லாத நிலையும் காணப்படுகின்றது.

கடந்த காலத்தில் முன் எப்போதும் இல்லாதவாறு வரட்சியான சூழ்நிலையே இம் முறை ஏற்பட்டுள்ளதாக பிரதேச மக்கள் தெரிவித்துள்ளனர். (2-315)

## குழாய்க்கிணறு திருத்தம் செய்யப்பட்டு மக்கள் பயன்பாட்டிற்கு கையளிக்கப்பட்டது




(பனிக்கன்குளம்)

வவுனியா நகர மத்தியில் கொப்பேகடுவ சிலையருகேயுள்ள குழாய்க்கிணறு ஒன்று கடந்த ஒரு மாதகாலமாக பயன்படுத்த முடியாத நிலையிலிருந்து வந்துள்ளது.

இந்நிலையில் ஈழ மக்கள் ஜனநாயக்கட்சியினர் இவ் விடயத்தையறிந்து சம்பவ இடத்திற்குச் சென்று பார்வையிட்டு நேற்று குறித்த சேதமடைந்த கிணற்றை தனது கட்சியின் உறுப்பினர்களின் பங்களிப்புடன் திருத்தம் செய்து மக்கள் பயன்பாட்டிற்கு கையளிக்கப்பட்டுள்ளது.(2-281)

## தென்னை பயிர்ச்செய்கை சபை கற்பகதரு சங்கங்கள் உருவாக்கம்



(முல்லைத்தீவு)

தென்னை பயிர்ச்செய்கை சபையின் பிராந்திய முகாமையாளர் தே.வைகுந்தன் தலைமையில் அண்மையில் முள்ளியவளை மத்தி, தெற்கு, புதறிக்குடா ஆகிய கிராமங்களில் கற்பகதரு சங்கங்கள் உருவாக்கப்பட்டன.

இதன்போது, பிராந்திய முகாமையாளர் தே.வைகுந்தன், அப்பிரதேச தென்னை அபிவிருத்தி உதவியாளர் திருமதி.பி.சுபாசினி ஆகியோரினால் தென்னை பயிர்ச் செய்கை தொடர்பான விரிவாக்கல் நிகழ்ச்சித்திட்டம் ஒன்றும் நடத்தப்பட்டது. (2)

## மூத்தோர் கௌரவிப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி கே/என் 35 சிவநகர் கிராம அலுவலர் பிரிவின் மூத்தோர் சங்கத்தின் மூத்தோர் கௌரவிப்பு நிகழ்வு தலைவர் அ.இரகுபதி தலைமையில் அண்மையில் சங்கக் கட்டடத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கரைச்சி பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலர் திருமதி தமிழினி சதீஸ், சிறப்பு விருந்தினர்களாக கரைச்சி சமூக சேவை அலுவலர் திருமதி ஆரணி தினேஸ், சிவநகர் பாடசாலை அதிபர்ஐ.இராசரத்தினம்,பொருளாதார அபிவிருத்தி அலுவலர் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர். இதன்போது உதவிப் பிரதேச செயலாளரினால் பலா மரக்கன்று நாட்டி வைக்கப்பட்டது. (2-254)





முல்லைத்தீவு-கள்ளப்பாடு, வடக்கு றோயல் முன்பள்ளியில் கடந்த 28 ஆம் திகதி சிறார்களின் கண்காட்சி நிகழ்வு இடம்பெற்றது. இந் நிகழ்விற்கு பிரதம விருந்தினராக வடக்கு மாகாணசபை உறுப்பினர் து.ரவிகரன் கலந்து கொண்டார். (படங்கள்:- பனிக்கன்குளம் செய்தியாளர்)

# சிறுவர் மீதான சரீர தண்டனையும் காலமாற்றமும்

பாடசாலை மாணவர்கள் மீது ஏற்படும் உடல் ரீதியான தண்டனை அல்லது சரீர தண்டனை என்பது அதிகாரம் உள்ள ஒருவரால் பிள்ளைகளை ஒழுக்கமுள்ளவர்களாக மாற்றுதல் என்ற பெயரில் உடலில்ஏற்படுத்தும்வலியாகும்.

இவ்வகையான தாக்கங்கள் பாடசாலையில் மட்டுமல்ல வீடுகளிலும் ஏற்படும். பிள்ளையின் பழக்கவழக்கத்தை மாற்ற அல்லது நல்லொழுக்கத்தை பழக்குவதற்கென பிரயோகிக்கப்படும் சரீர தண்டனை என்பவற்றில் பிள்ளையை கிள்ளுதல், உதைத்தல், குலுக்குதல், முழங்காலில் இருத்துதல், கதிரையில் நிற்கவைத்தல், காதைதிருகுதல், வெயிலில் நிற்கவைத்தல், கைமற்றும் பிரம்பால் அடித்தல் என்பன சிலவாகும்.

இன்றைய காலகட்டத்தில் பாடசாலை மாணவர்களிற்கு ஏற்படும் வன்முறை முற்று முழுதாக உலகளாவிய ரீதியில் மட்டுமல்லாது இலங்கையிலும் சட்ட ரீதியாக தடை செய்யப்பட்டுள்ளது. இவ்வகையான பாடசாலை மாணவர்களிடையே திணிக்கப்படும் சரீர தண்டனை ஒரு மனித உரிமை மீறலாகும் என்பதுடன் ஒரு சிறுவர் உரிமை மீறலுமாகும்.

சில வருடங்களிற்கு முன் மாணவர்களை நல்வழிப்படுத்துவதற்காகப் பயன்படுத்தப்பட்ட உடல்ரீதியான தண்டனை சமுதாயத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டாலும் தற்காலத்தில் இதுசட்ட ரீதியாக தடைசெய்யப்பட்டுள்ளது மட்டுமின்றி இவ்வகையான



வழிமுறைகள் சிறுவர்களை உளவியல் ரீதியாக மிகவும் பாதிக்கின்றது.

பல ஆய்வுகளின்படி பாடசாலை மாணவர்களிடையே மேற்கொள்ளப்படும் சரீர தண்டனை பிள்ளையை நல்வழிப்படுத்த உதவும் என்பது ஒரு பிழையான கருத்தாகும். அது கால ஓட்டத்தில் பாரதூரமான விளைவை ஏற்படுத்துமேயன்றி நன்மை தராது.

பொதுவாக ஆசிரியர் மற்றும் பெற்றோர்கள் கூறுவது "எம்மை அடித்து தான் வளர்த்தார்கள். எனவே நாமும் அதை செய்வோம்" என்பதாகும். பல காலமாக இருந்த பழக்கமாதலால் எமது சமுதாயம் இவ்வாறான வன்முறையை ஏற்றுக்கொண்டு அதை சாதாரணம் என எண்ணி வருவது கவலைக்கிடமான ஒரு செயலாகும்.

"அடியாத மாடு படியாது"என்ற மனப்பாங்கு இன்றைய கால ஓட்டத்தில் உளவியல் ரீதியாகவோ



அல்லது தனி மனித/ சிறுவர் உரிமை என்ற வகையிலோ பார்க்கப்படினும் ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்றாகும்.

பெற்றோர் மற்றும் ஆசிரியர்கள் பிள்ளைகளில் மேற்கொள்ளும் சரீர தண்டனையை சரி என நினைக்கும் போது அதே செயற்பாட்டை அந்தப் பிள்ளை எதிர்காலத்தில் தன்பிள்ளையில் செய்கிற தன்மை மிக அதிகமாகும்.

இது ஒரு முடிவற்ற வன்முறை கூடிய ஒரு எதிர்கால சமுதாயமாக மாறுவதற்கு வழிவகுக்குமேயன்றி நல்ல கோட்பாடுகள் மற்றும் மனித பண்பாடுகள் மிக்க சமுதாயமாக மாற்ற உதவாது.

சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் தரவுகளின் படி இலங்கையில் 2018ஆம் ஆண்டு 1500 இற்கு மேற்பட்ட சிறுவர் துஷ்பிரயோக முறைப்பாடுகள் ஏற்றுக்கொள்ளப்பட்டு அதில் 364 உடல் ரீதியான வன்முறைகளாகும். கல்வி அமைச்சு பாடசாலைகளில் பிள்ளைகளிற்கு எதிராக ஏற்படும் உடல் ரீதியான வன்முறையை தடுக்க பல முயற்சிகள் எடுத்துள்ளது ஓர் வரவேற்கத்தக்க விடயமாகும். நாட்டின் பல பாடசாலைகளில் இது முற்றாகத்தடை செய்யப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு யாழ்.மருத்துவ பீட குழந்தை மருத்துவப் பிரிவினரால் யாழ்.மாவட்ட க.பொ.த. உயர்தர பிரிவு மாணவர்களிடையே நடத்திய ஆய்வுகளின் படி 75% மாணவர்களிடையே வன்முறை பற்றிய அறிவுநன்றாக இருந்தது.

மேலும் ஆய்வில் ஈடுபட்ட 90% மாணவர்கள் வன்முறை பல பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தும் என்பதையும் அது சட்டத்திற்கு எதிரானது என்பதையும் அறிந்திருந்தார்கள். தமக்கு ஏற்பட்ட அனுபவங்களை கூறும் போது 63% மாணவர்கள் நாம் ஏதோஒருவகையில்தமது பாடசாலை நாட்களில் உடல் மற்றும் உள ரீதியான பாதிப்பிற்குட்படுத்தப்பட்டார்கள் என்பதையும் தெரிவித்தனர்.

ஒழுக்கமுள்ளவர்களாக மாற்றுவதற்கு உள்ள வழிமுறைகள் பற்றி ஆராயும் போது வன்முறை தவிர்ந்த மாற்று வழிகளை கையாள வேண்டும் என்பதை 91% மாணவர்கள் தெரிவித்தனர். மேலும் உடல் ரீதியான வன்முறை, தன்னம்பிக்கை இன்மை உள ரீதியான பாதிப்பு பிற்காலத்தில் வன்முறை என்பவற்றிற்கு இட்டுச் செல்லும் என்பதையும் அறிந்திருந்தனர். இவ்வாய்வின் தரவுகளின் படி எமது பிரதேச மாணவர் மத்தியில் வன்முறையும் அதன் பாதிப்பும் பற்றிய தெளிவான ஒரு அறிவு இருப்பதையும் அறியலாம்.

### பாடசாலை மற்றும் வீடுகளில் பிள்ளைகளிற்கு எதிராக ஏற்படும் சரீர தண்டனையால் ஏற்படும் விளைவுகள்

1. உடல் ரீதியான காயங்களை ஏற்படுத்தும்.
2. பிரச்சினைகள் வரும் போது வன்முறையால் அதை தீர்க்கலாம் என்ற பிழையான ஒரு கருத்தினை பிள்ளைகளின் மனதில் படிய வைக்கின்றது.
3. மிக நெருங்கியவர்களிற்கு எதிராக வன்முறை பாவிக்க லாம் என்ற ஒரு பிழையான கரு த்தினையும் சொல்லிக் கொடுக்கிறது.
4. சகமாணவர்கள், சகோதரர்கள் மீது வன்முறையை இலகுவாக பாவிப்பார்கள்.
5. சிறுபராயத்தில் வன்முறையை பார்த்தல் மற்றும் எதிர்கொள்ளுதல். பிள்ளைகள் வளர்ந்து பெரியவர்களான பின்பும் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு வன்முறையை கடைப்பிடிப்பார்கள்.
6. பிள்ளைகள் தவறிழைக்கும் போது அதை திருத்துவதற்கு வன்முறையை பாவித்தல்.ஒருபோதும் அந்தப் பிழையை திருத்த உதவாது என்பது உண்மை.
7. வன்முறைக்கு ஆளாகும் பிள்ளைகள் கவலை, தன்னம்பிக்கை இன்மை, பயம் மற்றும் வேண்டப்படாதவர் போன்ற உணர்வுகள் உள்ளவர்களாக மாற்றப்படுவார்கள்.
8. பெற்றோர் மற்றும் ஆசிரியர்களுடனான நல்லுறவை பாதிக்கும்

இவ்வாறான பல பிரச்சினைகள் இருப்பதால் பிள்ளைகளை ஒழுக்கமுள்ளவர்களாக மாற்ற வன்முறை தவிர்ந்த மாற்று வழிகளை கையாள வேண்டும்.

### பிள்ளைகளை ஒழுக்கமுள்ளவர்களாக மாற்றுவதற்கு வன்முறை தவிர்ந்த சில மாற்று வழிகள்

1. பிள்ளையுடன் நல்ல பழக்கங்கள் பற்றி கதைத்தல் மற்றும் தீயபழக்கத்தை கொண்டதாயின் அதை சுட்டிக்காட்டித் திருத்துதல் வேண்டும்.
2. பிள்ளை செய்யும் ஒழுக்கமற்ற செயலிற்கு அவர்களே பொறுப்புடையவர்கள் என்பதை உணர்த்துதல்வேண்டும் உதாரணமாக: ஒரு பொருளை உடைத்தல் அதை பிள்ளையைக் கொண்டே ஒட்டுதல்.
3. விரும்பத்தகாத செயலில் ஈடுபடும் போது பிள்ளைக்கு கொடுக்கும் சலுகையை நிறுத்துதல். உதாரணமாக: பிள்ளை விரும்பும் செயலை தற்காலிகமாக தடைசெய்து அதற்கான காரணத்தை தெளிவூட்டல்.
4. சிறுபிள்ளைகள் தவறிழைக்கும் நேரங்களில் பிள்ளையை குறிப்பிட்ட குறுகிய நேரத்திற்கு தனிமைப்படுத்துதல். தனிமையாக எவருமற்ற ஒரு இடத்தில் விடுதல் தன்தவறை உணர வழிவகுக்கும்.

### வகுப்பறையில் ஆசிரியர்களால் வன்முறையை தவிர்க்க பயன்படும் சில உத்திகள்

1. நற்பண்புகளை சொல்லிக் கொடுத்தல். உதாரணமாக மற்றவர்களை மதித்தல். உண்மை பேசுதல். பிழைசெய்தால் அதை ஏற்றுக்கொள்ளுதல். நேரத்தை சரியான முறையில் செலவழித்தல், தூரநோக்கு இருத்தல்.
2. வகுப்பறையிற்நடத்தைகுறியீட்டை நிறுவுதல் மாணவர்களை கொண்டு இவ்வாறான குறியீடுகளை வகுப்பறையில் செய்யலாம்.
3. தன்னம்பிக்கையை வளர்த்தல்
4. மாணவர்களின் தேவையை அறிந்து அதற்கு இடமளித்து பாடத்திட்டத்தை அமைத்தல்.
5. நற்பழக்கங்களை காட்டும் மாணவர்களை தட்டிக்கொடுத் தல் மற்றும் அவர்களிற்கு சில சலுகைகளை வழங்குதல்.
6. மாணவர்களுடன் கடினத்துடன் கூடிய நட்பையும் பேணு தல்.
7. மாணவர்கள் தம்மீது பாசமும் அக்கறையுள்ள ஆசிரியரென பாசத்துடன் பதிப்பளிக்கும் ஓர் ஆசிரியனாக ஒவ்வொரு ஆசிரியரும் தம்மை உயர்த்திக் கொள்ளல்.

இவ்வாறான பல உத்திகளை முறையான வடிவில் வகுத்து கையாளும் போது மாணவர்கள் ஒரு சந்தோசம் நிறைந்த பாதுகாப்பான சூழலில் கற்றலில் ஈடுபடுவார்கள். இது தமது எதிர்காலத்திலும் நற்பண்புடன் இருக்க வடிவமைக்கும்.

பெற்றோர்கள் மற்றும் ஆசிரியர்கள் தமக்கும் ஒரு முக்கிய பணி உண்டு என்பதை உணர்ந்து பிள்ளைகளை நல்வழிப்படுத்த வன்முறை தவிர்ந்த மாற்று வழிகளை கடைப்பிடிப்பதன் மூலம் மனித பண்புகள் கூடிய எதிர்கால சமுதாயத்தை உருவாக்க வழி செய்ய வேண்டும்.

Dr. கீதாஞ்சலி சத்தியதாஸ்
குழந்தை வைத்திய நிபுணர்
யாழ்.போதனா வைத்தியசாலை

## மூத்தோரை மதித்திடுவோம்



ஒக்டோபர் ஒன்று அது
எமக்கான தினமுமன்றோ
எட்டோடு எண்பதும் தான்
சேர்ந்த நன் நாளுமன்றோ...
ஒக்டோபர் ஒன்று அது
எமக்கான தினமுமன்றோ
எட்டோடு எண்பதும் தான்
சேர்ந்த நன் நாளுமன்றோ...

வட்டோடு வடலியுந்தான்
ஒட்டாக இருப்பதனால்
மொட்டோடு சேர்ந்தது தான்-நல்
பட்டோலை அதன் நாளும்...
மொட்டோடு சேர்ந்தது தான்-நல்
பட்டோலை அதன் நாளும்!!!!!
மூத்தோரை மதித்திடுவோம்



அவர் சொல்லை ஏற்றிடுவோம்
சான்றோரின் அறிவுரையில்-பல
சாதனைகள் படைத்திடுவோம்...
மூத்தோரை மதித்திடுவோம்
அவர் சொல்லை ஏற்றிடுவோம்
சான்றோரின் அறிவுரையில்-பல
சாதனைகள் படைத்திடுவோம்!!!!

துள்ளிவரும் சிட்டுக்களை
தூக்கி அணைத்த மூத்தோரை
அள்ளிவரும் அறிவாலே
போற்றி வளர்த்த ஆன்றோரை
பள்ளி செல்லும் பாலர் நாமும்
பாதியிலே விடலாமா?
பள்ளி செல்லும் பாலர் நாமும்
பாதியிலே விடலாமா!?

வாருங்கள் தோழர்களே-கை
கோருங்கள் தோழர்களே...
சேருங்கள் ஒன்றாக-நல்ல
வருங்காலம் நாம் படைப்போம்...!!!!!


மூடிடுவோம் இல்லமதை--அநாதை
என்ற சொல்லை நாமழிப்போம்!!!
முதியோர் இல்லமதை-நல்ல
முதுவீடாய் மாற்றிடுவோம்!!!!

பத்தோடு பதினாறுந்தான்
நல்ல எட்டோடு எண்பதுமாய்
வாழ்ந்திடுவோம் வையகத்தில்-புது
வாழ்வதனைத் தொடங்கிடுவோம்...
பத்தோடு பதினாறுந்தான்
நல்ல எட்டோடு எண்பதுமாய்
வாழ்ந்திடுவோம் வையகத்தில்--புது
வாழ்வதனைத் தொடங்கிடுவோம்!!!!



வேந்தன்-சுபானன்
தரம்-02
யா/அச்சுவேலி ஆரம்பப்
பாடசாலை.

# முதுமையில் விழுதல்



உலகில் நூறு கோடிக்கு மேற்பட்ட மூத்தோர்கள் இன்று வாழ்கின்றார்கள். மூத்தோர் வாரத்தின் முதலாம் நாள் இன்றாகும். இத்தகைய எமது அனுபவப் பெட்டகங்களை பராமரிப்பது எமது கடமையாகும். மூத்தோர் படுக்கையில் விழுவதனால் தான் பராமரிப்பு என்பது சவாலாகின்றது. 1991 ஐ.நா. ஆலோசனைக்கு அமைவான வியன்னா சம்மேளன பரிந்துரையின் அடிப்படையில் இலங்கையில் 2000 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க முதியோர்களின் உரிமைகளை பாதுகாக்கும் சட்டம் என்ற பேசும் பேசுபொருளின் கருவூலத்தை மனதில் இருத்தி இன்றைய தினம் மூத்தோரின் பராமரிப்பை எளிதாக்கவல்ல விடயமொன்றைப் பற்றி சிந்திப்போமா?

மூத்தோர்களின் இறுதி வாழ்க்கையில் போராட்டங்கள் நிறைந்திருப்பதற்கு பல்வேறு சவால்கள் காரணங்களாகிக் கிடக்கின்றன. இதில் பிரதானமானது மரணம். இந்த மரணத்திற்கு காரணமான "விழுதல்" என்ற செயற்பாடு அத்திபாரமாக காணப்படுவதை ஆய்வுகள் நிரூபித்துள்ளன. இயற்கையாகவும் செயற்கையாகவும் விழுதல் சம்பவங்கள் நிகழ்கின்றன. இதற்கு அடிப்படையாக ஆரோக்கியம் இன்மை காணப்படுகின்றது. உடல், உள, சமூக, ஆத்மீக ஈடாட்டங்கள், இடைவெளிகள் முதுமையில் வெறுமையாகும் போது இத்தோற்றப்பாடு எழுந்து நிற்கின்றது. மூத்தோர்கள் இந்த நிலையில் இருந்து விலகலைக் கொள்லாமா என்பதைப் பற்றி ஆராய்வது இங்கு நோக்கமாகின்றது.

மூத்தோர்களின் ஏக்கமும் தாக்கமும் உள்ளத்தில் அலைமோதும் போது இத்தகைய தோற்றப்பாடுகள் தோன்றுகின்றன. விழுவது தான் மரணத்தை நோக்கிய பயணிப்பின் படிக்கல் ஆகின்றது. உளரீதியில் வலுவற்ற தன்மை ஏற்படின் நிச்சயமாக எழுந்திருக்கவே முடியாது போய்விடுகின்றது. படுத்த படுக்கையில் முதுமையை கழிப்பது என்பது படுமோசமான நிலையாகும். கண்காட்சியில் வருவது போல நடைமுறைகள் அமைந்து விடுகின்றன. என்ன நடந்தது? என ஆயிரம் பேர் கேட்பார்கள். அவர்கள் அனைவருக்கும் சம்பவத்தை சொல்லும் போது ஆழ்மனதில் பயஉணர்வு ஏற்பட்டு இயலாமை என்பது நிரந்தரமாகி விடுகின்றது. நண்பர் ஒருவர் இந்நிலையை போக்குவதற்கு நடந்த சம்பவங்களை அப்படியே கைத்தொலைபேசியில் ஒளிப்படமாக்கி வருபவர்கள் கேட்பவர்களுக்கு போட்டுக் காட்டிக் கொண்டார். இதன் மூலம் அவரும் விரைவாக தாக்கத்திலிருந்து மீண்டு எழுந்து கொண்டார். இது நவீன உலகின் புது வழியாக தெரிகிறது.

அத்தோடு பார்த்துவிட்டு செல்பவர்களை சும்மாவா செல்கின்றார்கள்? என்ன ஆள் என்னும் முடியேல்லையோ? என்ன இவ்வளவு நாளும் கிடக்கிறாரோ? இப்படியான எதிர்பார்ப்பு மேலோங்கிக் செல்வதும் ஏற்படுத்தப்படுகின்றது. படுத்தால் எழும்பக் கூடாது என்ற கொள்கை உருவாக்கம் செய்யப்படுகின்றது. இவ்விடத்தில் முதியோர் இல்லத்தில் நடந்த சம்பவம் ஒன்றையும் நினைவுபடுத்தல் பொருத்தமாகின்றது.

படுத்த படுக்கையான நோயாளி நோயின் தாக்கத்தால் துவண்ட நிலை முறையான பராமரிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றது. நோயாளி காவு வண்டி மூலம் அடிக்கடி வைத்தியசாலை தரிசனங்கள் ஏற்படுத்தப்படுகின்றன. இவரை யாரும் பார்க்க வருவதில்லை. இருந்த சொத்துக்களை ஒருவருக்கு கொடுக்காது ஓடிவந்து வாழ்பவர். முதியவர்களை இறப்பின் பின் தரிசிப்பதில் சமூகம் காட்டும் அலாதி ஆர்வம் ஆச்சரியத்திற்குரியது. இந்த வகையின் ஒருவர் இந்த முதியவரை வெளியில் இருந்து அவதானித்துள்ளார். ஒருநாள் அவர் இறந்து விட்டதாக கூறி அகமதிந்தபடி முதியோர் இல்லத்திற்கு ஓடி வருகிறார். இன்னும் மரணத்துடன் போராடி வாழும் அந்த முதியவர் இறந்து விட்டதாக கூறிய போது நிர்வாகம் அதிர்ந்தது. அதிலும் அவரது உச்சாக மேலீடு ஆச்சரியத்தால் நனைந்தது.

வந்தவர் அந்த முதியவர் உயிருடன் இன்னமும் இருப்பதை அறிந்தார். மிகுந்த சோகத்தில் மிதந்தவர். அந்த முதியவரையும் பார்க்க மறுத்து தலைதெறிக்க ஓடினார்.

இப்படியான மனிதர்களின் செய்கைகள் அநாகரிகமானவை. படுக்கையில் வருடக்கணக்கில் கிடப்பவர்கள் நோயின் உச்சத் தாக்குதலால் மரணத்தை வரவழைத்து வேதனைப் படுகின்றார்கள். முன்பு மருத்துவத்தில் கருணைக் கொலை என இருந்தது. தற்போது உயிர்பிரியும் தறுவாயிலும் வைத்தியம் செய்யப்படும் நிலை காணப்படுகின்றது. பிராண வாயு இறுதி மூச்சில் கலந்து நின்று கடைசி நிமிடங்களை நகர விடாமல் தடை செய்கின்றது. மருத்துவ உலகின் மறுபரிசீலனைக்கு இவ்விடயம் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டியுள்ளது.

படுக்கைப் புண்கள் ஏற்படும் போது மிகக் கொடுமையான நிலை ஏற்படுகின்றது. இறப்பின் வடிவம் பிறப்பின் வடிவமாக மாறிவிடுகின்றது. உணவு செல்ல மறுத்து, நீர் ஆகாரம் செல்ல மறுத்து நீர் மட்டும் இறுதி நிலையில் வேண்டப்படும் ஒன்றாக மாறிவிடுகின்றது. குழந்தை பிறக்கும் போது பூமிக் காற்று பட்டு தாய்ப்பாலுக்காக அழுகின்றான். மனிதனாகி இறக்கும் போது ஒரு சொட்டு நீருக்காக அழுகின்றான். அதுவும் அன்பான உறவுகளின் கரங்களால் இந்த எதிர்பார்க்கை அமைந்து நிற்கின்றது.

முதுமையில்தனிமைமிகப்பெரியகொடுமை. அதிலும் அன்பில்லா உறவு களின் சேர்க்கை அதைவிடக் கொடுமை. இவ்வாறாக விழுவது மூலம்– மரணத்தின் கதவுகள் திறக்கப்பட்டு இன்னல்களின் இருப்பிடம் ஏற்படுத்தப்பட்டு உறவுகளின் மூலமாக மிலேச்சத்தனங்கள் அரங்கேற்றப்பட்டு மனிதன் என்று சொல்லி மார்தட்டி நின்ற நிலை மறைக்கப்பட்டு விலங்குகளிலும் கேவலமான நிலை ஏற்படுத்தப் பட்டு வாழ்க்கையில் நடந்து வந்த பாதைகள் எல்லாம் சிதைக்கப்பட்டு கடவுளின் படைப்பின் அர்த்தம் புதைக்கப்பட்டு முதுமையின் கனவுகளில் சிதறல்கள் உருவாக்கப்பட்டு மனிதத்தின் புனிதம் எங்கு சென்றது என்ற கேள்வியோடு மூத்தோர்களின் இறுதியில் பயணம் இனியும் தொடர வேண்டுமா?

விழுதலை தவிர்க்க ஒவ்வொரு மனிதனும் நேரிடையான எண்ணங்களை உள்வாங்குதல் வேண்டும். ஐம்பது முதல் அறுபது வரை இந்த தயார்படுத்தலை செய்தாலே போதுமானது. முடியாது என்பதை தவிர்த்து சாதகமானதாக அனைத்தையும் நினைக்கப்பழக வேண்டும். ஏற்றுக் கொள்ளல் பண்பை வளர்க்க வேண்டும்.

உடலை வலுப்படுத்த உடற்பயிற்சிகள், ஆகார கட்டுப்பாடு வேண்டிய சிகிச்சைகள் செய்து உடலை கவனம் செலுத்தி பேணுதல் வேண்டும். உள்ளத்தை திடகாத்திரமாக வைக்க நம்பிக்கையை வலுவாக்கி வாழ வேண்டும். ஆத்மீக தேடலும் நாடலும் அருமருந்தாக அமையும். சமூக ஈடுபாடு, சமூக நிகழ்வுகளில் பங்கேற்றம், சமூக ஊடாட்டம் பேணல் மூலம் மகிழ்ச்சி என்பது வந்து அமர்ந்து கொள்ளும். இதுவே அகமகிழ் வாக மாறி ஆரோக்கியம் காக்க வழியேற் படுத்தப் பட்டதாக அமையும். நேரான எண்ணங்களாலும் செயல்களாலும் ஆரோக்கியத்தை தக்க வைக்க முடியும். இதன் மூலமாக விழுதல் என்ற நிலைப்பாட்டில் இருந்து விலகிக் கொள்ளும் பாதையில் பயணிக்க முடியும்.

மூத்தோர்கள் சமூகத்தில் முன்னுதாரணமானவர்கள். அவர்களின் வாழ்க்கை என்பது சமூகத்தில் புதிய அனுபவங்களை பறைசாற்றி நிற்பது. அவர்களின் ஒவ்வொரு அசைவுகளும் ஆயிரம் ஆயிரம் அர்த்தங்களை பிரசவிப்பது. அன்பான, பண்பான, எளிமையான, இனிமையான நிகழ்வு களால் அலங்கரிக்கப்பட்ட மூத்தோரின் வாழ் வியல் பக்கங்கள் அறுதியானவை, உறுதியானவை என்பதில் எவ்விதமான மாற்றுக் கருத்துக்களும் இருக்க முடியாது.

'மதிப்பார்ந்த மூத்தோர்களின் சமூகப் பாதுகாப்பு, இறுதி நேர பராமரிப்பு என்பன சமூகத்தில் சவாலாகியுள்ளன. எனினும் சமூகம் சார்ந்த குடும்ப உறவுகள் நெருக்கத்திற்குரிய விதத்திலும் உருக்கத்திற்குரிய விதத்திலும் செயற்பாடுகளை அமைத்து மூத்தோரை காத்து நாகரிகத்தை நிறைத்து அதிலும் நன்றிக் கடனை நினைத்து பேரன்புக்குரியவர்களாக, பண்பாளர்களாக, அன்பாளர்களாக மாறும் நிலை வரும் போது மூத்தோர்கள் விழுதல் என்பது வீழ்ச்சி கண்ட ஒன்றாக மாறி நிற்கும்.

முதியவர் ஒருவர் இறந்த பின் ஒப்பாரி சொல்லி அழுது தீர்ப்பதை விடுத்து உயிருடன் இருக்கும் போது எந்தளவு மகிழ்ச்சிப்படுத் தல் முடிகிறதோ அதை செய்கின்றோமா? என்பதைப் பார்ப்பதில் தான் முழுத் தேவையும் இருக்கின்றது. முதுமையின் கண்ணீரை எவர் ஒருவர் குறைப்பதற்கு முயல்கின் றாரோ அவரே சிறந்த குடிமகன் ஆவார். மூத்தோரைக் காத்தோர் இறையன்புக்குரியவராகின்றார்.

**தங்கவடிவேலு கிருபாகரன்,**
அத்தியட்சகர்,
அரச முதியோர் இல்லம்.











சர்வதேச முதியோர் தினத்தை முன்னிட்டு இராணுவத்தின் ஏற்பாட்டில் புதிய வேலைத்திட்டம் மற்றும் சிறப்பு நிகழ்வுகள் கடந்த வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணம் கைதடி சாந்தி நிலைய முதியோர் இல்லத்தில் நடைபெற்றது.

பாதுகாப்பு படைகளின் யாழ்.மாவட்ட கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் தர்சன ஹெட்டியாராச்சியின் வழிகாட்டலில் 7ஆவது இலங்கை பெண்கள் படையணியின் பெண் கட்டளை அதிகாரி மேஜர் போம்புவில ஆலோசனைக்கு அமைய குறித்த படையணியினரின் ஒத்துழைப்புடன் இந்த நிகழ்வு முன்னெடுக்கப்பட்டது.

இதில் முதியவர்களுக்கான விளையாட்டுக்கள், கலை நிகழ்வுகள் இடம்பெற்றதுடன் உணவு, பரிசுப்பொதி என்பன வழங்கப்பட்டன. (படங்கள்:-பொ.சோபிகா)



# பாரதம்



## ர:ஃபேல் போர் விமான ஒப்பந்தம்

# பொறாமையால் பொய்க் குற்றச்சாட்டுக்களை சுமத்துகிறது காங்கிரஸ்-நிர்மலா சீதாராமன்

(சென்னை)

ரஃபேல் போர் விமான ஒப்பந்தத்தில் காங்கிரஸ் கட்சியினால் பணம் சம்பாதிக்க முடியாமல் போனதால் பொய்யான குற்றச்சாட்டுக்களை காங்கிரஸ் சுமத்தி வருவதாக மத்திய பாதுகாப்புத்துறை அமைச்சர் நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.



சென்னையிலுள்ள இராணுவ அதிகாரிகளுக்கான பயிற்சி நிலையத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனை குறிப்பிட்டுள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

"ரஃபேல் போர் விமானக் கொள்முதல் விவகாரத்தில் முந்தைய காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசு இடைத்தரகர்கள் ஊடாக பேச்சுவார்த்தை நடத்தியது. இதன்போது நாட்டுக்கு முக்கியமான கருவிகளை வாங்கப்போகிறோம் என்ற எண்ணம் அவர்களுக்கு இருக்கவில்லை.

ஆனால் தற்போது பிரதமர் மோடி தலைமையிலான மத்திய அரசு ரஃபேல் விமானங்களை வாங்கியமையால் காங்கிரஸினால் பணம் சம்பாதிக்க முடியாமல் போய்விட்டது.

இதன் காரணமாகவே ரஃபேல் போர் விமானக் கொள்முதல் தொடர்பாக போலியான கருத்துக்களை முன்வைத்து மத்திய அரசை, காங்கிரஸ் குற்றம் சுமத்துகின்றது.

மேலும் மோடி தலைமையில் ஊழல் அற்ற ஆட்சி நடைபெற்று வருகின்றது. இதனால் மத்திய அரசு மீது தம்மால் முடிந்தளவான குற்றச்சாட்டுக்களை காங்கிரஸ் முன்வைத்து வருகின்றது.

இவ்வாறு இவர்களால் முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுக்கள் உண்மையாக இருந்தால் தானே அதற்கு விளக்கம் அளிக்க முடியும்" என நிர்மலா சீதாராமன் மேலும் தெரிவித்தார். (7)

# அமெரிக்கா, ஐ.நா.பாதுகாப்புச்சபையின் தடை நீடிப்பு எம்மீதான நம்பிக்கையின்மையையே காட்டுகிறது




## - வடகொரியா அதிருப்தி -

பியாங்யாங் மீதான அமெரிக்காவின் தொடர்ச்சியான தடைகள், அதிருப்தியை ஏற்படுத்துவதாக வடகொரியா குறிப்பிட்டுள்ளது.

ஐ.நா. பொதுச்சபை அமர்வில் நேற்று முன்தினம் கலந்துகொண்டு உரையாற்றிய வடகொரிய வெளிவிவகார அமைச்சர் ரி யோங் ஹோ இதனைத் தெரிவித்தார்.

கடந்த ஜூன் மாதம் வடகொரிய ஜனாதிபதி மற்றும் அமெரிக்க ஜனாதிபதிக்கு இடையில் இடம்பெற்ற சந்திப்பையடுத்து, வடகொரியாவின் செயற்பாடுகளில் முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளன. இதனை ஐ.நா. பாதுகாப்புச் சபை கவனத்திற் கொள்வது அவசியமென சீனாவும் ரஷ்யாவும் குறிப்பிட்டிருந்தன.

எனினும், அமெரிக்கா மற்றும் ஐ.நா. பாதுகாப்புச் சபையின் தடைநீடிப்பானது தமது நாட்டின் மீதான நம்பிக்கையின்மையையே காட்டுகின்றதென வடகொரிய வெளிவிவகார அமைச்சர் தெரிவித்தார்.

அணுவாயுதங்களை முற்றாக நீக்க வடகொரியா முக்கிய முன்னெடுப்புக்களை மேற்கொண்டு வருவதாக குறிப்பிட்ட வடகொரிய அமைச்சர், அமெரிக்காவிடமிருந்து உரிய பதில் கிடைக்கவில்லையெனவும் தெரிவித்தார்.

பியாங்யாங்கின் அணுசக்தி மற்றும் ஏவுகணை திட்டங்களுக்கு நிதியளிப்பதை ஐ.நா. பாதுகாப்புச் சபை கடந்த 2016 ஆம் ஆண்டு முதல் நிறுத்தியதோடு, பொருளாதார தடைகளையும் விதித்தமை குறிப்பிடத்தக்கது. (7)

# நைஜீரியாவில் பயங்கரவாதிகள் தாக்குதல் இரு இராணுவ வீரர்கள் உட்பட 8 பேர் பலி

## - 17 தீவிரவாதிகள் சுட்டுக்கொலை -



நைஜீரியாவில் பொதுமக்கள் மற்றும் இராணுவத்தினர் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் இரண்டு இராணுவ வீரர்கள் மற்றும் 6 பொதுமக்கள் உயிரிழந்துள்ளனர்.

மேலும் 17 போகோஹராம் தீவிரவாதிகள் இராணுவத்தினரால் சுட்டுக்கொலை செய்யப்பட்டிருந்தனர்.

நேற்று முன்தினம் லேக்சாட் என்ற இடத்தில் போகோஹராம் தீவிரவாதிகள் திடீர் தாக்குதல் நடத்தினர்.

இதில்பொதுமக்கள்6பேரும் இரு இராணுவ வீரர்களும் உயிரிழந்தனர். இதையடுத்து சம்பவ இடத்திற்கு கூடுதல் இராணுவ வீரர்கள் வரவழைக்கப்பட்டதைத் தொடர்ந்து இராணுவத்தினர் நடத்திய தாக்குதலில் 17 போகோஹராம் தீவிரவாதிகள் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

கடந்த 2009 ஆம் ஆண்டில் இருந்து இராணுவத்திற்கும், தீவிரவாதிகளுக்கும் இடையில் நடைபெறும் போர் காரணமாக இதுவரை சுமார் 2 இலட்சம் பேர் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது. (7)

# இந்தோ[...] [...]யற்கை[...]

## - உயிரிழப்பு 8[...]



(ஜகார்த்தா )

இந்தோனேசியாவில் ஏற்பட்ட சக்திவாய்ந்த நிலநடுக்கம் மற்றும் சுனாமியில் சிக்கி பலியானவர்களின் எண்ணிக்கை 840ஆக அதிகரித்துள்ளது.

இந்தோனேசியாவின் சுலேவேசியா தீவில் நேற்று முன்தினம் சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது.

இந்த நிலநடுக்கம் சுலேவேசி யாவின் தாங்கலாவில் இருந்து வடகிழக்காக 56 கிலோ மீற்றர் தொலைவில் பூமிக்கு அடியில் 10 கிலோ மீற்றர் ஆழம் மையம் கொண்டு 7.5 ரிக்டர் அளவில் ஏற்பட்டதாக அமெரிக்க புவியியல் ஆய்வு மையம் தகவல் தெரிவித்திருந்தது. சக்திவாய்ந்த இந்த நிலநடுக்கம் காரணமாக பல கட்டடங்கள் கடுமையாக சேதமடைந்தன.


இதனிடையே நிலநடுக்கத்தை அடுத்து பல இடங்களில் சுனாமியும் ஏற்பட்ட[...] ரத்திற்கு[...] சுமார் [...] பகுதி[...] நகரமே[...] சந்தித்து[...]

இந்[...] றும் சுன[...] எண்ண[...] துள்ளது[...] ளது.

பல[...]

# இந்தோனேசியா இயற்கை சீற்றத்தில் உயிரிழந்தவர்களுக்கு மோடி இரங்கல்





(ஜகார்த்தா)

இந்தோனேசியாவில் ஏற்பட்ட நிலநடுக்கம் மற்றும் சுனாமி காரணமாக உயிரிழந்துள்ள மக்களுக்கு பிரதமர் நரேந்திர மோடி இரங்கல் தெரிவித்துள்ளார்.

குறித்த இரங்கலை தனது டுவிட்டர் பக்கத்தின் ஊடாக மோடி குறிப்பிட்டுள்ளார். அதில் கூறியுள்ளதாவது,

"இந்தோனேசியாவில் ஏற்பட்ட நிலநடுக்கம் மற்றும் சுனாமி ஆகியவற்றில் சிக்குண்டு உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு என்னுடைய ஆழ்ந்த இரங்கலை தெரிவித்து கொள்கிறேன்.

இத்தகைய கடுமையான சூழ்நிலையில் இந்தோனேசியாவுக்கு இந்தியா துணை நிற்கும்" என மோடி, தனது டுவிட்டர் பக்கத்தில் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

இந்தோனேசியா, சுலேவேசியா தீவில் நேற்று முன்தினம் ஏற்பட்ட நிலநடுக்கம் மற்றும் சுனாமி ஆகியவற்றினால் இதுவரை 840 பேர் உயிரிழந்துள்ளதுடன் பலர் படுகாயமடைந்துள்ளனர்.

இந்நிலையில் உயிரிழப்புகள் மேலும் அதிகரிக்கப் படலாமென அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (7)

கெ[...] பாசி[...]

- உ[...]



# னேசியாவில்! கயின் கோரம்!

## பு 840 ஆக உயர்வு -



ஏற்பட்டது. பாலு நகரில் 5 அடி உயரத்திற்கு எழும்பிய சுனாமி அலைகள் சுமார் 350000 மக்கள் வசிக்கும் பகுதியை தாக்கியது. இதனால் அந்நகரமே மோசமான சூழ்நிலையை சந்தித்துள்ளது.

இந்நிலையில், நிலநடுக்கம் மற்றும் சுனாமியில் சிக்கி உயிரிழந்தோர் எண்ணிக்கை 840 ஆக உயர்ந்துள்ளதாக தகவல் வெளியா கியுள்ளது.

பலத்த காயங்களுடன் பலர் உயிருக்கு ஆபத்தான நிலையில் வைத்தியசாலைகளில் சேர்க் கப்பட்டிருப்பதாகவும் உள்ளூர் ஊடகங்கள் செய்தி வெளியிட்டு வருகின்றன.

நிலநடுக்கம்மற்றும்சுனாமி காரணமாக பாலு நகரை சேர்ந்த 17 ஆயிரம் பேர் வெளியேற்றப்பட்டு பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

ஜனாதிபதி ஜோகோ விடோடோ, அப்பகுதிக்கு இராணுவத்தை அனுப்பி இடிபாடுகளில் சிக்கியுள்ளவர்களை மீட்க உத்தர விட்டுள்ளார்.

மீட்புப் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வரும் நிலையில் பாதிப்புகள் அதிகமாக இருப்பதால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கக்கூடும் என அஞ்சப்படுகிறது. (7)

# அமெரிக்காவில் சட்டவிரோதமாக குடியேறிய 9,000 இந்தியர்கள் கைது

(வோஷிங்டன்)

சட்டவிரோதமாக அமெரிக்காவுக்குள் நுழைந்து அங்கு குடியேறிய 9 ஆயிரம் இந்தியர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மெக்சிகோ எல்லை வழியாக அமெரிக்காவுக்குள் வெளிநாட்டினர் சட்ட விரோதமாக நுழைந்து குடியேறுகின்றனர். அவர்களை தடுத்து நிறுத்தும் முயற்சியில் ட்ரம்ப் அரசு ஈடுபட்டுள்ளது. இதற்காக மெக்சிகோ எல்லையில் சுவர் கட்ட அமெரிக்கா திட்டமிட்டுள்ளது.

அமெரிக்க சுங்க இலாகா மற்றும் எல்லைப் பாதுகாப்பு படையினர் விழிப்புடன் கண்காணித்து வருகின்றனர். இருந்தும் ஊடுருவும் வெளிநாட்டினரின் எண்ணிக்கை குறையவில்லை.

அவர்களில் மெக்சிகோவை சேர்ந்தவர்கள் தான் பெரும்பாலானோர். அவர்களை தொடர்ந்து கவுதமலா, ஹோண்டுராஸ் மற்றும் எல்சல்வடோர் நாடுகளைச் சேர்ந்தவர்கள் சட்ட விரோதமாக நுழைகின்றனர். இவர்களுக்கு அடுத்தபடியாக இந்தியர்கள் நுழைவதாக அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

மெக்சிகோ எல்லை வழியாக நுழையும் இவர்கள் அமெரிக்காவில் அடைக்கலம் கேட்டு மனு செய்கின்றனர். அதில் வேறு சாதி அல்லது மதத்தினரை திருமணம் செய்ததால் கொலை மிரட்டல் வருவதாகவும் எனவே அடைக்கலம் தரும்படியும் கோரிக்கை விடுக்கின்றனர்.

2012 முதல் 2017ஆம் ஆண்டு வரை அடைக்கலம் கேட்ட 42 சதவீத இந்தியர்களின் மனுக்கள் ஏற்றுக் கொள்ளப்படவில்லை. அதே நேரத்தில் 79 சதவீதம் எல்சல்வடோர் நாட்டினரின் மனுவும், 78 சதவீதம் ஹோண்டுராஸ் நாட்டினரின் மனுவும் அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

இந்த ஆண்டு மட்டும் சட்டவிரோதமாக அமெரிக்காவுக்குள் நுழைந்து அங்கு குடியேறிய 9 ஆயிரம் இந்தியர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். இது கடந்த ஆண்டைவிட அதிகமாகும். கடந்த ஆண்டில் 3,162 பேர் கைதாகினர். இந்த தகவலை அமெரிக்க சுங்க இலாகா மற்றும் எல்லை பாதுகாப்பு படையின் செய்தி தொடர்பாளர் சல்வடோர் ஷமோர்ரா தெரிவித்துள்ளார். (7)

# யுத்தத்தால் இடம்பெயர்ந்த மக்களுக்கு சிரிய வெளிவிவகார அமைச்சர் அழைப்பு!

(டமாஸ்கஸ்)

சிரியாவில் நிலவிய உள்நாட்டு யுத்தத்தால் இடம்பெயர்ந்து அகதிகளாக வாழும் மக்களை மீண்டும் நாட்டிற்கு வரவேற்பதாக சிரிய வெளிவிவகார அமைச்சர் வாலித் அல் மௌலெம் தெரிவித்தார்.

ஐ.நா. பொதுச்சபை அமர்வில் நேற்று முன்தினம் உரையாற்றுகையிலேயே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், "பயங்கரவாத தாக்குதல் காரணமாக அழிவை சந்தித்த நாட்டை மீளக் கட்டியெழுப்புவது அவசியமானது. பயங்கரவாதத்திற்கு பயந்து, பொருளாதார சரிவிற்கு ஈடு கொடுக்க முடியாமல் மக்கள் நாட்டை விட்டு வெளியேறினர்.

பயங்கரவாதத்திற்கு எதிரான போரின் இறுதிக்கட்டத்தில் நாம் உள்ளோம். ஆகவே, எமது நாட்டு மக்களை மீள அழைக்கின்றோம். இழந்தவற்றை உங்கள் கரங்களாலேயே மீளக் கட்டியெழுப்புங்கள்.

எமது நாட்டை மீளக் கட்டியெழுப்ப நேச நாடுகளுக்கு அழைப்பு விடுக்கின்றோம்.

யுத்தத்தின்போது எமக்கு தோள்கொடுத்த நாடுகளுக்கு முன்னுரிமை அளிக்கின்றோம்.

எனினும், பயங்கரவாதத்திற்கு துணை போன நாடுகளை நாம் ஒரு போதும் ஏற்றுக்கொள்ளவோ அழைப்பு விடுக்கவோ மாட்டோம்" எனத் தெரிவித்தார். (7)

# கொலையாளிகளை மகிமைப்படுத்தும் பாகிஸ்தானுடன் இந்தியா பேச்சுவார்த்தையா?

## - ஐ.நாவில் சுஷ்மா கேள்வி -



(வோஷிங்டன்)

ஐ.நாவில் நடைபெற்ற மாநாட்டில் கலந்துகொண்ட இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் சுஷ்மா சுவராஜ், இந்திய- பாகிஸ்தான் பேச்சுவார்த்தை தடைப்பட்டதற்கான காரணத்தை விளக்கியுள்ளார்.

ஐ.நாவின் 73ஆவது பொதுக்கூட்டம் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இந்த கூட்டத்தில் பேசிய இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர், பேச்சுவார்த்தையின் மூலமாக பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் இந்தியா, பேச்சுவார்த்தைக்கான அழைப்பை நாசப்படுத்தியதாக கூறுவது உண்மைக்கு புறம்பானது என தெரிவித்துள்ளார்.

இந்தியா-பாகிஸ்தான் இடையே பலமுறை பேச்சுவார்த்தைக்கு முடிவு செய்யப்பட்டதாகவும், பேச்சுவார்த்தை இரத்து செய்யப்பட்டால் அதற்கு முழு காரணம் பாகிஸ்தான் நடந்துகொள்ளும் முறைதான் எனவும் சுஷ்மா சுவராஜ் கடுமையாக தாக்கியுள்ளார்.

இந்தியாவில் ஒவ்வொரு அரசும் பாகிஸ்தானுடன் அமைதியை நிலைநாட்ட முயற்சித்து வந்ததாகவும், கடந்த 2016 ஆம் ஆண்டு டிசம்பரில் தானே நேரடியாக சென்று இருநாட்டு உறவு குறித்து பேச்சுவார்த்தை நடத்தியதாகவும் சுஷ்மா சுவராஜ் தெரிவித்துள்ளார். அதேசமயம், 2017 ஜனவரியில் பாகிஸ்தான் பயங்கரவாதிகளின் தாக்குதலை பரிசாக அளித்ததாகவும் சுஷ்மா சுவராஜ் கடுமையாக சாடியுள்ளார்.

மேலும், இந்த முறை புதிய பிரதமர் இம்ரான் கானின் பேச்சுவார்த்தைக்கான அழைப்பை ஏற்ற சிறிது நேரத்தில், பயங்கரவாதிகள் தாக்குதலில் இந்திய வீரர்கள் 3 பேர் பலி என செய்திகள் வெளியாகிறது. இதுபோன்ற பயங்கரவாத செயல்களுக்கு மத்தியில் எவ்வாறு அமைதிப்பேச்சுவார்த்தை நடத்துவது? என இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் சுஷ்மா சுவராஜ் கேள்வியெழுப்பியுள்ளார்.

மேலும், பொய்க்குற்றச்சாட்டுகளை சுமத்துவது பாகிஸ்தானின் திறமைகளில் ஒன்று எனவும் அவர் தெரிவித்துள்ளார். (7)

# இந்தியாவுடனான பிரச்சினைகளை போரினால் தீர்த்து விட முடியாது

## பாக்.வெளியுறவுத்துறை அமைச்சர் தெரிவிப்பு



(நியூயோர்க்)

இந்தியாவுடனான எந்த பிரச்சினையையும் போரினால் தீர்த்துவிட முடியாது என பாகிஸ்தான் வெளியுறவுத்துறை அமைச்சர் ஷா மெஹ்மூத் குரேஷி தெரிவித்தார்.

நியூயோர்க் நகரில் நடைபெற்ற ஐக்கிய நாடுகள் சபை கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக பாகிஸ்தான் நாட்டின் புதிய வெளியுறவுத்துறை அமைச்சர் ஷா மெஹ்மூத் குரேஷி அமெரிக்கா சென்றுள்ளார்.

மத்திய கிழக்கு நாடுகளில் மிகவும் பிரசித்திபெற்ற அல் ஜெசீரா தொலைக்காட்சிக்கு நேற்று முன்தினம் பேட்டியளித்தார்.

இந்தியாவுடனான உறவுகளில் ஏற்பட்டுள்ள பின்னடைவு தொடர்பாக இந்த பேட்டியின்போது கருத்து தெரிவித்த ஷா மெஹ்மூத் குரேஷி, அமைதிக்கான வழியில் இந்தியா ஓரடி முன்னெடுத்து வைத்தால் பாகிஸ்தான் இரண்டடி எடுத்து வைக்க தயாராக இருப்பதாக பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கான் முன்னர் தெரிவித்திருந்ததை சுட்டிக் காட்டினார்.

நாங்கள் அமைதிக்கான முதலடியை எடுத்து வைத்தோம். இருநாடுகளுக்கும் இடையில் பல்வேறு பிரச்சினைகள் உள்ளன. இருநாடுகளுமே அணு ஆயுத வலிமைமிக்க நாடுகளாக இருக்கும் நிலையில் பிரச்சினைகளை போரினால் சரிசெய்ய முடியாது.

போர்முறை என்பது இதில் தீர்வாகாது. பேச்சுவார்த்தை மட்டும்தான் ஒரே தீர்வாகும் எனவும்அவர்தெரிவித்தார். (7)

### இலங்கையில் சித்திரவதை; ஆர்ப்பாட்டங்களுக்கு அஞ்சி

# பொலிஸ்மா அதிபர் பூஜிதவின் ஸ்கொட்லாந்து பயணம் ரத்து

(கொழும்பு)

**பொலிஸ்மா அதிபர் பூஜித ஜெயசுந்தர ஸ்கொட்லாந்துக்கு மேற்கொள்ளவிருந்த பயணம் இறுதி நேரத்தில் இரத்துச் செய்யப்பட்டுள்ளதாக ஸ்கொட்லாந்து பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது. இலங்கையில் சித்திரவதைகள் தொடர்வதற்கு எதிராக, பொலிஸ்மா அதிபரின் பயணத்தின் போது ஆர்ப்பாட்டங்கள் நடத்த ஏற்பாடாகியிருந்த நிலையிலேயே இந்தப் பயணம் இரத்துச் செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.**



இலங்கையில் சட்டம் ஒழுங்கு விடயத்தில் ஏற்பட்டுள்ள குழப்ப நிலையை அடுத்து பொலிஸ்மா அதிபர் பூஜித ஜெயசுந்தர உள்ளிட்ட குழுவினர் பயிற்சிகளுக்காக நேற்று ஸ்கொட்லாந்துக்கு செல்லவிருந்தனர். ஸ்கொட்லாந்தின், பைப்பில் அமைந்துள்ள பொலிஸ் கல்லூரியில் அவர்களுக்கு ஒருவார கால பயிற்சி வழங்கப்படவிருந்தது. இதன்போது சமூக பொலிஸ் கட்டமைப்பு குறித்து விளக்கங்கள் வழங்கப்பட இருந்தன.

எனினும் இது தொடர்பில் தகவல் வெளியிட்ட கிரீன் கட்சியின் அரசியல் வாதியான ஜோன் பென்னி, இலங்கை பொலிஸ்மா அதிபரின் பயணத்தில் மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

இதேவேளை இலங்கை பொலிஸ்மா அதிபரின் பயணத்தை ஆட்சேபித்து எம்.ஐ.ஏ. என்று அழைக்கப்படும் இலங்கையில் பிறந்த பாடகியான மாதங்கியின் தலைமையிலும் ஆர்ப்பாட்டம் ஒன்று நடத்தப்படவிருந்தது.

இந்த நிலையில் இலங்கை பொலிஸ்மா அதிபரின் பயணம் ரத்து செய்யப்பட்டமை தொடர்பில் கருத்துரைத்துள்ள ஸ்கொட்லாந்தின் அரசாங்க பேச்சாளர், இந்த விடயம் ஸ்கொட்லாந்தின் பொலிஸ்மா அதிபரின் அதிகாரத்துக்கு உட்பட்டது என்று தெரிவித்தார்.

அதேநேரம் இலங்கையுடனான இங்கிலாந்தின் பொலிஸ் மற்றும் வெளிநாட்டு பயிற்சி திட்டங்கள் ஆபத்தான மதிப்பீட்டுக்கு உட்பட்டுள்ளதாக ஸ்கொட்லாந்து பொலிஸ் பேச்சாளர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# ஜனாதிபதித் தேர்தலில் ஞானசாரர் வியூகம் வகுக்கும் அமைச்சர்கள்

(கொழும்பு)

அடுத்த ஜனாதிபதி தேர்தலில் பொதுபல சேனாவின் பொதுச் செயலாளர் ஞானசார தேரர் போட்டியிடவுள்ளார்.

நீதிமன்ற அவதூறு குற்றச்சாட்டில் சிறைத்தண்டனை அனுபவித்து வரும் ஞானசார தேரருக்கு பொது மன்னிப்பு வழங்கப்பட்டால், அவரை ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட வைக்க 2 முக்கிய அமைச்சர்கள் முயற்சித்து வருகின்றனர் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஜனாதிபதி தேர்தல் நெருங்கும் போது, ஞானசார தேரருக்கு பொது மன்னிப்பு வழங்குமாறு இந்த, அமைச்சர்கள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் கோரிக்கை விடுக்கவுள்ளனர்.

அதன் பின்னர் ஞானசார தேரர் அல்லது பொதுபல சேனாவிலிருந்து வேட்பாளர் ஒருவரை ஜனாதிபதி வேட்பாளராக களமிறக்குவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்கு கிடைக்கக்கூடிய சிங்கள பௌத்த வாக்குகளை பிளவுபடுத்தும் நோக்கில் இந்த முயற்சி எடுக்கப்பட உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

எனினும் இந்த திட்டத்திற்கு ஞானசார தேரர் இது வரையில் இணக்கம் தெரிவிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.



இதேவேளை, பொது மன்னிப்பு வழங்கப்பட்ட எந்தவொரு பிரஜையும் தேர்தலில் போட்டியிட முடியும் எனவும், அதற்கு தடை கிடையாது எனவும் கொழும்பு பல்கலைக்கழகத்தின் சட்ட பீட சிரேஷ்ட விரிவுரையாளா பிரதீபா மஹானாமஹேவா தெரிவித்துள்ளார்.

சரத் பொன்சேகா, எஸ்.பி. திஸாநாயக்க போன்றவர்கள் ஜனாதிபதியின் பொது மன்னிப்பின் பின்னர் தேர்தலில் போட்டியிட்டனர் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# வெள்ளத்தால் 350இற்கும் மேற்பட்ட வியாபார நிலையங்கள் பாதிப்பு





(ஹற்றன்)

மலையக பிரதேசங்களில் நேற்று முன்தினம் பெய்த கடும் மழை காரணமாக அக்குரணை பிரதேசத்தில் ஏ9 வீதி சுமார் ஒரு கிலோமீற்றர் வரை நீரில் மூழ்கியது.

அக்குரணை 6 ஆம்கட்டை பிரதேசம் முதல் ஏழாம் கட்டை பிரதேசம் வரை சுமார் ஒரு கிலோ மீற்றருக்கும் அதிக தூரம் முற்றாக வெள்ளத்தால் பாதிக்கப்பட்டிருந்தது. சுமார் 350 இற்கும் அதிகமான வியாபார நிலையங்களும் வீடுகளும் நீரில் பகுதியளவு மூழ்கி பாதிக்கப்பட்டதனால் பல இலட்சம் ரூபாய் நட்டம் ஏற்பட்டுள்ளதாக வியாபாரிகள் தெரிவித்தனர். அத்துடன் பொலநறுவையில் இருந்து கண்டி நோக்கிப் பயணித்த பேருந்து ஒன்று வெள்ளத்தில் சிக்கியதையடுத்து பிரதேச மக்களின் கடும் முயற்சிக்கு மத்தியில் அதில் பயணித்த பிரயாணிகள் காப்பாற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## இன்று ஒரு தகவல்

### குற்றம் சொன்னால் குறைந்து போய்விடுவோமா?

என் நண்பர் ஒருவர் படு சோகமாக இருந்தார். என்ன என்றேன். தன் மனைவியுடன் காரில் போனபோது தேங்கிக் கிடந்த சாக்கடை நீர் கார் டயரின் உபயத்தால் மேலே தெளிக்கப் பெற்ற ஒரு சைக்கிள்காரர் தன் தாயைச் சம்பந்தப்படுத்தித் திட்டி விட்டாராம். அதனால் மூணு நாளா மனசே சரியில்லை என்றார்.

“அடச் சை! இதற்கா இப்படி ஆகிவிட்டீர்கள்? எவனோ தெருவில் முன்பின் தெரியாத ஒருவன் சொன்னான் என்பதற்காக உங்கள் அருமைத் தாய்க்குக் களங்கம் வந்துவிடுமா என்ன? தெரிந்தவர்களே சொன்னாலும் என் தாயை வம்புக்கிழுத்தால் நான் மனிதனாக இருக்கமாட்டேன் என்று உங்கள் எதிர்ப்பைத் தெரிவியுங்கள். உங்களுக்கு நிச்சயம் உண்மையில்லை என்று தெரிந்த விடயத்தைப்பிறர் குற்றச்சாட்டாகச் சொன்னாலும் அதைப் புறக்கணியுங்கள். இதெல்லாம் ஒரு கவலை மூட்டை என்று மூன்று நாளாய்ச் சுமக்கிறீர்களே! தூக்கி எறியுங்கள் அப்பால்” என்றேன்.

சிலர் சோம்பேறி என்றும் நன்றி கெட்டவன் என்றும் பெயர் சம்பாதிக்கிறார்கள். உடனே அனிச்ச மலராய் வாடிப் போகிறார்கள்.

நாம் என்ன மனித நடமாட்டமற்ற தீவிலா வாழ்கிறோம்.? ஆயிரக்கணக்கானவர்கள் மத்தியில் அல்லவா வாழ்கிறோம்! பலரும் பல விதமாகத்தான் விமர்சிப்பார்கள்; பேசுவார்கள்; குறை கூறுவார்கள். அதற்காக நாம் அத்தகைய குறைபாடு உடையவர்கள் என்று ஆகி விடுவோமா என்ன?

நீ ஓர் அயோக்கியன் என்கிற குற்றச்சாட்டு வருமானால் நான் அயோக்கியனல்ல என்று நிரூபிக்கவேண்டிய அவசியம் வந்துவிட்டது என்பது பொருள். முதலாளி நீ சரிவர வேலை செய்யவில்லை என்று சொன்னால் அவரிடம் நான் ஒரு மிக நல்ல வேலையாள் என்பதை நிலைநிறுத்திக்கொள்ள வேண்டிய தேவை உருவாகிவிட்டது என்று பொருள். ஆனால் அதுதான் உண்மை என்றால் நாம் மாற வேண்டிய தருணமிது என்பதை உணர வேண்டும். இதைவிட்டு விட்டுச் சொல்கிறவர்கள் மீது கோபம் கொள்வதும் அல்லது சுயமாக வெந்து நொந்து போவதுமாக இறங்கி விடுகிறார்கள். இதுவா தீர்வு?

குற்றச்சாட்டு உண்மை என்றால் நம்மை மாற்றிக் கொள்வதும் உண்மை இல்லையென்றால் அதைப் புறக்கணிப்பதுமாக இருந்தால் குற்றம் சொல்பவர்கள் தங்கள் வாய்களில் பிளாஸ்திரி ஒட்டிக் கொள்ள ஆரம்பித்து விடுவார்கள்.

**லேனா தமிழ்வாணன்**

# சிறுவர்களிடமிருந்து பறிக்கப்பட்டிருக்கின்ற சுதந்திரத்தை வென்று கொடுக்க வேண்டும்

## இன்று சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு ஜனாதிபதி வாழ்த்துச் செய்தியில் சுட்டிக்காட்டு



(கொழும்பு)

கல்வியின் போட்டித் தன்மையினாலும் நகர மயமாக்கம் அல்லது வாழ்க்கை முறையில் ஏற்பட்டிருக்கின்ற துரித மாற்றங்களினாலும் சிறுவர்களிடமிருந்து பறிக்கப்பட்டிருக்கின்ற சுதந்திரத்தையும் உணர்வுமிகு விசித்திரமான உலகையும் அவர்களுக்கு மீண்டும் வென்று கொடுப்பதற்கான வழிகளைக் கண்டறிவது பெரியோர்களான எம் அனைவரினதும் பொறுப்பாகும் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார். சர்வதேச சிறுவர் தினம் இன்றாகும். இதனை முன்னிட்டு ஜனாதிபதி விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியில்,

சிறுவர் பராயம் எனும் திரைப்படத்தை இரண்டாவது முறையாகவும் திரையிட இயலாதென்பது ஒரு பிரபல தத்துவக் கூற்றாகும். ஒரு சராசரி மனிதனுக்கு அவனது வாழ்நாள் முழுவதிலும் செலவிடுவதற்கு தேவையான அறிவை சேகரித்துத் தரும் சிறுவர் பருவமானது ஒரு மலர்ந்த குடிமகனின் வாழ்க்கைக்கு தங்க முலாம் பூசும் வாழ்க்கைப் பருவம் எனவும் குறிப்பிடலாம்.

வியக்கத்தக்க வர்ணங்களையும் தெய்வீக நாதங்களையும் கொண்டு மெருகூட்டப்பட்ட சிறுவர்களின் உலகத்தை எட்டிப்பார்ப்பதற்கு பெரியவர்களாகிய எமக்கு சர்வதேச சிறுவர் தினம் ஒரு அரிய வாய்ப்பாக அமைகின்றது. எட்டிப்பார்த்த போதிலும் எம்மால் ஒரு போதும் அணுக முடியாத கடந்து வந்த எமது சிறுவர் பராயத்தின் ஞாபகங்களினால் ஈரமாகிய இதயங்களுடன் சிறுவர்களை நோக்கவும் அவர்களை புரிந்து கொள்ளவும் சர்வதேச சிறுவர் தினம் எம்மை அழைக்கின்றது என்பதே எனது நம்பிக்கையாகும்.

அன்று எமது சிறுவர் பராயத்தில் நாம் சந்தித்த அநேகமான பொருளாதார மற்றும் சமூகசவால்களிலிருந்து இன்று எம்மால் எமது பிள்ளைகளை விடுவிக்க முடிந்துள்ளது. கல்வி, சுகாதாரம் ஆகிய சேவைகளை சகல தூரப் பிரதேசங்களுக்கும் வேறுபாடின்றி பெற்றுக் கொடுப்பதன் மூலம் உலகில் முன்னேற்றமடைந்த நாடுகளின் சமூக அபிவிருத்தி எல்லைகளை எட்ட எம்மால் முடிந் திருக்கின்றது. சிறுவர்களை தொழிலில் ஈடுபடுத்துவதைத் தவிர்த்து அனைத்து சிறுவர் களினதும் கல்வி உரிமையை உறுதிப்படுத்தி சிறுவர் உரிமைகள் பற்றிய சகலவித சர்வதேச உடன்பாடுகள் மற்றும் பிரகடனங்களுக்கு அமைவாக செயற்பட எம்மால் முடிந்திருக் கின்றது.

ஆயினும் சிறுவர் பராயத்தில் நாம் அனுபவித்த எமக்கு கிடைக்கப் பெற்ற எமது பிள்ளைகளுக்கு கிட்டாது போன ஒரு உரிமையும் இருக்கின்றது. நாம் அனுபவித்த சிறுவர் பராயத்தின் சுதந்திரமே அதுவாகும்.

கல்வியின் போட்டித் தன்மையினாலும் நகரமயமாக்கம் அல்லது வாழ்க்கை முறையில் ஏற்பட்டிருக்கின்ற துரித மாற்றங்களினாலும் சிறுவர்களிடமிருந்து பறிக்கப்பட்டிருக்கின்ற சுதந்திரத்தையும் உணர்வுமிகு விசித்திரமான உலகையும் அவர்களுக்கு மீண்டும் வென்றுகொடுப்பதற்கான வழிகளைக் கண்டறிவது பெரியோர்களான எம் அனைவரினதும் பொறுப்பாகும்.

வீரியத்துடன் முன்னோக்கி செல்க, சிறுவர்களை பலப்படுத்துக என்ற தொனிப்பொருளில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இவ்வருட சர்வதேச சிறுவர் தினக் கொண்டாட்டங்கள் அந்த பொறுப்பினை மீண்டும் மீண்டும் எமக்கு நினைவூட்டுவதாகவே அமைகின்றன என்பது எனது நம்பிக்கையாகும்.

இன்றைய தினம் கொண்டாடப்படும் சர்வதேச சிறுவர் தினத்தில் சகல சிறுவர்களுக்கும் பாதுகாப்பான வாழ்க்கையை உறுதிசெய்வதற்கான எனது உயரிய அர்ப்பணிப்பினை மீண்டும் வெளிப்படுத்தும் அதேவேளை சர்வதேச சிறுவர் தினத்தையொட்டி ஏற்பாடு செய்யப்பட்டுள்ள சகல வேலைத்திட்டங்களுக்கும் எனது நல்வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றேன் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

## உலக சைவத் திருச்சபைக்கு சிவராசா காணி அன்பளிப்பு



(சாவகச்சேரி)

உலக சைவத் திருச்சபைக்கு கட்டடம் அமைப்பதற்காக தொழிலதிபர் வைத்திலிங்கம் சிவராசா கடந்த வெள்ளிக்கிழமை காணியை வழங்கினார். சாவகச்சேரி வாரிவனம் முத்துமாரி அம்மன் ஆலயத்திற்கு முன்பாக உள்ள காணியே இவ்வாறு உலக சைவத் திருச்சபை கட்டடம் அமைப்பதற்கு வழங்கப்பட்டது. காணியை உலக சைவ திருச்சபை தலைவரும், கல்வி இராஜாங்க அமைச்சருமான இராதாகிருஷ்ணனிடம் வழங்கினார்.

இந்நிலையில் கட்டட வேலைகள் இவ் வருட இறுதிக்குள் நிறைவுக்கு வரும் என இராதா கிருஷ்ணன் தெரிவித்துள்ளார். (இ-30)

## ஊ.சே.நிதியத்திலிருந்து ரூ.500மில். விதிமுறைகளை மீறி பெற்றுக்கொடுப்பு

(கொழும்பு)

எமிரேட்ஸ் விமான நிறுவனத்திடமிருந்த ஸ்ரீலங்கன் விமான நிறுவனப் பங்குகளைக் கொள்வனவு செய்ய ஊழியர் சேமலாப நிதியிலிருந்து 500 மில்லியன் ரூபாயை சட்ட விதிகளை மீறிப் பயன்படுத்தப்பட்டதாக மத்திய வங்கியின் ஊழியர் சேமலாப நிதியத்தின் பொறுப்பதிகாரியான நாளினி மல்காந்தி பண்டார ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு முன்னிலையில் நேற்று முன்தினம் சாட்சியமளித்த போது தெரிவித்துள்ளார்.

இது தொடர்பான பல ஆவணங்களையும் அவர் ஆணைக்குழுவிடம் சமர்ப்பித்துள்ளார்.

கடந்த 2010 இல் இந்தப் பங்குகளை மீட்டெடுக்கப் பணம் பெறப்பட்டதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு நேற்று முன்தினம் காலை கூடிய போது ஊழியர் சேமலாப நிதியத்தின் பொறுப்பதிகாரி நாளினி மல்காந்தி பண்டார சாட்சியமளித்தார்.

மேலதிக சொலிசிற்றர் ஜெனரல் ஜனாதிபதி சட்டத்தரணி நீல் உனம்புவவின் கோரிக்கையின் பேரில் சாட்சியமளித்த நாளினி மல்காந்தி,

மேற்படி நிதியை பயன்படுத்த விடுத்த கோரிக்கைகள் தொடர்பில் எந்தவித சிபாரிசும் இல்லாமல் நிதி அனுமதிக்கப்பட்டிருப்பதாகவும் அது தொடர்பான எந்த விதமான ஆவணங்களும் கிடையாதெனவும் தெரிவித்தார்.

இலங்கை வங்கியின் மேலதிக பொது முகாமையாளரான பி. ஏ. லயனல் மற்றும் இலங்கை மத்திய வங்கியின் அதிகாரிகள் சிலரது நிலைப்பாட்டுக்கு அமையவே இது இடம் பெற்றிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

ஊழியர்களுக்குச் சொந்தமான ஊழியர் சேமலாப நிதியிலிருந்து ஏதாவதொரு தேவைக்காக முதலீடு செய்யப்பட வேண்டுமாக இருந்தால் அதனை செய்ய மத்திய வங்கி ஆளுநருக்கே உரியது.

அன்றைய கால கட்டத்தில் அதனைச் செய்ய வேண்டியவர் ஆளுநராகவிருந்த அஜித் நிவாட் கப்ராலாவார் என்றும் அவர் தெரிவித்தார்.

ஆணைக்குழுவின் தலைவர் ஓய்வுபெற்ற உயர் நீதிமன்ற நீதியரசர் அனில் குணரத்னவின் கேள்வியொன்றுக்கு பதிலளித்த போதே சாட்சி இவ்வாறு கூறினார்.

ஆணைக்குழுவின் உறுப்பினரொருவரான ஓய்வு பெற்ற உயர்நீதிமன்ற நீதிபதி பியசேன ரணசிங்க கேட்ட கேள்வியொன்றுக்குப் பதிலளித்த சாட்சி தெரிவிக்கையில், ஊழியர் சேமலாப நிதியிலிருந்து எந்த முதலீட்டுக்கும் அனுமதி வழங்குவதற்கு அமைச்சரவைக்குக் கூட முடியாது. அதனை மத்திய வங்கியின் நிதிச்சபை மட்டுமே தீர்மானிக்க முடியும் என்றும் தெரிவித்தார்.

ஊழியர் சேமலாப நிதியிலிருந்து எமிரேட்ஸ் பங்குகளை கொள்வனவு செய்ய பயன்படுத்துமாறு அமைச்சரவையோ திறைசேரியோ அனுமதி வழங்கவில்லை.

2010ஆம் ஆண்டு மே மாதம் 4ஆம் திகதி அன்றைய நிதியமைச்சராக இருந்த ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, எமிரேட்ஸ் பங்குகளைக் கொள்வனவு செய்ய அமைச்சரவைப் பத்திரமொன்றைத் தாக்கல் செய்திருந்தார். அதில் குறிப்பிடப்பட்டிருந்த விபரம், 43.63 வீதமான பங்குகளை கொள்வனவு செய்வதற்கு இலங்கை வங்கியும், காப்புறுதிக் கூட்டுத்தாபனமும் மேற்கொள்ள வேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்தது. அதில் ஊழியர் சேமலாப நிதியின் மூலம் கொள்வனவு செய்யுமாறு குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

2010 ஜூலை 6ஆம் திகதி இலங்கை வங்கியின் மேலதிகப் பொது முகாமையாளர் பி. ஏ. லயனல் எழுத்து மூலம் இலங்கை மத்திய வங்கியின் நிதி முகாமைத்துவ குழுவுக்கு ஊழியர் சேமலாப நிதியிலிருந்து 500 மில்லியன் ரூபாவை பங்குகளைக் கொள்வன்வு செய்ய இலங்கை வங்கியின் நிறுவனக் கிளையின் நடைமுறை கணக்குக்கு செலுத்துமாறு கூறியிருந்தார். அதன் பிரகாரமே அது நடந்துள்ளது. உடன்படிக்கையோ சட்டபூர்வமான எழுத்தாவணங்களோ அதில் காணப்படவில்லை. அத்துடன் இது நடந்ததா என்பது குறித்த ஆவணங்களும் கோப்புகளில் கிடையாது. 1.8 மில்லியன் பங்குகளை ஊழியர் சேமலாப நிதியத்துக்கு பெற்றுத் தரப்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

ஓய்வுபெற்ற உயர் நீதிமன்ற நீதியரசர் அனில் குணரத்ன தலைமையில் ஓய்வுபெற்ற மேல்நீதிமன்ற நீதிபதி பியசேன ரணசிங்க, ஓய்வுபெற்ற பிரதி கணக்காய்வாளர் நாயகம் எச். ஜி. ஏ. ஹெரல்ட் உட்பட ஸ்ரீலங்கன் விமான சேவை, ஸ்ரீலங்கன் கேட்டரிங், மிஹின் லங்கா நிறுவனம் உள்ளிட்ட உயரதிகாரிகள் முன்னிலையிலேயே இந்த சாட்சியம் வழங்கப்பட்டது. அரச சட்டத்தரணி சஜித் பண்டார ஆணைக்குழுவுக்கு ஒத்துழைப்பு வழங்கினார். (இ-7)





உடுவில் கமநல சேவை நிலைய கமக்கார அமைப்பினால் விவசாய பிரதி அமைச்சர் அங்கஜன் இராமநாதனைக் கௌரவிக்கும் நிகழ்வு கடந்த 28 ஆம் திகதி குப்பிளான் கமக்கார அமைப்பின் பொது நோக்கு மண்டபத்தில் இடம்பெற்றது. கமக்கார அமைப்பின் தலைவர் நவரத்தினராசா தலைமையில் நடைபெற்ற கௌரவிப்பு நிகழ்வில் விவசாயப் பிரதி அமைச்சர் அங்கஜன் இராமநாதன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார். யாழ்.மாவட்ட விவசாயப் பணிப்பாளர் சசிபிரபா கைலேஸ்வரன், உடுவில் பிரதேச சபைச் செயலாளர் ஜெயகாந்த், யாழ்.மாவட்ட விவசாய திணைக்கள உதவி ஆணையாளர் நிசாந்தன், பிரதி மாகாண விவசாயத் திணைக்களப் பணிப்பாளர் அஞ்சனாதேவி ஸ்ரீரங்கன், யாழ்.மாவட்ட கமக்கார அமைப்பின் அதிகார சபையின் தலைவர் தியாகலிங்கம், இணுவில் கிழக்கு மகளிர் கமக்கார அமைப்பின் தலைவர் இராசேந்திரம் ராதா ஆகியோரும் கௌரவிப்பு நிகழ்வில் இணைந்து சிறப்பித்திருந்தனர்.

# இந்த நாட்டிலிருந்து மதுவையும்,புகைத்தலையும் ஒழித்து நல்லொழுக்க சமுதாயத்தை உருவாக்குவோம்

நோயற்ற வாழ்வே உல கின் நிறைந்த சுகம் என்பது புத்தபக வானின் முதுமொழி யாகும். இந்த சுகத்தை அனுபவிக்க வேண்டு மாயின் மக்களாகிய நாம் நாட்டில் நற்பிரஜைகளாக வாழ்வதற்குச் சிலநற்பழக்கவழக்கங்களைக் கடைப்பிடிக்க வேண்டும். அந்தவ கையில் நாம் ஒவ்வொருவரும் போதை தரும் போதைவஸ்துக்க ளையும் புகைத்தலையும் கைவிட்டு நல்லொழுக்கம் உடையோராக வாழப்பழகிக் கொள்ளவேண்டும. நல் லொழுக்கம் என்பது கடையில் வாங்கும் பொருளல்ல. அது சிறு வர் தொடக்கம் முதியோர் வரைக டைப்பிடிக்க வேண்டிய ஒன்றாகும்.

ஒருமனிதன் நல்லொழுக்கத் தைக் கடைப்பிடித்துவருவானா யின் கண்டிப்பாகத் தீயபழக்கங் களான போதை தரும் போதை வஸ்துக்களையும் புகைத்தலை யும் நாடமாட்டான். நமது நாடு ஒருசிறியநாடு. மதுபாவனை யால் வருடம் தோறும் 30 ஆயிரம் பேர் மரணிக்கின்றார்கள். புகைத்த லால் 25 ஆயிரம் பேருக்குமேல் மரணிக்கின்றார்கள். இலங்கை யில் சிறுவர் பாலியல் துஷ்பிர யோகம் மிகமோச மானநிலையில் இடம் பெற்று வருகின்றது. 20சத வீதமான சிறுவர்கள் இவ்வாறான துஷ்பிரயோகங்களில் ஈடுபடுத் தப்பட்டு வருகின்றனர். இலங்கை யில் நாள் ஒன்று க்கு புகைத்தலுக்கு 33 கோடி ரூபாவும், மற்றும் 30 கோடி ரூபா மதுவுக்கும் செலவு செய்கின்றார்கள். எனவே தாய், தந்தையர்கள் சிறுவர்களின் விட யத்தில் அக்கறை எடுத்து நல் லொழுக்கத்தை ஊட்டி வளர்க்க வேண்டும்.

பிள்ளைகள் வளர்ந்ததும் பாலி யல் தப்பைபுரியாதிருக்க அவர் களை இப்பருவத்திலேயேநெறிப் படுத்த வேண்டிய பொறுப்பு ஒவ் வொரு பெற்றோரினதும் கடமை யாகும். அதற்கான ஆலோசனை கள் பாடசாலையில் கல்வி கற்கும் பிள்ளைகளுக்கு தொலைபேசி வாங்கி கொடுப் பதை தவிருங்கள். ஏனெனில் இன்றுநாட்டில் நடை பெறுகின்ற அனைத்து சீரழி விற் கும் முக்கியகாரணமாக இருப்பது தொலைபேசி பாவனையே ஆகும். திரைப் படம் பார்ப்பதை தவிர்த்தல் அல்லது குறைத்தல், வாழ்க்கை யின் சீரழிவுகளை எடுத்துரை யுங்கள், பிள்ளைகளுக்கு கவனிப் பையும், பாதுகாப்பையும் வழங் குங்கள், தனிமையில் வெளியே செல்வதை தவிருங்கள், பாலியல் சம்பந்தமாக பேசுவதை தவிருங் கள், வீட்டில் தனித்து இருப்பதை தவிருங் கள். சிறுபிள்ளைகள் என் றாலும் அவர்களுடன் மற்றவர்க ளின் தொடர்புகளை கவனியு ங்கள், பிள்ளைகளுடன் சேரும் நண்பர்களை பற்றி அறிந்து நல்வ ழிப் படுத்துங்கள். பெற்றோரா யினும் பிள்ளைகள் முன் முரண் படாதீர்கள்.

இன்று நல்லொழுக்கம் என்பது கேள்விக்குறியாகவுள்ளது. இதற் குப் பெற்றோர்களும் காரணமா கின்றார்கள். எத்தனையோ குடு ம்பங்களில் பிள்ளைகளைக் கொண்டு மதுபானம், சிகரெட் என்பவற்றைவாங்குவதைக்காணக் கூடியதாகவுள்ளது. மேலும் இல் லங்களில் மது அருந்துவது, சிக ரெட் புகைப்பது நடைபெற்றுக் கொண்டு வருகின்றன. எனவே, இப்படியான குடும்பங்களிலுள்ள பிள்ளைகள் எப்படி நல்லொழுக் கத்தைப் பேணமுடியும் என்பது கேள் விக் குறியாகவுள்ளது. மேலும் சில தந்தைமார்கள் தாம் மது அருந்துவது மட்டும் இல்லாமல் வீடுகளுக்கு நண் பர்களையும் அழைத்து வந்து மது அருந்துவ தைக் காணக்கூடியதாகவுள்ளது. இதனால் நல்லொழுக்கம் மட்டு மல்லாமல் கலாசார சீரழிவுகளும் நடைபெறு வதைக் காணக் கூடியதாக வுள்ளது.

அந்தவகையில் சமூகத் தில் மதுபாவனையை குறைக்க வேண் டியது காலத்தின் கட்டாயதேவை. மதுவுக்கு அடிமையான கணவன் மார் உள்ள குடும்பங்களின் வீட் டில் அடுப்பு எரிய உதவு வது பெண் களே. தமது தேவை களை தியாகம் செய்து குடும்பத்தை ஒருநிலைப்ப டுத்தி ஓரளவு பாதுகாப்பான இல் லச் சூழலைப் பிள்ளைகளுக்கு ஏற்படுத்தி கொடுக்கிறார்கள்.

தன்னை வருத்திப் பிள்ளைகளின் கல்வி வசதியைப்பார்த்துக் கொள் ளும் பெண்கள் நல்லொழுக்கத்தை கடைப்பிடிக்காவிட்டால் பிள்ளைக ளின் எதிர் காலம் என்ன வாகும்:

எனவே நல்லொழுக்கத்தை கடைப்பிடிக்க வேண்டுமாயின் முதலில் தாய், தந்தையர் நல்லொ ழுக்கத்தைப்பேணவேண்டும் பேணி னால் தான் பிள்ளைகளும் பேணு வார்கள். ஆகவே, நல்லொழுக்க சமுதாயத்தை உருவாக்க வேண் டுமாயின் முதலில் இந்நாட்டிலி ருந்து மதுவையும், புகைத்தலை யும் ஒழிக்கவேண்டும் என்றுவட பிரதேச நல்லொழுக்க சம்மேள னம் கேட்டுக் கொள்கின்றது.

**செ.குமாரசிங்கம்(ஜே.பி) செயலாளர், வட பிரதேச நல்லொழுக்க சம்மேளனம்.**

## எழுதுமட்டுவாழில் மக்கள் குறைகேள் கலந்துரையாடல்

எழுதுமட்டுவாழ் தெற்கு கிராம உத்தியோகத்தர் பிரிவில் கிராம மட்ட பொது அமைப்புக்களின் ஏற்பாட்டில் மக்கள் குறைகேள் கலந்துரையாடல் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

கிராம அபிவிருத்திச் சங்க தலைவர் தலைமையில் இடம் பெற்ற இந்த கலந்துரையாடலில் பாராளுமன்ற உறுப்பினர் த.சித் தார்த்தன் சார்பில் வடக்கு மாகாண சபை உறு ப்பினர் பா.கஜதீபன் கலந்து கொண்டார். இதன்போது கிராம மக்கள் தமது கிராமத்தின் அடிப் படை தேவைகள் குறித்து கருத் துக்களை முன்வைத்தனர். எழுது மட்டுவாழ் நாகர் கோவில் பிரதான வீதி புனரமைப்பு, கிராம உள்ளக வீதிகள் புனரமைப்பு, வீதி விளக் குகள் பொருத்துதல் போன்ற கோரிக்கைகளை முன்வைத் தனர். இவை தொடர் பாக உரிய தரப்புக்களுடன் பேசி அனைவ ரின் ஒத்துழைப்புக்க ளுடனும் நிறைவேற்ற முயற் சிக்கப்படும் என மாகாண சபை உறுப்பினர் பா.கஜதீபன் தெரிவித்தார். இம் மக்கள் சந்திப்பில் சாவகச்சேரி பிரதேச சபை 'உபதவிசாளர் செ.மயூ ரன், வடக்கு மாகாண விவசாய அமைச்சரின் இணைப்புச் செய லாளர் ஞா.கிஷோர் மற்றும் கிராம பொது அமைப்புக்களின் பிரதி நிதிகள் பொது மக்கள் என பலரும் கலந்து கொண்டனர். (இ-89)

# பிறந்த எண்களின் அதிர்ஷ்ட இரகசியம்

## எண் 7 (கேது)


### (தன்வழி நடப்பவர்கள்)

ஏகாந்த வாசம் செய்யும் இவர்கள் எப்போதும் யோசித்த வண்ணமிருப் பார்கள். இவர்கள் உடலள வில் இருப்பது ஓரிடமாக இருந்தாலும் உள்ளம் ஆத்மீகமான கற்பனை யிலும் இறைவனைப் பற்றிய சிந்தனையிலும் மூழ்கி யிருக்கும். கண்ணியமான மனிதர்கள். கேதுவின் முழு ஆதிக்கம் படைத்த வர்கள்.உயரமான தோற்றம் உடையவர்கள். இவர்கள் முன் கோபக்காரர்கள் என்று பெயர் எடுப்பார் கள். காரசாரமாகப் பேசு வார்கள். பேச்சுடன் இல் லாமல் கைகலப்பு வரை சென்று விடுவார்கள். சந் தோசமான சூழ்நிலை என் றால் சகஜமாகப் பேசு வார்கள். மற்ற நேரங்களில் கற்பனை வயப்பட்டு ஏகா ந்த வாசத்தையே பெரிதும் விரும்புவார்கள்.

அடிக்கடி எதையோ பறி கொடுத்தவர்கள் போல ஏங்குவார்கள். எதற்கும் இவர்கள் மற்றவர்களைப் பின்பற்றமாட்டார்கள். எந் தத் தொழிலில் ஈடுபட்டா லும் தனது முடிவின் படியே செயற்படுவார்கள். இவர்கள் கருத்துக்கு தனித் தன்மை இருக்கும். மற்ற வர்கள் இவர்களைப் பின் பற்றி நடப்பார்கள். மக் கள் மனதை மாற்றும் சக்தி இவர்கள் பேச்சுக்கு உண்டு. சலியாத உழைப்பினால் மேன்மை அடைவார்கள். மகான்களாகவும் தீர்க்க தரிசிகளாகவும் மேதாவியா கவும் இருப்பார்கள். இவர் கள் முழுமையாக ஒரு கட மையை முடிக்கும் முன்பு இவர்கள் வாழ்க்கை முற் றுப் பெற்று விடும். சாதா ரண விடயத்திலும் ஏதாவது குறை இருந்து கொண்டே இருக்கும். இவர்களின் முயற்சிகள் முடிவை நெரு ங்கும் போது நின்று போகும். பிறந்த திகதி எண்கள் 7-2 ஆனது பெருத்த முன்னேற் றத்தையும், 7-5 ஆனது பெருத்த வெற்றி அடைவ தாகவும் 7-7 ஆனது எதிர்பாராத வெற்றிகளையும் கொடுக்கக் கூடியதாகவும் அமையும். 7-9 மேன்மை யான வாழ்க்கையாக முடி யும். பிற்போக்கான காரி யங்க ளில் ஈடுபட்டால் தன் னிலை தாழ்ந்து விடுவார் கள். சமதர்ம காரியங்களில் ஈடுபட்டால் இப்பூவுலகில் இவர்கள் பெயர் உன்னத மான நிலையுடன் நிலைத் திருக்கும். இல்லற வாழ் வைத் தியாகம் செய்யச் செய்ய தெய்வீகத் தன்மை யும் வாக்கு வலிமையும் பெறுவார்கள்.

**கேது ஆதிக்கத்தினரின் உடற் தோற்றம், உணவு, நோய் மற்றும் மருத்துவ முறைகள்**

இவர்கள் பெரும்பாலும் உயரமாகவே தெரிகின்றனர். இவர்கள் நல்ல லட்சண மான முகமுடையவர்கள். சிறிது வளைந்த முகமும் திடமான மேல் உதடும் அமைந்திருக்கும். புருவங் கள் நன்கு அடர்வு மிகுந்து அமைந்திருக்கும். மீசை மிகவும் அடர்த்தி மிகுந்து பெரிதாக அமைந்திருக்கும். அமைதியான முகம் ஆன் மீக சிந்தனையுடன் அமைந் திருக்கும். காந்தப் பார்வை உடையவர்கள். கூர்மையான மூக்கும் புருவமும் பரந்த நீண்ட நெற்றியும் அமைந்தி ருக்கும். விரல்கள், பாதங் கள் நீண்டு அமைந்திருக் கும். எடுப்பான தோற்றம் உடையவர்கள். கவர்ச் சியாகக் காட்சியளிப்பார் கள். கடினமான தலைப்பா கமும் எலும்பும் நரம்பும் மிகவும் உறுதியாக இருக் கும். முன்பற்கள் மற்றவர் களை விட பெரிதாக இருக்கும். தடித்த இடுப்புப் பாகம் இருக்கும். பெரிய நெற்றியும் நேரான பார்வை யும் இருக்கும். கம்பீரமான தோற்றமுடையவர்கள். அம் சமான வயிறு இருக்கும்.




குழந்தை போன்ற முகம் உடையவர்கள். காது பரந்து எடுப்பாக இருக்கும். திட மான மேல் வாய் அமை ந்திருக்கும் மலச்சிக்கல், அதனால் மூட்டுவலி, எலு ம்பு நோய்கள் இவர்களுக்கு வரும். வாதம் சம்மந்தமான பிடிப்புக்கள், வியர்வை சம்பந்தமான நோய்கள், தோல் கட்டிகள் வரும். கீரை வகைகள் மற்றும் சாறுள்ள பழங்கள் இவர்களுக்கு நல் லது. திராட்சை, அன்னாசி, முளைக்கீரை, அரைக் கீரை போன்றவற்றை உணவில் அடிக்கடி சேர்த்துக் கொள்ள வேண்டும்.

**கேது ஆதிக்கத் தினரின் தொழில்கள்**

கலை சார்ந்த தொழில் க்ள், கணனி, கணிதம், விஞ்ஞானம், இரசாயனம், கதை, காவியம், நாட்டியம், நடனம், சினிமா, சங்கீதம், பாடல்கள், நடிப்பு, இயக் கம் போன்ற துறைகளில் சிறந்து விளங்குவார்கள். அரசியல், சினிமா, விளை யாட்டு, எழுத்து மற்றும் பேச்சு, அச்சகம், ஓவியம், திரைப்பட ஒலிப்பதிவு, இசையமைப்பாளர்கள், கட்டடக் கலைஞர்கள், ஆன்மீகம், சேவை மையங் கள், சட்டம், நீதித் துறை கள், திரவப் பொருட்கள் தயாரிப்பு, மருந்து தயாரி த்தல் மருந்துக்கடைகள் ஏற் றுமதி இறக்குமதி தொழில் நுட்பத்துறைகளில் அதிகம் ஈடுபடுவார்கள். வியாபா ரம், கப்பல், வாணிபம், பெற்றோலியம், எரிபொ ருள், பணம் கொடுக்கல் வாங்கல், இரசாயனம் போன்ற துறைகளில் அதி கம் ஈடுபடுவார்கள். அலை ந்து திரிந்து தொழில் செய் வார்கள். மருத்துவ அறு வைச் சிகிச்சை, மயக்க மருந்துகள் கையாள்வது, எக்ஸ்ரே, ஸ்கான், மருத் துவ தொடர்புடைய சாதன ங்கள் தயாரிப்பு மற்றும் விற்பனை போன்ற தொழி ல்களால் பெரும் பணம் சம்பாதிப்பார்கள். தொலைத் தொடர்பு கம்யூனிகேஷன் தொழில்களால் மேன்மை யுண்டு.

(தொடரும்....)

# இலங்கையில் தமிழர்

## ஒரு முழுமையான வரலாறு (கி.மு.300– கி.பி.2000)

கலாநிதி மு.குணசிங்கம்

57



தஞ்சை அரண்மனை

> “உள்நாட்டு அரசியல் மாற்றங்களின் விளைவாக வன்னிச் சிற்றரசுகள் சில, மிகப் பலமுள்ள சிற்றரசுகளாகவும் காணப்பட்டன. இலங்கையில் அடிக்கடி நடைபெற்ற உள்நாட்டு, வெளிநாட்டுப் படையெடுப்புக்களின் விளைவாகவும் இவ் வன்னிச் சிற்றரசுகளில் சில, மிக முக்கியத்துவம் வாய்ந்த படையுதவி வழங்கும் அமைப்புகளாக விளங்கியிருப்பதை வரலாற்று ஆதாரங்கள் மூலம் அறியமுடிகிறது”

## யாழ்ப்பாண இராச்சியமும் வன்னிச் சிற்றரசுகளும் (கி.பி. 1200-கி.பி. 1500)

காடவன், காடவ என்பன இலக்கியத்திலும் சாசனங்களிலும் பொதுவாக காணப்படுகின்றன. காடவன் என்பது சங்க இலக்கியத்தில் வருகின்ற முல்லைநில மக்களைப் பொதுவில் குறிக்கும் ஒரு பெயராகக் கொள்ளலாம். காடும் காடு சார்ந்த நிலமுமாகிய முல்லைநில மக்களை ஆளுகின்ற மன்னனைக் 'காடவர் கோன்' என சிலை எழுபது என்னும் இலக்கியத்தில் காணமுடிகிறது.

மேலும், கல்லாடம், வன்னியர் புராணம் ஆகிய தமிழ்மரபு நூல்களிலும் வன்னியர் தோற்றம் பற்றிய விபரங்களைக் காண முடிகிறது. வன்னியரைப் பற்றிய சாசனக் குறிப்புகள் சோழர் காலத்துக் கல்வெட்டுகளிலும் காணப்படுகின்றன.

உதாரணமாக, இரண்டாம் இராசேந்திரசோழனுடைய காலத்தில் (1052-1064), வன்னியதேவன் என்னும் பிரதானி சாளுக்கியரோடு நட்புறவு கொண்டிருந்ததாயும், அவனைச் சோழர் தமது படையெடுப்பால் வெற்றி கொண்டதாகவும் அக்கால சோழர் கல்வெட்டுக் கூறுகின்றது.

அதேபோல் இரண்டாம் ராஜராஜன் காலத்து (1163-1178) கல்வெட்டு ஒன்று வன்னியப்பற்று என்னும் நிலப்பிரதேசத்தைக் குறிப்பிடுகின்றது. அதேபோன்று, வன்னி, வன்னியப்பற்று நிலப் பகுதிகளை ஆட்சிசெய்த அரசர்களை வன்னியர் மக்கள் நாயன், அதாவது, வன்னிமக்களின் அரசன் என்ற பொருளில் பொறிக்கப்பட்ட பல கல்வெட்டுகள் சோழர் கால ஆட்சியின் பொழுது எழுதப்பட்டவையாகக் காணப்படுகின்றன.

இவ்வன்னியர்களுக்கும், சோழர் கால ஆட்சியில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்து விளங்கிய வேளைக்காரப் படையினருக்கும் இடையில் நெருங்கிய தொடர்புகள் இருப்பதனைச் சோழர்காலக் கல்வெட்டுகள் மூலம் அறியமுடிகிறது. சோழப் பேரரசின் காலத்தில் தென்னிந்தியாவிலும், இலங்கையிலும் இராணுவ சேவையில் ஈடுபட்டு இருந்தவர்களில் வேளைக்காரப் படையினர் முக்கிய இடம்பெறுகின்றனர்.

வேளைக்காரர் படைகள் பலவற்றின் பெயர்களைச் சோழர் காலக் கல்வெட்டுகளில் காண முடிகிறது. அரண்மனை, இராசதானி, பெருங்கோவில்கள் ஆகியவற்றின் காவல் நிலையங்களில் வேளைக்காரர் நிலை கொண்டிருந்தனர்.

சோழர் காலத்துப் போர்ப் படைகளில் முன்னணியில் நின்ற படைகளாக இவை காணப்படுகின்றன. சோழராதிக்கம், இலங்கை, பாண்டிநாடு, கங்கபாடி ஆகியவற்றில் வெற்றியுடன் பரவுவதற்கு, இவ் வேளைக்காரரின் பங்களிப் பு மிக முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாகக் காணப்படுகின்றது.

இலங்கைமீது சோழர் படையெடுத்த காலங்களில், இவ் வேளைக் காரப் படையினரே முன்னணியில் செயற்பட்டவர்கள். அவ்வாறு இலங்கைக்குச் சென்ற வேளைக் காரப் படைப் பிரிவினர், நிரந்தரமாகவே அங்கு தங்கிவிட்டனர் எனக் கூறவும் இடமுண்டு.

விஜயபாகு மன்னன் சோழரைத் தோற்கடித்துப் பொலநறுவையில் தனது ஆட்சியை நிறுவிய பின்னரும், இவர்கள், விஜயபாகு, பராக்கிரமபாகு ஆகியோரின் படைகளில் தொடர்ந்தும் சேவையாற்றி வந்திருக்கின்றனர்.

மேலும், பொலநறுவை மன்னர்களின் ஆட்சிக்காலத்தில் இவ் வேளைக்காரப் படையினருக்கு நிலங்கள் நன்கொடையாக வழங்கப்பட்டும், சிற்சில வன்னிப் பிராந்தியங்களை அவர்களே நிர்வகித்ததாகவும் வரலாற்று ஆதாரங்கள் மூலமாகவே அறியமுடி கிறது.

ஏற்கனவே வன்னிப் பிரதேசங்களிலிருந்த அரச அமைப்புகளும், இவ்வேளைக்காரப் பிரிவினரும் காலப்போக்கில் ஒருங்கிணைந்து, உருவாக்கப்பட்டதாகவே வன்னிமைகள் காணப்படுகின்றன. இவ் வன்னிப் பிரதேச மக்கள் வரலாற்றுக்காலம் தொட்டு இப் பிரதேசங்களில் வாழ்ந்து வந்ததுடன் அங்கு அரச அமைப்புகளை ஏற்படுத்தியிருந்ததாகவும், முன்னைய அத்தியாயங்களில் கூறப்பட்டது.

சோழராட்சியின் பொழுதும், அதனையடுத்த பொலநறுவை ஆட்சிக் காலத்தின்போதும், இவ் வேளைக்காரப் படையினரும், தென்னிந்தியாவிலிருந்து வரவழைக்கப்பட்ட வன்னியர்களும், ஏற்க னவே, பல்லவர் காலத்திலிருந்து இலங் கைக்கு வந்த வணிக கணத்தினரும் மேற்படி வன்னிப்பிரதேசங்களில் குடியேறி அங்கிருந்த பூர்வீக வன்னி மக்களுடன் இணைந்து கொள்வதனையே அவதானிக்க முடிகிறது.

தென்னிந்தியாவிலிருந்து வந்தவர்களில் தமிழர், கன்னடர், மலையாளிகள், தெலுங்கர் போன்ற இனக்குழுவினரும் பல்வேறு சாதிப் பிரிவுகளைக் கொண்டவர்களும் அடங்கியுள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இவ்வாறாக, உருவாகிய வன்னியர்கள், இலங்கையின் வட பிரதேசங்களிலும் காடு சார்ந்த உள்ளூர் பகுதிகளிலும் உள்ள குறுநிலப் பிரிவுகளில் பரம்பரை உரிமையாக ஆட்சி புரிந்துவந்த ஒரு பகுதியினராகக் காணப்படுகின்றனர்.

உள்நாட்டு அரசியல் மாற்றங்களின் விளைவாக வன்னிச் சிற்றரசுகள் சில, மிகப் பலமுள்ள சிற்றரசுகளாகவும் காணப்பட்டன. இலங்கையில் அடிக்கடி நடைபெற்ற உள்நாட்டு, வெளிநாட்டுப் படையெடுப்புக்களின் விளைவாகவும் இவ் வன்னிச் சிற்றரசுகளில் சில, மிக முக்கியத்துவம் வாய்ந்த படையுதவி வழங்கும் அமைப்புகளாக விளங்கியிருப்பதை வரலாற்று ஆதாரங்கள் மூலம் அறியமுடிகிறது.

பாளி மொழியில் எழுதப்பட்ட மகாவம்ச நூலில் வன்னி மன்னர் பற்றிப் பல இடங்களில் குறிப்பிடப்படுகின்றது. குறுநிலப் பிரிவுகளையும் அவற்றின் அரசர்களையும் வளங்கள் நிறைந்த நிலப் பகுதிகளையும் சிங்கள மொழி வழக்கில் வன்னி என்பர்.

மகாவன்னி, சிரிவன்னி என்னும் பிரிவுகள் பற்றியும், பதினெண் வன்னிகள் பற்றியும் உள்ள குறிப்புகள் கி.பி. பன்னிரண்டாம் நூற்றாண்டுக்குப் பின்னர் எழுதப்பட்ட சிங்கள நூல்களில் காணமுடிகிறது. பதினாறாம் நூற்றாண்டு முதலாக எழுதப்பட்ட தமிழ் வரலாற்று நூல்களில் தமிழர் வாழ்ந்த பிரதேசங்களிலிருந்த வன்னிச் சிற்றரசுகள் பற்றிய மரபுவழிக் கதைகள் காணப்படுகின்றன.

குறிப்பாக வையாபாடல், கோணேசர் கல்வெட்டு, மட்டக்களப்பு பூர்வசரித்திரம் என்பவற்றில் வன்னிச் சிற்றரசுகள் பற்றிய விபரங்களில் வரலாற்று தம்பகத்தன்மை மிகவும் குறைவாகவே உள்ளன.

போர்த்துக்கீசரினதும், ஒல்லாந்தரினதும் வரலாற்று நூல்களிலும் நிர்வாக அறிக்கைகளிலும் ஆவணங்களிலும் வன்னி பற்றிக் கிடைக்கின்ற தகவல்கள், மேற்கூறப்பட்ட தமிழ் வரலாற்று நூல்களில் கூறப்பட்ட செய்திகளிலுமிருந்து பெரிதும் வேறுபடுகின்றன.

போர்த்துக்கீச அதிகாரிகள் வன்னிபற்றியும் வன்னிமைகள் பற்றியும் தாம் பெற்றிருந்த நேரடி அனுபவங்களின் அடிப்படையில் எழுதிய அறிக்கைகளை ஆதாரமாகக் கொண்டு, போர்த்துக்கீச, ஒல்லாந்த நூல்கள் எழுதுப்பட்டுள்ளன.

அதனால் அவை குறிப்பிடத்தக்க அளவில் நம்பகமான செய்திகளாகக் காணப்படுகின்றன. உதாரணமாக வன்னிபற்றி ஐரோப்பிய வரலாற்று ஆசிரியர் பெர்ணா ஓ தே கேறோஸ் (Fernao de Queyroz) என்பவர் தனது The Temporal and Spiritual conquest Of Ceylon என்னும் நூலில், இலங்கையில் வன்னியர் என்னும் சிற்றரசர்களின் ஆட்சியின் கீழிருந்த எல்லா வன்னிகளின் பெயர்களையும் குறிப்பிட்டுள்ளார்.

(தொடரும்)

# இளைஞர்களைத் திட்டமிட்டு சீரழிக்கும் படைத் தரப்பு

## முதலமைச்சர் விக்னேஸ்வரன் அதிர்ச்சித் தகவல்

(யாழ்ப்பாணம்)

இளைஞர்களை திட்டமிட்டு சீரழிக்கும் நோக்கம் படையினர் இடையே இருப்பதைச் சில படையினரே வெளிக் கொண்டு வந்துள்ளனர் என தெரிவித்த வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன், இவ்வாறான சூழல் எமது இளைய சமுதாயத்தவர்களுக்கு எதிராகவே இருப்பதை நாம் உணர வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.

கைதடி கிழக்கு சனசமூக நிலைய இந்து வாலிபர் சங்கம் வைரவிழா பரிசளிப்பும், கலை நிகழ்வுகளும் நேற்று முன்தினம் கைதடி கிழக்கு சின்னத்தம்பி அம்பலவாணர் கலையரங்கில் இடம்பெற்றது. அதில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். தொடர்ந்து உரையாற்றுகையில்,

என்னை ஒரு அரசியல்வாதியாக நானும் கருதவில்லை என் அருமை மக்களும் கருதவில்லை! இன்றைய காலத்தில் நாங்கள் யாவரும் சுயநலத்துடன் வாழவே பழகிக் கொண்டுள்ளோம். கோவில்கள் இருந்தும் சமய அனுஷ்டானங்களில் எமது மனம் செல்வதில்லை.

இன்று கோவில்களில் தேவாரம் பாடுவதற்கு பிள்ளைகள் இல்லை. மரண வீடுகளில் கூலிக்கு ஆட்கள் பிடித்து தேவாரம் பாடப்படுகின்றது.

சிறப்பு மிகுந்த எமது வாழ்வியல் தத்துவங்களை உணர்த்துகின்ற சைவ சமயத்தை வளர்ப்பதற்கும் அதனைப் பேணிப் பாதுகாப்பதற்கும் எம்மவர்கள் முன்வர வேண்டும்.

சிறு பிள்ளைகளுக்கிடையே சமய அறிவை மேம்படச் செய்வதற்கு அறநெறிப் பாடசாலைகளை அமைத்து அங்கே கல்வி நெறி வகுப்புக்கள், பா ஓதல், பண்ணிசை வகுப்புக்கள்; பாலவிகார் வகுப்புக்கள் என சைவம் சார்ந்த பல்வேறு வகுப்புக்களை ஞாயிற்றுக்கிழமைகளிலும் முக்கிய தினங்களிலும் முன்னெடுக்க வேண்டிய அவசியம் எமக்குண்டு.

ஏனைய மதங்களைச் சார்ந்த பிள்ளைகள் தூய உடை அணிந்து ஞாயிற்றுக் கிழமைகளில் அவர்களின் மதம் சார்ந்த வகுப்புக்களுக்குத் தவறாது சமுகமளிக்கின்றார்கள். அதேபோன்று எமது பிள்ளைகளும் இறைபக்தியுடன் கூடிய எளிய வாழ்க்கை முறைக்கு திரும்புவதற்கு நாம் அவர்களை சிறுவயதில் இருந்தே பயிற்றுவிக்க வேண்டும்.

இவையெல்லாம் தேவையற்றவை என்று எம்முடபலர் கூறுவதை நான் கேட்டுள்ளேன். "ரியூசன் வகுப்பு முக்கியமா அறநெறிப் பாடசாலை முக்கியமா?" என்று சிலர் கேட்கின்றார்கள். "இந்து சமயம் பற்றி அறிய அறநெறிப் பாடசாலைகளுக்குப் போய்த்தான் படிக்க வேண்டுமா?" என்று வேறு சிலர் கேட்கின்றார்கள். அவர்களிடம் நான் கேட்கும் கேள்வி "விளையாட்டு வீரர்கள் ஏன் பயிற்சி எடுக்கின்றார்கள்?" என்பது. விளையாட்டு நடைபெறும் தினம் அன்று தானே அவர்களுக்கு வேலையுண்டு. அது என்ன தினமும் ஓடுகின்றார்கள், பயிற்சி எடுக்கின்றார்கள், உடலைக் கெட்டியாக வைத்துக் கொண்டுள்ளார்கள் என்று கேட்டால் விளையாட்டுக்களுக்கு பயிற்சி அவசியம் என் கின்றார்கள்.

அதே போல் நல் வாழ்க்கைக்கு, மனம் இளகி நிற்பதற்கு, இறைவனுடன் சார்ந்து நிற்பதற்கு, தியானம் பண்ணுவதற்கு, மக்களுடன் மனம் திறந்து தோழமையுடன் பேசுவதற்கு அறநெறிப் பாடசாலை சூழலும் பயிற்சியும் தேவையாக இருக்கின்றன.

உங்கள் மதம் பற்றித் தெரிந்து வைத்திருக்க அறநெறிப் பாடசாலைகள் அவசியமாக இருக்கின்றன. இப்பொழுது கூட பல இக்கட்டான சூழல்கள் என்னைப் பாதிக்கும் போது நான் என் அறையில் இருந்து கொண்டு நான் படித்த தேவாரங்களை மனம் உருகப் பாடுவேன். சிறிது நேரத்தில் தானாகவே நித்திரைக்குப் போய்விடுவேன். எழுந்ததும் எந்தச் சூழ் நிலையையும் எதிர் கொள்ளத் தயாராகி விடுவேன். சமயத்தோடு ஒன்றிய வாழ்க்கை முறை எங்களுக்கு வாழ்க்கையில் ஏற்படும் இக்கட்டான சூழ்நிலைகளை எதிர்கொள்ள உதவி புரிகின்றது.

இன்று இளைஞர்களிடையே காணப்படுகின்ற குழப்பங்களுக்கு மூலகாரணம் அவர்களிடையே சிறு பிராயந் தொடக்கம் ஒழுக்க உணர்வை வளர்க்காமையே. தாய் தந்தையரின் நேரடிக் கண்காணிப்பின் கீழ் பிள்ளைகள் வளராமை, பிள்ளைகளின் கைகளில் தேவைக்கதிகமாகப் பணப் புழக்கம் ஏற்படுவது போன்ற இன்னோரன்ன குறைபாடுகளே மாணவர்களை குழப்ப நிலைக்கு இட்டுச் செல்கின்றன.

கல்வியின்பால், ஒழுக்கத்தின்பால், முதியோர்களைக் கௌரவிக்கின்ற தன்மையின்பால் மனம் செல்லாது வன்முறைகளிலும் முதியோரை எதிர்க்கின்ற தன்மைகளிலும் அவர்களை ஈடுபட வைக்கின்றது. பல பிள்ளைகள் தீய வழியில் செல்வதற்கு அவர்களுக்குத் தெரியாமலேயே அவர்களின் பெற்றோர்கள் காரணமாகின்றார்கள்.

இளைஞர்கள், யுவதிகள் இந்த நாட்டின் சிறந்த பிரஜைகளாக எதிர்கால வழிகாட்டிகளாக, கல்வியில் சிறந்தவர்களாக மற்றவர்கள் போற்றத்தக்க வகையில் உயர் தகைமையுடன் கூடிய ஒழுக்க சீலர்களாக வாழ்வதற்கு ஏற்ற வகையில் அவர்கள் வழிகாட்டப்பட வேண்டும்.

அறநெறி பாற்பட்ட இளைஞர், யுவதிகளால்தான் இன்றைய சூழல் திசை திருப்பப்பட்டு எமது இளைய சமுதாயம் திருந்தி வாழ நடவடிக்கைகள் எடுக்க முடியும். தவறுகள் செய்த எமது இளைஞர், யுவதிகளை ஒதுக்கி வைக்கக் கூடாது. அவர்களுடன் பழகி அவர்களை நல் வழிப்படுத்த அவர்கள் நண்பர்களாலேயே முடியும். ஆகவே அறம் சார்ந்த எம் இளைஞர், யுவதிகளுக்குப் பாரிய கடமைகள் இருப்பதை இத்தருணத்தில் கூறி வைக்கின்றேன்.

இன்றைய இளைஞர்கள் தவறான வழிகளில் செல்கின்றார்கள் என்றால் அதற்கு அவர்கள் மட்டுமோ அல்லது அவர்கள் பெற்றோர்களோ காரணமென்று திடமாகக் கூறமுடியாது. மாறாக தமிழ் இளைஞர்கள் தமது கொள்கைகளை மறந்து படாடோபங்களிலும் போதை வஸ்துப் பாவனையிலும் திளைத்து வேறொரு உலகத்தில் சஞ்சரிப்பவர்களாக மாற வேண்டும். தமது இனம்பற்றிய விழிப்புணர்வுகள் எதுவும் அற்றவர்களாக வாழ வேண்டும் என்று திட்டமிட்டு அவர்களுட் சிலரை சதிகாரக் கும்பல்கள் பிழையான வழிகளில் வழி நடத்துகின்றார்கள் என்பதை எமது இளைய சமுதாயம் உணர வேண்டும்.

இவ்வாறான நோக்கம் படையினர் இடையே இருப்பதைச் சில படையினரே வெளிக்கொண்டு வந்துள்ளனர். ஆகவே சூழல் எமது இளைய சமுதாயத்தவர்களுக்கு எதிராகவே இருப்பதை நாம் உணர வேண்டும்.

அதற்காக ஏனைய இளைஞர்கள் வன்முறைக் கலாசாரங்களில் ஈடுபட்டு அவர்களை அடக்குவதாக அது அர்த்தப்படாது. மாறாக தமது உற்ற நண்பர்களை, உறவினர்களை முறையாக வழிநடத்த வேண்டும் என்ற நல்லெண்ணத்தில் அவர்கள் அன்புடன் மற்றையோரை வழிநடத்த முன் வரவேண்டும் என மேலும் தெரிவித்தார். (இ-9)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1517

### ஈசன்

ஏழு கழுதை வயசானாலும் என்னதான் நாத்திகம் பேசினாலும்



நைட் தனியா தூங்கும்போது வீட்டில ஒரு செம்பு திடீரென்று விழுந்திட்டா அவ்வளவுதான் உசுரே போயிருது

### கபிசன்


குழந்தைகள் எந்த யுனிவர்சிட்டியில் படித்தார்களோ தெரியவில்லை



அவர்களின் மொழி அவர்களைத் தவிர வேறு யாருக்கும் புரிவதில்லை

### ரமேஸ்

பிரச்சினையைப் பார்த்து பீல் பண்ணுறவனைவிட




டீல் பண்ணுறவன்தான் வாழ்க்கையில் ஜெயிக்கிறான்

### சித்தார்த்

மூக்கும் முழியுமா இருக்கிற பெண்ணைவிட



நாக்கிற்கு நயமா சமைக்கிற பெண்தான் நமக்குத் தேவை

### அபர்ணன்

திருவிழாக்களில் தொலைந்த குழந்தைகளை விட



திருவிழாவை தொலைத்த குழந்தைகளே அதிகம்

### கதிர்வேல்

வோக்கிங் போனா உடம்பு குறையும்னு சொன்னாங்க



அதுதான் குடும்பத்தோட கிளம்பிட்டோம்

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# மாணவர்களை வலுவூட்டுவதற்கான ஐந்து அம்ச திட்டம்

(யாழ்ப்பாணம்)

வடக்கில் உள்ள மாண வர்களை வலுவூட்டும் வகையில், துறைசார் வல்லுநர் களுடன் இணைந்து ஐந்து அம்ச திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாக சிவன் அறக்கட்டளை நிறுவனத்தின் இயக்குநர் கணேஸ்வரன் வேலாயுதம் தெரிவித்தார்.



சிவன் அறக்கட்டளை நிலையத்தின் சமூக பொருளாதார கல்வி அபிவிருத்தி ஆலோசனை குழுக்கூட்டம் நேற்று முன்தினம் நெல்லியடியில் இடம்பெற்றது. பேராசிரியர்.சு.மோகனதாஸ் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனை தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

வெளிநாடுகளில் உள்ளவர்கள் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவி புரிய முன் வருகின்ற போதிலும் சரியான தகவல்கள் அவர்களுக்கு கிடைக்காததாலும் நிதியினை வழங்கக்கூடிய பொது அமைப்புக்கள் இனங் காணப்படாமையால் வெளிநாட்டவர்களின் நிதி எம்மக்களுக்கு உரிய முறையில் கிடைக்கவில்லை.

அவற்றை நிவர்த்தி செய்யும் முகமாக நாங்கள் துறை ரீதியாக செயற்பட்டு அத்துறைகளுக்கு வேண்டிய தேவைப்பாடுகளை பூர்த்தி செய்து அதன்மூலம் அபிவிருத்தியினை மேற்கொள்வதற்காக ஒன்றிணைந்து செயற்படவுள்ளோம்.

அந்தவகையில் சிவன் அறக்கட்டளை நிலையமானது சமூக, பொருளாதார, கல்வி, அபிவிருத்தியினை மேற்கொள்வது தொடர்பில் குழு ஒன்றினை ஆரம்பித்து செயற்பட முனைந்துள்ளது. இக்குழுவில் புத்திஜீவிகள், துறைசார் வல்லுநர்கள் பலர் மத்தியகுழு உறுப்பினர்களாக தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

அந்த வகையில் போரினால் பாதிக்கப்பட்ட மக்களின் பொருளாதார, கல்வி, சுகாதார, வாழ்க்கைத்தரம் மற்றும் விளையாட்டு துறையினை ஊக்குவித்து அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் மேற்கொள்வது தொடர்பில் கலந்துரையாடினோம்.

இக் கூட்டத்தில் 5 திட்டங்கள் முன்மொழியப்பட்டு மேற்கொள்வதற்காக தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. அவற்றில் பாடசாலைகளில் காலைப் பிரார்த்தனையின் போது மாணவர்களுக்கு யோகாசனப் பயிற்சிகளை வழங்குதல், அறநெறிப்பாடசாலைகளை வலுவூட்டல், வடமாகாணத்தில் சித்த (சுதேச) மருத்துவத்திற்கான ஆராய்ச்சி கூடத்தினை அமைத்தல், ஆங்கில மொழி கல்வியினை முன்னேற்றுதல், கலாசார ஒழுக்க விழுமியங்களை பாடசாலை மாணவர்களிடையே வளர்த்தெடுத்தல் போன்ற திட்டங்கள். முன்மொழியப்பட்டு அவை உத்தியோகபூர்வமாக வடக்கில் நடைமுறைப் படுத்துவது தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

அத்துடன் இவற்றுக்கு தேவையான முழுமையான தரவுகளையும் பெற்றுக்கொண்டு நடைமுறைப்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)

# மோசடியாளர்களின் பெயர்ப்பட்டியல் விரைவில் வெளியிடப்படும் - வியாழேந்திரன் எச்சரிக்கை

(கொழும்பு)

மோசடியுடன் தொடர்புடையவர்களின் பெயர்ப்பட்டியலை விரைவில் வெளியிடவுள்ளதாக மட்டக்களப்பு மாவட்ட தமிழ் தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.வியாழேந்திரன் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் சனிக்கிழமை மாலை ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

'மட்டக்களப்பு மாவட்டத்தில் 14 பிரதேச செயலகங்களில் முதன்முறையாக சட்டவிரோதமான முறையில் மண்அகழ்வுதானதடையை ஏறாவூர்பற்றில் ஏற்படுத்தியிருக்கிறேன்.

கடந்த காலம் முதல் எந்தெந்த அரசியல்வாதிகளின் சிபாரிசுக் கடிதத்தில் அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டது என்பதையும் உரிய திணைக்கள அதிகாரிகளிடம் அறிக்கை கோரியுள்ளேன்.

அறிக்கை கிடைக்கும் போது தெரியும் மண் மாபியாக்களுடன் தொடர்புடைய அரசியல்வாதிகள் யார் என்பது.

சில மண் மாபியாக்கள் ஒரு சில அரசியல்வாதிகளை வாழ்த்திப் பேசியும், எழுதியும் வருகின்றனர். இவ்வாறானவர்களுடைய செயற்பாடு எமக்கு பெரிய சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது.

நாங்கள் மக்களுடைய அனைத்துப் போராட்டங்களிலும் ஓடி ஒளியாமல் வெளிப்படையாக நின்று போராடுகின்றோம்.

நாங்கள் மற்றவர்களை போல் குருவி, கழுதைக்கதை கூறித்திரியாமல் எமக்கு வாக்களித்த மக்களுக்கு பிரச்சினை என்று வரும் போது மக்களோடு மக்களாக களத்தில் நின்று போராடுகின்றோம்.

மக்களின் போராட்டங்களின் போது ஓடி ஒளியும் அரசியல்வாதிகளுக்கு எமது செயற்பாடு பொறுத்துக்கொள்ள முடியாமல் உள்ளதன் வெளிப்பாடாகவே என்னை விமர்சனம் செய்கின்றனர்.




மண்மட்டும் அல்ல மட்டக்களப்பில் கடந்த காலங்களில் வழங்கப்பட்ட காணி தொடர்பான தகவல்களையும் தகவல் அறியும் சட்டம் மூலம் பெற்றுள்ளேன்.

அவற்றையும் விரைவில் வெளிப்படுத்துவேன். இதன்போது பலருடைய முகத்திரைகள் கிழிக்கப்படும். அதுமட்டுமல்ல கடந்த காலங்களில் யார் யாருக்கு கொந்துராத்து வேலைகள், யார் யாருடைய சிபாரிசில் வழங்கப்பட்டன. இச்செயற்பாட்டில் யார் யார் கையூட்டல்களை பெற்றுள்ளனர் என்ற தகவலையும் வெளியிடவுள்ளேன்.

சில அரசியல்வாதிகள் மற்றவர்கள் குறைகூறிக் கொண்டு தங்களுடைய உறவுகளுக்குள் பங்கீடு செய்வதும் எங்களுக்கு தெரியும்.

எதிர்வரும் காலங்களில் மற்றவர்களைப்போல் உள்ளொன்று வெளியொன்று பேசாமல் சரியான தகவல்களை திரட்டி பெயருடன் நேரடியாக வெளிவிடுவேன்' என தெரிவித்துள்ளார். (இ-7)

# அம்பேபுஸ்ஸ முகாம் கொலைச் சம்பவம் இரு இராணுவச் சிப்பாய்கள் பணி நீக்கம்

(கொழும்பு)

அம்பேபுஸ்ஸ இராணுவ முகாமில் பணியாற்றிய இராணுவச் சிப்பாய் ஒருவர் கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட இரண்டு இராணுவச் சிப்பாய்கள் பணி இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

இராணுவ சிங்க ரெஜிமெண்டின் ஆரம்ப விசாரணை நீதிமன்றம் மற்றும் இராணுவ பொலிஸாரால் இருவர் தொடர்பிலும் விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக இராணுவ ஊடகப் பேச்சாளர் பிரிகேடியர் சுமித் அத்தபத்து தெரிவித்தார்.

விசாரணைகளுக்குத் தேவையான தொழில்நுட்ப உதவிகளை பொலிஸாரிடம் பெற்றுக் கொள்ளப்படவுள்ளதுடன் குறித்த இருவரினதும் சம்பளமும் இடைநிறுத்தப்பட்டுள்ளது.

கடந்த 21 ஆம் திகதி அதிகாலையில் அம்பேபுஸ்ஸ இராணுவ முகாமில் பணியாற்றிய இராணுவச் சிப்பாய் ஒருவர் ஆயுதங்கால் தாக்கப்பட்டு கொலை செய்யப்பட்டார். (இ-7)

# சர்வதேச புத்தகக் கண்காட்சியில் பிரதமர்

(கொழும்பு)

கொழும்பு பண்டார நாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்று வரும் சர்வதேச புத்தகக் கண்காட்சிக்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, நேற்று முன்தினம் காலை 9 மணியளவில் விஜயம் செய்து புத்தகக் காட்சிக் கூடத்தில் நூல்களைக் கொள்முதல் செய்தபோது...



# செய்தித்துளிகள்

## கந்தானையில் துப்பாக்கிச்சூடு

(கொழும்பு)

கொழும்பு - கந்தானை, வெலிகம்பிட்டிய பிரதேசத்தில் பெண்ணொருவர் மீது துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். மோட்டார் சைக்கிளொன்றில் வந்த இருவரே குறித்த தாக்குதலை மேற்கொண்டுவிட்டு தப்பிச் சென்றுள்ளதாக பொலிஸ் ஊடகப்பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது. துப்பாக்கிச்சூட்டுக்கு இலக்காகி காயமடைந்த பெண் ராகம வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார். (இ-7)

## கர்தினால் கருத்து விவகாரம்
## எனது நிலைப்பாட்டில் மாற்றமில்லை-மங்கள

(கொழும்பு)

கத்தோலிக்க திருச் சபையின் பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை சம்பந்தமாக தான் கூறிய கருத்து தனது தனிப்பட்ட கருத்து எனவும், அந்த நிலைப்பாட்டில் தான் தொடர்ந்தும் இருப்பதாகவும் நிதியமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

மாத்தறையில் நேற்று நடைபெற்ற வைபவம் ஒன்றின் பின்னர் ஊடகங்களிடம் பேசும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். மனித உரிமைகளுக்காக போராடவே நான் அரசியலுக்கு வந்தேன். மனித உரிமை தேவையற்றது என எவராவது கூறுவார்கள் எனில் அதனை அருவருப்புடன் நிராகரிக் கின்றேன். கர்தினால் சார்பில் குரல் கொடுப்பவர்கள் போதைப் பொருள் விற்பனையாளர்கள். இது அவருக்கு செய்யும் அவமரியாதை எனவும் அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்தார். (இ-7)


## எந்த அரசாங்கம் செய்தாலும் நல்லதை வரவேற்க வேண்டும்
## பிரதியமைச்சர் ஹர்ச

(அநுராதபுரம்)

எந்த அரசாங்கமாக இருந்தாலும் அந்த அரசாங்கம் செய்யும் நன்மையான விடயத்தை வரவேற்று அதனை செயற்படுத்த கட்சி பேதங்கள் இன்றி நடவடிக்கை எடுக்க வேண்டும் என பிரதியமைச்சர் கலாநிதி ஹர்ச டி சில்வா தெரிவித்துள்ளார்.

சுவசெரிய அம்புலன்ஸ் சேவையை விரிவுபடுத்தும் வகையில் அநுராதபுரத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற வைபவம் ஒன்றில் உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். (இ)

## ஜனாதிபதித் தேர்தலுக்கு தயாராகிறார் பசில்



(கொழும்பு)

வெளிநாட்டுப் பயணம் மேற்கொண்டிருந்த முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ஷ நாடு திரும்பியதுடன் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலுக்கு ஸ்ரீலங்கா பொது ஜன பெரமுனவை தயார் செய்யும் பணியை ஆரம்பித்துள்ளார்.

வெளிநாட்டு பயணம் மேற்கொண்டிருந்த அவர் நாடு திரும்புவதற்கு ஏற்கனவே நியமித்திருந்த தினத்திற்கு முன்னரே, கடந்த 28ஆம் திகதி நாடு திரும்பியுள்ளார். நாடு திரும்பியதுடன் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நடவடிக்கைகள் தொடர்பில் மிகுந்த கரிசனை காட்டியுள்ளதுடன் ஜனாதிபதித் தேர்தலை எதிர்கொள்வதற்கான வேலைத்திட்டங்களிலும் இறங்கியுள்ளார்.

அதற்கிணங்க ஜனாதிபதித் தேர்தல் வழிநடத்தல் செயலணி ஒன்றை நியமித்துள்ளார். அத்துடன் அச்செயலணி ஒக்டோபர் மாதம் ஆரம்ப பகுதியிலிருந்து ஜனாதிபதித் தேர்தலுக்கான ஏற்பாடுகளை மாவட்ட ரீதியில் முன்னெடுப்பதற்கும் திட்டமிட்டுள்ளது. (இ-7)


## ரஜரட்ட பல்கலைக்கழகத்தின் சில பீடங்கள் இன்று மீளத் திறப்பு

(கொழும்பு)

வரட்சி காரணமாக மூடப்பட்ட ரஜரட்ட பல்கலைக் கழகத்தின் சில பீடங்களின் கல்வி நடவடிக்கைகள் மீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ளன. இதற்கமைய முகாமைத்துவம், தொழில்நுட்பம் மற்றும் வர்த்தக பீடங்களின் கல்வி நடவடிக்கைகள் இன்று திங்கட்கிழமை மீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ளதாக பல்கலைக்கழக நிர்வாகம் அறிவித்துள்ளது. (இ-7)

# சிறுவர் அரங்கம்

## மதில் மேல் பூனை



மகாபாரதப் போர் நடந்து கொண்டிருந்தது. ஒரு வீரன் போர்க்களத்திற்குள் வந்து கொண்டிருந்ததை கிருஷ்ணர் கவனித்தார். அவனுடைய நேர்பார்வையும் நிமிர்த்திய நெஞ்சும் வீர நடையும் கிருஷ்ணரை ஈர்த்தது. தன் உருவை மாற்றிக் கொண்டு அவனை அணுகி "வீரனே எங்கு வந்தாய்?" என்று கேட்டார். "நான் போரில் பங்கேற்க வந்தேன்!" என்றான் அவன். "உனக்கு என்னப்பா தகுதியிருக்கிறது" என்றார் கிருஷ்ணர்.

அவன் தன்னிடம் இருக்கும் வில்லையும் மூன்று அம்புகளையும் காட்டி, "இதில் ஒன்றால் பாண்டவர்களையும் மற்றொன்றால் கௌரவர்களையும் மூன்றாவதால் அந்தக் கிருஷ்ணனையும் கொல்லும் திறமை படைத்தவன் நான்" என்றான்.

"எப்படி உன்னை நம்புவது?" என்றார் கடவுள். அவன் அவரை மேலும் கீழும் பார்த்து விட்டு தூரத்தில் உள்ள மரத்தைக் காட்டி, அதில் இருக்கும் இலைகள் அனைத்தையும் ஒரே அம்பில் வீழ்த்திக் காட்டுவதாகக் கூறினான்.

விளையாடிப் பார்த்து விடுவது என்று முடிவு செய்த கிருஷ்ணர், "சரி செய் பார்க்கலாம்" என்றார்.

அவர் கடவுளல்லவா? அவனுக்குத் தெரியாமல் மரத்தின் ஐந்து இலைகளை முதலில் தன் காலடியின் கீழே மறைத்துக் கொண்டார்.

வீரன் நாண் ஏற்றி அம்பை எய்தான். அவன் சொன்னது போலவே மரத்தில் அனைத்து இலைகளும் ஒரே அம்பின் தாக்குதலில் கீழே விழுந்து விட்டன.

அதோடில்லாமல் அம்பு திரும்பவும் வந்து ஐந்து முறை கிருஷ்ணரின் காலைத் துளைத்தது.

வீரன் கிருஷ்ணரைத் தெரிந்து கொண்டு வணங்கினான். கிருஷ்ணரும் அவனது திறமையைப் பாராட்டினார். "சரி, யாருக்காக போராடப் போவதாக உத்தேசம்?" என்று கிருஷ்ணர் கேட்டார்.

வீரன் "என் திறமைக்கு சவாலாக நான் எப்போதுமே தோற்கும் கட்சிக்கு ஆதரவாகவே போரிடுவேன்" என்றான்.

"இவன் போரிட்டால் இவன் பக்கம் உள்ள கட்சி ஜெயிக்க ஆரம்பிக்கும், உடனே இவன் எதிர்க்கட்சிக்குப் போய் விடுவான். பிறகு அது ஜெயிக்க ஆரம்பிக்கும். இது முடியவே முடியாதே. போருக்கு ஒரு முடிவு ஏற்படாமல் போய் விடுமே" என்று கிருஷ்ணர் யோசித்தார்.

"வீரனே எனக்கு ஒரு உதவி உன்னிடமிருந்து ஆக வேண்டியிருக்கிறது" என்று அவனிடம் சொன்னார். அவனும் செய்யக் காத்திருப்பதாகத் தலை வணங்கினான்.

'இந்தப் போரின் முடிவைப் பாதிக்கும் சக்தியுள்ள ஒருவன் இருக்கிறான். அவன் தலை எனக்கு வேண்டும்" என்றார் கிருஷ்ணர். 'யார் அவன். சொல்லுங்கள். இப்போதே கொய்து வருகிறேன்" என்றான் வீரன்.

கிருஷ்ணர் "வீரனே, போரின் முடிவுக்காக உழைக்க எண்ணாமல் உன் திறமைக்குச் சவாலாகப் போரில் பங்கேற்க விழையும் நீதான் அந்த ஆள்" என்று அவன் தலையைக் கேட்டு விட்டார்.

அவனும் உடனே கொடுக்க ஒப்புக் கொண்டான். கிருஷ்ணர் அவன் பக்தியை மெச்சி, அவனுக்கு வரம் ஒன்று கொடுத்தார். அவன் "தான் இறந்தாலும் மகாபாரதப் போரைத் தன் கண்ணால் பார்க்க வேண்டும்" என்று வரம் கேட்டான். வரத்தை அருளி விட்டு தலையை வாங்கிக் கொண்டார் கிருஷ்ணர்.

நீதி: எந்தப் பக்கமும் சாயாமல் மதில் மேல் பூனையாக சுயநல சிந்தனையுடன் இருப்பவர்கள் எவ்வளவு திறமையிருந்தாலும் காரியத்திற்கு உதவ மாட்டார்கள்.

# சிந்தனைத் துளிகள்

✦ மண்ணுக்குள் மறைந்தால்தான் செடியாக முளைக்க முடியும். -மு.வ

✦ மௌனமாக இருப்பது கோழைத்தனம் என்று நினைத்து விடக் கூடாது. -மொரார்ஜி தேசாய்

✦ ஆற்றலை வெளிப்படுத்தும் ஆற்றல் இல்லாவிட்டால் அந்த ஆற்றல் மதிப்பற்று போய்விடுகிறது. -நெப்போலியன்

✦ இனிமையாக பேசுபவனுக்கு பகைவர்கள் இருக்கமாட்டார்கள். -கிருபானந்த வாரியார்

✦ துன்பமும் ஏழ்மையும் போதிப்பதுபோல் வேறொன்றும் போதிக்கமுடியாது. -விவேகானந்தர்

✦ உங்களுக்கு அவசியமில்லாததை நீங்கள் வாங்கினால் சீக்கிரமே உங்களுக்கு அவசியமான வற்றை விற்க நேரிடும். -ரிச்சர்ட் சாண்டர்ஸ்

✦ மனம் ஒரு நல்ல வேலைக்காரன்.ஆனால் மோசமான எஜமான். -சாக்ரட்டீஸ்

# பொது அறிவு

- காகிதம் முதன்முதலில் எந்த நாட்டினரால் கண்டுபிடிக்கப்பட்டது?
  சீனா
- பால் பதனிடும் முறையைக் கண்டுபிடித்தவர் யார்?
  லூயி பாஸ்டர்
- கரம் விளையாட்டின் ஆரம்பத்தில் எத்தனை கறுப்பு கொயின்கள் இருக்கும்?
  9
- தேசிய அறிவியல் தினம் எந்நாளில் கொண்டாடப்படுகிறது?
  பெப்ரவரி 28 ஆம் திகதி
- நெல் உற்பத்தியில் உலகில் இரண்டாமிடம் பெறும் நாடு எது?
  இந்தியா

# இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்




❖1854-இந்திய அஞ்சல் துறை ஏற்படுத்தப்பட்டது.
❖1869-உலகின் முதல் தபால் அட்டை ஆஸ்திரியாவில் வெளியிடப்பட்டது.
❖1880-இந்தியாவுடனான காசுக்கட்டளை இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்டது.
❖1880-முதலாவது மின் விளக்கு தொழிற்சாலையை தோமஸ் எடிசன் ஆரம்பித்தார்.
❖1892-இலங்கையில் இந்திய இரண்டு அணா நாணயம் செல்லுபடியற்றதாக்கப்பட்டது. பதிலாக வெள்ளி நாணயம் அறிமுகமானது.
❖1953-ஆந்திரா மாநிலம் உருவாக்கப்பட்டது.
❖1982-சோனிநிறுவனம் முதலாவது குறுந்தட்டு ஒலி பரப்பு சாதனத்தை (CDP-101) வெளியிட்டது.
❖2001-ஜம்மு காஷ்மீர் சட்டப்பேரவையைத் தகர்க்க தற்கொலைப் படையினர் நடத்திய கார் வெடி குண்டு தாக்குதலில் 26 பேர் கொல்லப்பட்டனர்.
❖2005-பாலியில் நடந்த குண்டுவெடிப்பில் 23 பேர் கொல்லப்பட்டனர்.

**பிறப்புகள்**

❖1904-ஏ.கே.கோபாலன், இந்தியக் கல்வியாளர், அரசியல்வாதி (இ. 1977)
❖1906-எஸ்.டி.பர்மன், இந்தித் திரைப்பட இசையமைப்பாளர், பாடகர் (இ. 1975)
❖1918-ஜி.வெங்கடசாமி, இந்தியத் தொழிலதிபர், கண் மருத்துவர் (இ. 2006)
❖1927-சிவாஜி கணேசன், தமிழ்த் திரைப்பட நடிகர் (இ. 2001)
❖1932-அரங்க முருகையன், தமிழறிஞர், எழுத்தாளர் (இ. 2009)
❖1936-கே.எஸ்.சிவகுமாரன், ஈழத்து எழுத்தாளர், திறனாய்வாளர்
❖1941-சி.க.சிற்றம்பலம், ஈழத்து வரலாற்றாய்வாளர், கல்வியாளர், எழுத்தாளர்
❖1941-செ.யோகநாதன், ஈழத்து எழுத்தாளர்(இ. 2008)

**இறப்புகள்**

❖2008-பூர்ணம் விஸ்வநாதன், தமிழக நாடக, திரைப்பட நடிகர் (பி. 1921)

**சிறப்பு நாள்**

❖குழந்தைகள் நாள் (எல் சால்வடோர், குவாத்தமாலா, இலங்கை)
❖விடுதலை நாள் (சைப்பிரஸ், ஐக்கிய இராச்சியத்திடம் இருந்து, 1960, நைஜீரியா, ஐக்கிய இராச்சியத்திடம் இருந்து, 1960, பலாவு, 1994, துவாலு, ஐக்கிய இராச்சியத்திடம் இருந்து, 1978)
❖அனைத்துலக முதியோர் நாள்
❖உலக சைவ உணவு நாள்
❖பன்னாட்டு கோப்பி நாள்
❖பன்னாட்டு இசை நாள்

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார் மடம் | சாவகச்சேரி | கொடிகாமம் | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 60 | 80 | 90 | 100 |
| உருளைக்கிழங்கு | 100 | 110 | 100 | 90 | 100 |
| பச்சைமிளகாய் | 60 | 80 | 70 | 80 | 120 |
| தக்காளி | 30 | 40 | 40 | 20 | 60 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 50 | 40 | 40 | 60 |
| கோவா | 100 | 80 | 100 | 60 | 100 |
| கரட் | 140 | 140 | 140 | 130 | 200 |
| பூசணி | 50 | 40 | 40 | 40 | 60 |
| புடோல் | 70 | 50 | 50 | 30 | 80 |
| வாழைக்காய் | 60 | 100 | 70 | 70 | 120 |
| சின்ன வெங்காயம் | 100 | 80 | 100 | 80 | 100 |
| பெரிய வெங்காயம் | 100 | 110 | 100 | 90 | 100 |
| பாகற்காய் | 120 | 160 | 140 | 130 | 160 |
| வெண்டிக்காய் | 80 | 50 | 40 | 40 | 80 |
| கருணைக் கிழங்கு | 60 | 60 | 50 | 60 | 80 |
| பயற்றங்காய் | 100 | 80 | 100 | 60 | 160 |
| லீக்ஸ் | 80 | 90 | 90 | 80 | 80 |
| பீற்றூட் | 50 | 50 | 60 | 50 | 80 |
| கறிமிளகாய் | 80 | 100 | 100 | 80 | 120 |
| முருங்கைக்காய் | 100 | 160 | 100 | 70 | 80 |
| போஞ்சி | 140 | 180 | 100 | 110 | 160 |
| கத்தரிதம்புள்ள | 50 | 40 | — | 50 | 100 |
| கீரை - 1பிடி | 40 | 40 | 40 | 25 | 40 |
| தேசிக்காய் | 250 | 180 | 200 | 300 | 300 |
| தேங்காய் (ஒன்று) | 60 | 60 | 50 | 45 | 30-50 |
| இராசவள்ளி | 150 | 140 | 160 | 110 | 200 |
| வெங்காயப்பூ | 120 | 120 | — | 95 | 120 |
| முள்ளங்கி | 60 | 40 | 50 | 30 | 80 |
| பொன்னாங்காணி | 40 | 30 | 80 | 20 | 30 |
| வல்லாரை | 15 | 50 | 20 | 20 | 20 |
| ஈரப்பலா | 50 | — | 60 | 110 | 100 |

தவறுகளை ஒப்புக்கொள்ளும் துணிவும் திருத்திக் கொள்ள விரும்பும் விருப்பமும்தான் வெற்றி பெறுவதற்கான இரு வழிகள். *- லெனின்*

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## குடும்பத்தை அறமாகப் போற்றும் தமிழர் வாழ்வை அர்த்தப்படுத்துங்கள்

இன்று ஒக்டோபர் முதலாம் திகதி. சர்வதேச சிறுவர், முதியோர் தினமாகும்.

சர்வதேச தினங்களாகப் பிரகடனப்படுத்தப்பட்டவை தொடர்பில் உடன்பாடும் எதிர்வாதமும் இருந்த போதிலும் உலகம் ஏற்றுக் கொண்டு விட்டால், அதனை அங்கீகரிப்பதும் அதற்கு இசைவாக நடப்பதும் உலகோடு ஒத்துப் போவதற்குக் கட்டாயமானதாகும்.

அந்தவகையில் உலக நாடுகள் அதிலும் குறிப்பாக வளர்ச்சியடைந்த நாடுகள் தங்கள் நாட்டில் நிலவக்கூடிய ஒழுக்க இழப்புக்கள் தொடர்பில் எதுவும் செய்ய முடியாத நிலையில், சிலவற்றைச் சர்வதேச தினம் எனப் பிரகடனப் படுத்தின.

உதாரணத்துக்கு உலகில் உள்ள பெரும்பாலான நாடுகளில் தாயை தந்தையைப் பராமரிக்கின்ற பணியை அந்தந்த நாட்டு அரசுகளே பொறுப்பேற்றுக் கொள்கின்றன.

இதனால் பெற்ற பிள்ளை வருடத்தில் ஒரு நாளேனும் தன் தாயைப் பார்க்க வேண்டும் என்பதற்காக, அன்னையர் தினம் பிரகடனம் செய்யப்பட்டது.

ஆனால் இந்தப் பிரகடனம் அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம் என்ற வாழ்வியலைக் கொண்ட இலங்கை, இந்தியா போன்ற நாடுகளையும் நிலைமாற்றத்துக்கு உட்படுத்தியது எனலாம்.

பெற்ற தாயை, பெற்ற தந்தையை வீட்டில் வைத்துப் பராமரிக்கின்ற பெரும் பணியையும் தம் மூதாதையர்களை நினைவுகூருகின்ற தென்புலத்தார் கடமையையும் செய்தொழுகின்ற தமிழர் தம் இல்லறப் பண்பாட்டுக்கு மேற்போந்த தினங்கள் ஊறு விளைவித்தன என்பது ஏற்புடைய உண்மை.

அந்த வகையில்தான் சிறுவர் தினம், முதியோர் தினம் என்ற வகுதியும் அடங்குகிறது.

இருக்கின்ற உணவை தன் பிள்ளைக்குக் கொடுத்துவிட்டு தண்ணீரை அருந்திவிட்டு உறங்குகின்ற எத்தனையோ அன்னையர் மத்தியில் சிறுவர்கள் உயிரினும் மேலானவர்கள்.

தம் பிள்ளைக்காக தம்மையே அர்ப்பணிக்கின்ற எங்கள் குடும்ப கட்டுமானத்தை அறமாகப் போற்றுகின்ற தமிழர்களும் சிறுவர் தினத்தையும் முதியோர் தினத்தையும் வருடத்தில் ஒரு நாள் கொண்டாடிவிட்டு தம் கடமை முடிந்து விட்டதாகக் கருதுகின்ற மிகமோசமான கலாசாரம் உருவெடுத்துவிடுமோ என்ற பயம் ஏற்படவே செய்கிறது.

ஆக, சிறுவர் தினம், முதியோர் தினம் என்பதன் பொருளை உலக நாடுகள் எவ்வாறு உள்வாங்கிக் கொண்டாலும் தமிழ் மக்களாகிய எங்களின் உள்வாங்கல் என்பது வித்தியாசமானதாக இருத்தல் வேண்டும்.

அதாவது பாடசாலைகளிலும் எங்கள் ஊர்களிலும் எங்கெல்லாம் சிறுவர்கள் கஷ்டப்படுகின்றார்களோ முதியவர்கள் இடர்படுகின்றார்களோ அவர்களை எங்கள் உறவுகளாக நினைத்து எங்களிடம் இருப்பதை அவர்களுக்கும் பகுத்துக் கொடுத்து அவர்களையும் நம் பிள்ளைகள் போல, நம் பெற்றோர்கள் போல ஏற்றுக்கொள்கின்ற மனநிலையை நம்மில் ஏற்படுத்துவதாக சிறுவர், முதியோர் தினம் அமைய வேண்டும்.

அதுவே அர்த்தமுடைய தமிழர் வாழ்வை மேலும் அர்த்தமாக்கும்.

# 5 வருடங்களில் 50 இற்கும் அதிகமான ஜப்பானிய கடற்படைக்கப்பல்கள் வருகை

(கொழும்பு)

கடந்த ஐந்து வருட காலப் பகுதியில் 50 இற்கும் மேற்பட்ட ஜப்பானிய கடற்படைக்குச் சொந்தமான கப்பல்கள் இலங்கைக்கு வருகை தந்துள்ளதாக நேற்று இலங்கைக்கு வருகை தந்த ஜப்பானிய கடற்படையின் ஹெலிகொப்டர் நாசகாரி கப்பலான 'ககா'வின் தளபதி ரியல் அட்மிரல் டட்சுயா ஃபுக்குடா தெரிவித்தார்.

யுத்தம் நிறைவுபெற்ற பின்னர் இலங்கைக்கு 65 இற்கும் அதிகமான ஜப்பானிய கடற்படைக்குச் சொந்தமான கப்பல்கள் வருகை தந்துள்ளதாக அண்மையில் வெளிநாட்டு ஊடகமொன்றில் வெளியான செய்தியைச் சுட்டிக்காட்டி இலங்கையில் வெளிநாடுகளின் ஆதிக்கம் தொடர்பில் குறிப்பாக சீனாவின் பிரசன்னம் தொடர்பில் ஜப்பான் எவ்வளவு கரிசனை கொண்டுள்ளதென எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும் போதே ஜப்பானிய தளபதி கடந்த ஐந்து வருடங்களில் 50ற்கும் மேற்பட்ட கப்பல்கள் வருகை தந்துள்ளமையை உறுதிப்படுத்தினார்.

இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் இலங்கையின் முக்கியத்துவத்தை ஜப்பானிய கப்பல்களின் வருகை உணர்த்தி நிற்பதாகவும் அவர் தெரிவித்தார்.

ஜப்பானைப் பொறுத்த வரையில் அதன் இருப்பிற்கு கடற்பாதைகளின் பாதுகாப்பு மிகவும் முக்கியமானதெனக் குறிப்பிட்ட ஜப்பானிய ககா கப்பலின் தளபதி இந்த விடயத்தில் ஜப்பான் மிகவும் கரிசனை கொண்டிருப்பதாகவும் தெரிவித்தார். இந்து - பசுபிக் வலயத்தில் சுதந்திரமான கடற் போக்குவரத்தை உறுதிசெய்வது அவசியமென்ற ஜப்பானிய வெளியுறவுக்கொள்கையை சுட்டிக் காட்டிய ஜப்பானிய தளபதி இதில் இலங்கை முக்கிய பாத்திரத்தை வகிப்பதாகவும் தெரிவித்தார்.

கொழும்பு துறை முகத்திற்கு வருகைதந்துள்ள ஜே. எஸ்.ககா என்ற ஹெலிகொப்டர் நாசகாரிக் கப்பல் ஜப்பானிய கடற்தற்பாதுகாப்பு படைப்பிரிவில் 2017ஆம் ஆண்டில்சேவையில்இணைத்துக் கொள்ளப் பட்டது.

248 மீற்றர்கள் நீளமானதும் 38 மீற்றர்கள் அகலமானதுமான இந்தக் கப்பலில் தற்போதைய நிலையில் நீர்மூழ்கிகளை தாக்கியழிக்கக்கூடிய 7 ஹெலிகொப்டர்களும் இரண்டு தேடுதல் மற்றும்மீட்பு பணி ஹெலிகொப்டர்களும் தரித்துநிற்கும் திறனுள்ளது.

ஆனால் தேவை ஏற்படுமிடத்து 28 விமானங்கள் வரையில் அன்றேல் 14 பெரும் விமானங்கள் வரையில் கொண்டு செல்லமுடியும் எனச் சுட்டிக்காட்டப்பட்டது.

இரண்டாம் உலகப்போரின் போது ஜப்பானிய கடற்படையில் முக்கிய பங்காற்றிய ககா விமானந்தாங்கி கப்பலின் பெயரே இந்தக் கப்பலுக்கும் சூட்டப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இரண்டு மாதங்கள் நீடிக்கும் பயணத்தின் போது பிலிப்பைன்ஸ் நாட்டிற்கு விஜயம் மேற்கொண்ட நிலையில் இலங்கை வந்துள்ள இந்த ஜப்பானிய கப்பல் இலங்கை விஜயத்தை முடித்துக்கொணடு இந்தியா மற்றும் சிங்கப்பூர் ஆகிய நாடுகளுக்கும் விஜயம் செய்யவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# க.பொ.த. உயர்தர மாணவர்களுக்கான புலமைப்பரிசிலுக்கு விண்ணப்பம் கோரல்

(பதுளை)

கல்விப் பொதுத்தராதர உயர்தர வகுப்பில் கல்வி கற்பதற்காக ஜனாதிபதி நிதியத்தினால் வழங்கப்படும் புலமைப் பரிசில்களுக்காக ஜனாதிபதியின் செயலகத்தினால விண்ணப்பங்கள்கோரப் பட்டுள்ளதாக பதுளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அ.அரவிந்தகுமார் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில், புலமைப்பரிசில்களை எமது சமூக மாணவ, மாணவிகள் பூரணமாக பயன்படுத்திக்கொண்டு அதற்கான விண்ணப்பங்களை ஒப்படைக்க முன்வர வேண்டும்.

2017 ஆம்ஆண்டில்நடைபெற்ற க.பொ.த.சாதாரண பரீட்சைக்கு முதல்தடவையாக தோற்றி அப்பரீட்சையில் சித்தியடைந்து 2020 ஆம் ஆண்டில் க.பொ.த. உயர்தர பரீட்சைக்கு தோற்றவுள்ள பொருளாதார ரீதியில்பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கும் மாணவ, மாணவிகளுக்கு புலமைப்பரிசில்களை வழங்க ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தீர்மானித்துள்ளார்.

விண்ணப்பதாரியின் குடும்பத்தின் மாத வருமானம் 10 ஆயிரம் ரூபாவுக்கும் மேற்படாதிருத்தல், அரச பாடசாலையில் கல்வி கற்றிருத்தல், 2017 ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட க.பொ.த. சாதாரண பரீட்சைக்கு முதற் தடவையாக தோற்றி 2020 ஆம் ஆண்டில் க.பொ.த. உயர்தர வகுப்பில் கல்வி கற்பதற்கான பூரண தகைமைகளை பூர்த்தி செய்திருத்தல், விண்ணப்பதாரி தரம் 5 புலமைப்பரிசில் நிதியுதவிகள் பெறாதவராக இருத்தல் போன்ற தகைமைகள் உடையவர்கள் மேற்படி புலமைப்பரிசிலுக்கு விண்ணப்பிக்க முடியும்.

புலமைப்பரிசில்கள் பெறுபவர்களுக்கு க.பொ.த. உயர்தர பரீட்சைக்கு தோற்றும் வரை மாதாந்தம் 500 ரூபாவரை 24 மாதத்திற்கு புலமைப் பரிசில் வழங்கப்படும்.

விண்ணப்பதாரர்கள் உரிய மாதிரி அமைப்பைத் தழுவி தயாரித்துக்கொண்ட விண்ணப்பப்படிவங்களை பூர்த்தி செய்து தாம் க.பொ.த. சாதாரண பரீட்சைக்காக கற்றல் நடவடிக்கைகளில் மேற்கொண்ட பாடசாலை அதிபர்களிடம் மாத்திரம் 12.10.2018 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னதாக ஒப்படைக்க வேண்டும்.

பாடசாலை அதிபர் உரிய நடவடிக்கைகளின் பின்னர் தேர்வுகளை நடத்தி அதன் பின் வலயக் கல்வி பணிப்பாளர் தமது சிபார்சுகளுடன் கூடிய விண்ணப்பப் படிவங்களை 16.11.2018 ஆம் திகதிகு முன்னர் மாகாண கல்விப் பணிப்பாளரிடமும் ஒப்படைக்க வேண்டியிருப்பதால் தாமதமாகக் கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படுமென்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் தெரிவு செய்யப்படும் அனைத்து புலமைப் பரிசில் பெறுபவர்களின் இலங்கை வங்கி கணக்கிற்கு நேரடியாக தவணைப் பணம் வைப்பிலிடும் முறையும் உருவாக்கப்பட்டுள்ளது என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை செவ்வாய்க்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணி வரை வவுனியா பிரதேசத்தில் தவசிக்குளம் கிராமம், தவசிக்குளம் பிள்ளையார் வீதி, அண்ணா நகர், சிறீ நகர், பூந்தோட்டம் கைத்தொழிற்பேட்டை ஆகிய இடங்களிலும் மன்னார் பிரதேசத்தில் மணல்குளம், இலந்தை மோட்டை, சூரிய கட்டைக்காடு, கூரை, அகத்தி மோட்டை, சேது விநாயகங்குளம் ஆகிய பிரதேசங்களிலும், மின் தடைப்படும். (இ-9)

# வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை

## வினைப்பயன்



கூர்ந்து பார்க்கின்ற போது ஒவ்வோரு செயலுக்கும் விளைவு இருக்கின்றது என்பது நிச்சயமாகப் புலனாகும். ஒருசில செயல்களுக்கு விளைவு விரைவில் தெரிவதில்லை. காரணம் என்னவென்றால் மனிதனுடைய ஆயுள் சொற்பம் - ஒரு குறிப்பிட்ட எல்லை உடையது. சில செயல்கள் நீண்ட காலத்திற்குப் பின் விளைவாக வரலாம். அதுவரையிலே அறிவை நீட்டிப் பார்க்கவோ, வயதைக் கூட்டிப் போடவோ முடியாது.

அதனால் சாதாரண அறிவு நிலையில் மனிதன் ஒரு முனையை விட்டுவிட்டு ஒரு முனையை மட்டும் பிடித்துக் கொள்கின்றான். செயலை மட்டும் எடுத்துக் கொள்கிறான். விளைவே இல்லை என்று எண்ணுகின்றான் அல்லது விளைவை மட்டும் எடுத்துக் கொள்கின்றான். அதற்குரிய காரணம் பிடிபடவில்லையே என்று சொல்லுகின்றான். இவ்வாறு பகுதிப்படுத்தப்பட்ட நிலையிலே "வினைப் பயன்" என்பதே பொய்யான தத்துவம் என்று குறுகிய மனத்தாலே முடிவுகட்டிவிடுகின்றான்.

எந்தச் செயலைச் செய்தாலும் விதையைப் போட்டால் நான்கு நாட்களிலோ. நான்கு வாரங்களிலோ முளைப்பது போல, அந்தச் செயலுக்கு ஒரு விளைவு நிச்சயமாக உண்டு. பேராசை, சினம், கடும்பற்று, முறையற்ற பால்கவர்ச்சி, உயர்வு தாழ்வு மனப்பான்மை, வஞ்சம் இந்த ஆறு குணங்கள் வயப்பட்டு மனிதன் செய்கின்ற செயல்களெல்லாம் அவனிடமே பதிந்து, பதிந்து, பதிந்து மீண்டும் அந்தச் சக்தி உந்தி எண்ண அலைகளாகவோ, செயல் வடிவங்களாகவோ வந்து கொண்டு தான் இருக்கும். அப்படியே வந்து விட்டால் அதே எண்ணப் பதிவுகள் மீண்டும் மீண்டும் பதிந்து எழுந்து செயல் வடிவம் பெற்றுக் கொண்டே இருப்பதால் மனிதன் துன்பவயப்படுகின்றான். அதிலிருந்து மீட்டுக் கொள்ள முடியாமல் தவிக்கிறான்.

# எப்.ஏ.கிண்ண கால்பந்தாட்டம்; அடுத்தசுற்றில் கிளி.உருத்திரபுரம்



இலங்கை கால்பந்தாட்டச் சம்மேளனத்தில் எப்.ஏ கிண்ணச் சுற்றுப்போட்டியில், தேசிய ரீதியில் 64 அணிகளுக்கிடையிலான சுற்றுப்போட்டியானது தற்போது நடைபெற்று வருகின்றது.

இந்தச் சுற்றுப்போட்டியின் போட்டியொன்று கிளிநொச்சி உருத்திரபுரம் விளையாட்டுக்கழக மைதானத்தில் கடந்த 23 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. இதில் கிளிநொச்சி உருத்திரபுரம் அணியை எதிர்த்து வவுனியா ஈஸ்வரன் அணி மோதியது.

இதில் கிளிநொச்சி உருத்திரபுரம் அணி, 06:00 என்ற கோல் கள் கணக்கில் வெற்றி பெற்று, 32 அணிகளுக்கு உள்நுழைந் தது. உருத்திரபுரம் அணி சார்பாக தேனுஜன் 2 கோல்களையும் கரிசன், சாந்தன், ஜனனன், தனுசன் தலா ஒவ்வொரு கோல்களையும் அடித்தனர். (க-26)

# பெனால்டியை சரியாகப் பயன்படுத்தி அரையிறுதிக்குள் நுழைந்தது றோயல்




அரியாலை சரஸ்வதி விளையாட்டுக்கழகம் தமது நூற்றாண்டு விழாவையொட்டி "வடக்கின் கில்லாடி யார்" என்னும் கால்பந்தாட்டச் சுற்றுப்போட்டியொன்றை அரியாலை கால்பந்தாட்ட பயிற்சி மைதானத்தில் நடத்தி வருகின்றது.

வருடாவருடம் யாழின் கில்லாடி என நடத்தப்பட்டு வந்த இந்தச் சுற்றுப்போட்டியானது, இந்த வருடம் வடக்கின் கில்லாடியாக மாற்றப்பட்டு, வடமாகாணம் தழுவிய வகையில் மொத்தம் 32 அணிகள் இந்தச் சுற்றில் பங்குபற்றின.

இந்தச் சுற்றுப்போட்டியின் மூன்றாவது காலிறுதியாட்டம் கடந்த 29 ஆம் திகதி இரவு ஊரெழு றோயல் அணிக்கும் நவிண்டில் கலைமதி அணிக்கும் இடையில் நடைபெற்றது.

நவிண்டில் கலைமதி அணி முதலாவது கோலை அடித்தது. தொடர்ந்து, ஊரெழு றோயல் அணி பதில் கோல் அடித்தது. ஆட்டநேர முடிவில் இரண்டு அணிகளும் தலா ஒரு கோலைப் பெற்றிருந்தன.

தொடர்ந்து வெற்றியாளரைத் தீர்மானிக்க சமநிலை தவிர்ப்பு உதை நாடப்பட்டது.

இதில், ஊரெழு றோயல் அணி, 03:02 என்ற கோல்கள் கணக்கில் வென்று அரையிறுதிக்கு நுழைந்தது.

அரையிறுதியில் றோயல் அணி, புாடும்மீன் அணியைச் சந்திக்கவுள்ளது.(க-26-106)

# றைற்றோன் அணியின் போராட்டம் வீணாகியது 2 ஓட்டங்களால் சென்றலைட்ஸ் அணிவெற்றி

ஏ.பி. விளையாட்டுக்கழகம் யாழ்.மாவட்ட துடுப்பாட்டச் சங்கத்தில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக்கழகங்களுக்கிடையில் இருபது - 20 துடுப்பாட்டச் சுற்றுப் போட்டியொன்றை நடத்தி வருகின்றது.

லீக் முறையில் நடைபெறும் இந்தச் சுற்றுப்போட்டியின் முதற்சுற்று ஆட்டங்கள் முடிவடைந்த நிலையில், இரண்டாம் சுற்று ஆட்டங்கள் தற்போது ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

23 ஆம் திகதி வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற போட்டியில் சென்றலைட்ஸ் அணியை எதிர்த்து றைற்றோன் அணி மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய சென்றலைட்ஸ் அணி, 19.4 ஓவர்களில் 117 ஓட்டங்களுக்குச் சகல விக்கெட்களையும் இழந்தது. துடுப்பாட்டத்தில் ஜெனோசன், பிரியலக்சன் தலா 16 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்தனர்.

பந்துவீச்சில் றைற்றோன் அணி சார்பாக, டென்ஸ்மன் 3.4 ஓவர்கள் பந்துவீசி 13 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்களையும் செந்திரன், நந்தகுமார் தலா 2 விக்கெட்களையும் உமைசுதன், அஜந் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

118 ஓட்டங்கள் என்ற இலகுவான வெற்றியிலக்கை நோக்கி பதிலளித்தாடிய றைற்றோன் அணியினர், இறுதிப் பந்து பரிமாற்றத்தில் 4 ஓட்டங்கள் பெறவேண்டிய நிலையில் தசோபனின் பந்துவீச்சில் தடுமாறி, 2 ஓட்டங்களால் தோல்வியடைந்தனர்.

20 ஓவர்களில் 9 விக்கெட்களை இழந்து 115 ஓட்டங்களை மாத்திரம் றைற்றோன் அணியினர் பெற்றனர். துடுப்பாட்டத்தில் மணாளன் 45 ஓட்டங்களையும் ஜினோாடிலக்சன் 17 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர்.

பந்துவீச்சில் சென்றலைட்ஸ் அணி சார்பாக, தசோபன் 4 ஓவர்கள் பந்துவீசி 15 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்களையும் மயூரன், டர்வின், ஜெரிக் துசாந்த் மற்றும் அலன்ராஜ் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.

றைற்றோன் அணி, தமது 3 விக்கெட்களை ரன் அவுட் முறையில் இழந்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.(க-26)

# எப்.ஏ.கிண்ணம்; உருத்திரபுரம் அணி வெற்றி



இலங்கை கால்பந்தாட்ட சம்மேளனத்தின் எப்.ஏ. வெற்றிக்கிண்ண கால்பந்தாட்டச் சுற்றுப்போட்டியின், 32 அணிகளுக்கிடையிலான கால்பந்தாட்டப் போட்டிகள் தற்போது நடைபெற்று வருகின்றது.

அநுராதபுரம் சிறைச்சாலை மைதானத்தில் கடந்த 29 ஆம் திகதி சனிக்கிழமை நடைபெற்ற போட்டியொன்றில் புத்தளம் லிவர்பூல் அணியை எதிர்த்து கிளிநொச்சி உருத்திரபுரம் அணி மோதியது.

இதில், உருத்திரபுரம் அணி, 03:01 என்ற கோல்கள் கணக்கில் வெற்றி பெற்றது. உருத்திரபுரம் அணி சார்பாக ஹரீஸ் 2 கோல்களையும், தேனுஜன் ஒரு கோலையும் பெற்றுக் கொடுத்தனர். (க-26)



**ஸ்ரீ முருகன் ஐக்கிய விளையாட்டுக்கழகத்தின் 45 ஆவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு நடத்தப்பட்ட பெண் களுக்கான கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டி கடந்த 23 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கழக மைதானத்தில் நடைபெற்றது.**

**இறுதிப்போட்டியில் வயாவிளான் வயவன் விளையாட் டுக்கழக அணியை எதிர்த்து உரும்பிராய் கணேசா விளை யாட்டுக்கழக அணி மோதியது.**

**போட்டியில் சம்பியனாகத் தெரிவாகியது வயாவிளான் வயவன் விளையாட்டுக்கழக அணி. இரண்டாமிடத்தை உரும்பிராய் கணேசா விளையாட்டுக் கழக அணி பெற்றுக் கொண்டதுடன் தொடரின் சிறந்த வீராங்கனையாக அவ்வ ணியின் தர்சி தெரிவு செய்யப்பட்டார். (க)**

# இலகுவான வெற்றியுடன் அரையிறுதியில் யங்ஹென்றிஸ்



அரியாலை சரஸ்வதி விளையாட்டுக்கழகம் தமது நூற்றாண்டு விழாவையொட்டி "வடக்கின் கில்லாடி யார்" என்னும் கால்பந்தாட்டச் சுற்றுப்போட்டியொன்றை அரியாலை கால்பந்தாட்ட பயிற்சி மைதானத்தில் நடத்தி வருகின்றது.

இந்தச் சுற்றுப்போட்டியின் இரண்டாவது காலிறுதியாட்டம் கடந்த 28 ஆம் திகதி இரவு நடைபெற்றது.

இதில் அச்செழு வளர்மதி அணியை எதிர்த்து இளவாலை யங்ஹென்றிஸ் அணி மோதியது.

இதில், யங்ஹென்றிஸ் அணி, 02:00 என்ற கோல்கள் கணக்கில் வெற்றிபெற்று அரையிறுதிக்குள் நுழைந்தது. ஹென்றிஸ் அணியின் தனேஸ் ஆட்டநாயகனாகத் தெரிவு செய்யப்பட்டார்.(க-26)

## கைதிகளின் விடுதலை...

ஒன்று நடைபெற்றது.

உண்ணாவிரதம் இருக்கும் அரசியல் கைதிகளுக்கு நலன்வேண்டி நேற்று பிற்பகல 5.00 மணிக்கு பொன்னாலை வரதராஜப் பெருமாள் ஆலயத்தில் தீபம் ஏற்றி வழிபாடு செய்தனர். அதைத் தொடர்ந்து ஆலயத்திற்கு முன்பாக கவனயீர்ப்பு போராட்டம் இடம் பெற்றது.

போராட்டத்தில் கலந்துகொண்டவர்கள் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி பல்வேறு கோசங்களை எழுப்பினர். கைதிகள் விடுதலை செய்யப்படாவிட்டால் தீக்குளித்து தனது உயிரை மாய்க்கவேண்டிய நிலை ஏற்படும் என இப்போராட்டத்தில் கலந்து கொண்ட வயோதிபப் பெண்ணொருவர் கண்ணீர் மல்க தெரிவித்தார். (ம-9)

## 2019 வரவு-செலவு...

மற்றும் சிவில் பாதுகாப்பு திணைக்களம் ஆகியவற்றை உள்ளடக்கிய பாதுகாப்பு அமைச்சுக்கே இந்த நிதி ஒதுக்கீடு செய்யப்படவுள்ளது.

அடுத்த ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தில், விவசாய அமைச்சுக்கான ஒதுக்கீடு மூன்று மடங்கு அதிகரிக்கவுள்ளது. இந்த ஆண்டில், 23 பில்லியன் ரூபா ஒதுக்கப்பட்ட நிலையில், அடுத்த ஆண்டு இது 63 பில்லியன் ரூபாவாக அதிகரிக்கப்படும்.

2019ஆம் ஆண்டுக்கான மொத்த அரசாங்க செலவினங்கள், 2,281.5 பில்லியன் ரூபாயாக (ரூ.2,281,682,472,000) ஆக இருக்கும் என்றும், மதிப்பிடப்பட்டுள்ளது. நிதியமைச்சினால் அரசிதழில் வெளியிடப்பட்டுள்ள நிதி ஒதுக்கீட்டுச் சட்டமூலம், அடுத்த மாதம்நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.(மு)

## நாளை விசேட...

வுள்ள இக்கூட்டத்தில் பங்கேற்குமாறு அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

பிரமுகர்கள் கொலை சூழ்ச்சி, ஜனாதிபதியின் ஐ.நா உரை, மாகாண சபைத் தேர்தல் இழுத்தடிப்பு உள்ளிட்ட விவகாரங்களால் தெற்கு அரசியலில் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

இவை தொடர்பிலும், முக்கிய சில அமைச்சரவைப் பத்திரங்கள் சம்பந்தமாகவும் இதன்போது கலந்துரையாடப்படவுள்ளன.(மு)

## மானிப்பாய் வாள்வெட்டு...

கோட்டையில் வைத்து நேற்று காலை கைது செய்யப்பட்டுள்ளார். அவரிடமிருந்து இரண்டு வாள்களும் கைப்பற்றப்பட்டுள்ளன என்று மானிப்பாய் பொலிஸார் தெரிவித்த னர்.

வாள்வெட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் தேடப்பட்டு வந்த முக்கிய சந்தேகநபரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார். இவர் மானிப்பாய் பகுதியைச் சேர்ந்தவர் என்றும் பொலிஸார் தெரிவித்த னர்.

அதேவேளை மானிப்பாயில் நேற்று முன்தினம் இடம்பெற்ற வாள்வெட்டுச் சம்பவம் தொடர்பாக ஏனைய சந்தேகநபர்களும் அடையாளம் காணப்பட்டுள்ளனர். அவர்களும் விரைவில் கைது செய்யப்படுவர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (மு)

## ரயில் கட்டணம்...

ந்த பட்ச கட்டணங்களில் மாற்றமில்லை என ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதன்படி, மூன்றாம் வகுப்பிற்கான குறைந்தபட்ச கட்டணம் 10 ரூபாயாக காணப்படுவதுடன், இரண்டாம் வகுப்பிற்கான குறைந்தபட்ச கட்டணமான 40 ரூபாயிலும் எவ்வித மாற்றமும் ஏற்படாது என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதேவேளை, ரயில் பருவச்சீட்டு கட்டணமும் திருத்தப்பட்டுள்ளது.

இதன்படி கொழும்பு கோட்டையில் இருந்து யாழ்ப்பாணத்திற்கு 1ஆம் வகுப்பு கட்டணம் 1080 ரூபாயாகவும், 3ஆம் வகுப்பு கட்டணம்350 ரூபாயாகவும்நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

10 வருடங்களுக்கு பின்னரே தொடர்ந்துக் கட்டணத்தில் திருத்தம் மேற்கொள்ளப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (மு)

## பொலிஸாரை மோதித்...

ஸார் ஒருவர் படுகாயமடைந்து யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று இரவு கொடிகாமம் பகுதியில் பொலிஸார் வந்த மோட்டார் சைக்கிளை பாரவூர்தி ஒன்று மோதியுள்ளது. இதனால் மோட்டார் சைக்கிளில் பயணித்த பொலிஸார் ஒருவர் படுகாயமடைந்துள்ளார். இந்த விபத்துடன் தொடர்புடைய விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (மு-9)

## அரசியல்கைதிகள்...

அரவிந்தன், வவுனியாவை சேர்ந்த நல்லான் சிவலிங்கம் ஆகிய இருவருமே நேற்று முதல் போராட்டத்தில் இணைந்துள்ளனர்.

இந்நிலையில் இன்றில் இருந்து தமது மருத்துவ உதவிகளையும் புறக்கணித்து உணவு தவிர்ப்பு போராட்டத்தை முனைப்படையச்செய்யவுள்ளதாக அரசியல் கைதிகள் முடிவு செய்துள்ளனர். அது தொடர்பில் நேற்று உத்தியோகபூர்வமாக எழுத்து மூலம் சிறைச்சாலை அத்தியட்சகரிற்கு அறியத்தந்துள்ளனர்.

தமக்கான சகல மருத்துவ உதவிகளை புறக்கணிக்க உள்ளதாக அவர்கள் சிங்கள மொழியில் எழுதி ஒப்படைக்கப்பட்டுள்ள குறித்த கடிதத்தில் தெரிவித்துள்ளனர்.

9 ஆண்டு காலமாக சிறைச்சாலைக்குள் வாடும் தம்மை குறுகியகால புனர்வாழ்வு வழங்கியாவது விடுவிக்குமாறு கோரி தமிழ் அரசியல் கைதிகள் கடந்த 14ஆம் திகதி உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (மு-9)

## யாழ்.குடாநாட்டில்...

கேட்டுக்கொண்டுள்ளனர்.

நேற்று பிற்பகல் 1.30 மணியளவில், திருநெல்வேலி ஆடியபாதம் வீதியில் அமைந்துள்ள மரக்காலை ஒன்றில் நின்றிருந்த இளைஞரை 4 மோட்டார் சைக்கிளில் வந்த 10 பேர் கொலை செய்யும் நோக்குடன் துரத்தி சென்றுள்ளார்கள்.

குறித்த இளைஞர் உயிரை காப்பாற்றுவதற்காக தப்பி ஓடிச்சென்று அருகே உள்ள கிணற்றினுள் குதித்துள்ளார். அப்போது அவரை துரத்திச்சென்ற வாள்வெட்டு குழுவினர் கற்களை கிணற்றினுள் வீசி அவர்மேல் தாக்குதல் மேற்கொண்டுள்ளனர். அந்த நேரம் அப்பகுதியால் சென்ற பொலிஸார் சம்பவ இடத்துக்கு வந்த போது வாள்வெட்டுக்குழுவினர் தப்பிச்சென்றுள்ளனர்.

இருப்பினும் சம்பவத்துடன் தொடர்புடைய மூன்று நபர்களை பொலிஸார் துரத்தி சென்று கைது செய்துள்ளார்கள். இதில் கைதடிப்பகுதியை சேர்ந்த 2 பேரும் கொக்குவிலை சேர்ந்த ஒருவரும் கோப்பாய் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேலும் யாழ்ப்பாணம் கோம்பயன் மணல் மயானப் பகுதியில் நேற்று இரவு 2 மோட்டார் சைக்கிள்களை இனம்தெரியாத குழுவினர் தீயிட்டு கொழுத்திவிட்டு சென்றுள்ளனர்.

அதனை தொடர்ந்து கே.கே.எஸ் வீதி, தெல்லிப்பளை சந்திக்கு அருகில் நேற்று 8.30 மணியளவில், 50 க்கும் மேற்பட்ட இளைஞர் குழுவினர் கத்தி வாள் மற்றும் பொல்லுகளுடன் வீதியால் செல்பவர்களை அச்சுறுத்தியுள்ளனர்.

மேலும் அண்மையில் கல்வியங்காட்டு பகுதியில் ஒரு குடும்பத்தின் மீது தாக்குதல் மேற்கொண்டு பல வீடுகளை சேதப்படுத்திய சம்பவத்துடன் தொடர்புடையதாக விசாரணைகளின் அடிப்படையில் 3 நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களிடம் இருந்து ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டுள்ளன.

தொடர்ச்சியாக யாழ் குடாநாட்டில் மீண்டும் இந்த வன்முறைச்சம்பவங்கள் அதிகரித்துள்ள காரணத்தினால் மக்கள் மத்தியில் அச்சநிலை உருவாகியுள்ளதுடன், பாதுகாப்பும் கேள்விக்குறியாகியுள்ளது. இது தொடர்பில் பொலிஸார் கூடிய கவனம் எடுக்க வேண்டும் என பொதுமக்கள் கேட்டுக் கொண்டுள்ளனர். (மு-9,101)

## தமிழரின் அபிலாசை...

பெற்றுள்ளார்.

விசேடமாக மகிந்த ஆட்சிக்காலத்தில் நாம் பாரிய ஒடுக்கு முறைக்குள் சென்ற போது அவருடைய ஆளுமையும் அவரை குறித்து சர்வதேசத்துக்கு இருந்த இணைப்பை மிக வெகுவாக பயன்படுத்தி உரத்து சொல்வதில் வெற்றி கண்டுள்ளார்.

ஆனால் மக்களின் எதிர்பார்ப்பு அது மட்டுமல்ல அதிகாரங்களை சரியான முறையில் உபயோகித்து போரினால் அழிவுற்ற பிரதேசத்தை மீள கட்டியெழுப்பும் முக்கிய பணியில் ஈடுபட வேண்டும் என்பதும் மக்கள் கொடுத்த ஆணை. அதை துரதிர்ஷ்டவசமாக முதலமைச்சர் தலைமைதாங்கிய வடக்கு மாகாண சபை எந்த விதத்திலும் நிறைவேற்றவில்லை என மேலும் தெரிவித்தார்.

தமிழ் அரசுக் கட்சி, தமிழ் தேசியக் கூட்டமைப்பைப் பதிவு செய்யவிடாது என்றும் தேர்தலில் வாக்குப் பெறும் இயந்திரமாக தமிழ் தேசியக் கூட்டமைப்பை தமிழ் அரசுக் கட்சி பயன்படுத்துகின்றது என்றும் சுரேஸ் பிரேமச்சந்திரன் குற்றஞ்சாட்டியுள்ளமை தொடர்பாக கேட்கப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையில்,

சுரேஸ் பிரேமச்சந்திரனும் தமிழ் தேசியக் கூட்டமைப்பிலே ஒரு அங்கத்துவக் கட்சியாக இருந்தவர். கடந்த பாராளுமன்றத் தேர்தலில் மக்களால் மிக மோசமாக நிராகரிக்கப்பட்ட பிறகு அவர் தனது கட்சியான தமிழ் தேசியக் கூட்டமைப்பையே விமர்சிக்கத் தொடங்கினார். பின்னர் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் நேரம் அவரோடு இவரோடு சேர்ந்து தமிழ் தேசியக் கூட்டமைப்பிலிருந்து விலகிப் போட்டியிடுவதாகப் போய் இறுதியில் ஆனந்தசங்கரியுடன் சேர்ந்து போட்டியிட்டு அதிலையும் பாரதூரமான தோல்வியைச் சந்தித்தவர்.

ஆகையால் தங்களை மக்கள் நிராகரிப்பதற்கான காரணங்களை மற்றவர்கள் மீது சுமத்துவது அவருடைய பழக்க தோசமாக இருக்கிறது. அவரைப் பற்றி நான் வேறு ஒன்றும் சொல்ல விரும்ப வில்லை என மேலும் தெரிவித்தார். (மு-9)

## அரசியல்கைதிகள்...

இல்லத்தில் நேற்று நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பின் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார் இது தொடர்பாக மேலும் தெரிவிக்கையில்,

கடந்த புதன்கிழமை சட்ட மா அதிபர் நாட்டுக்குத் திரும்பிய உடனேயே பிரதமர் தலைமையில் ஒரு கூட்டம் நடத்தப்பட்டது. அதில் நீதி அமைச்சரும் பங்கேற்றிருந்தார். உணவு ஒறுப்பில் இருக்கும் அரசியல் கைதிகளின் நிலைப்பாடுகள் தொடர்பில் நானும் சம்பந்தனும் அவர்களுக்கு விளக்க மளித்திருந்தோம்.

உணவு ஒறுப்புப் போராட்டம் நடத்தும் அரசியல் கைதிகளை நேரில் சென்று அவர்களின் விவரங்களை நான் எடுத்த காரணத்தினால் ஒவ்வொருவருடைய வழக்கு விவரங்களையும் அரச தரப்புக்கு எடுத்துக் கூறினோம்.

அவ்வாறான பாரதூரமான வழக்குகளை துரிதமாக நடத்தி முடிப்பதற்காகதான் சிறப்பு நீதிமன்றங்கள் கொழும்பிலும் அநுராதபுரத்திலும் அமைக்கப்பட்டன. அநுராதபுரத்தில் அமைக்கப்பட்டுள்ள சிறப்பு நீதிமன்றிலே வழக்குகள் விசாரணைக்கு எடுக்கப்படவில்லை. அதனால்தான் அநுராதபுரம் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகள் தம்மை புனர்வாழ்வுக்கு அனுப்பியாவது விடுவிக்கக் கோரி இந்தப் போராட்டத்திலே ஈடுபட்டுள்ளனர்.

இந்த விடயங்களை நாம் எடுத்துக் கூறிய போது, உடனடியாக தாம் ஒரு விசாரணையை நடத்துவதாக சட்ட மா அதிபர் குறிப்பிட்டார். அவர் விசாரணை நடத்துவதனால் அரசியல் கைதிகளுக்கு எந்தப் பலனும் கிட்டாது என்று அவர்களுக்கு நாம் கூறினோம்.

ஆகையினாலே 3 வருடங்களாக அவர்களின் வழக்குகளை இழுத்தடித்தமையால், அவர்கள் 10 வருடங்களுக்கு அண்மித்த காலத்தில் சிறையில் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர். அவர்கள் மீது எந்தவொரு குற்றமும் நிரூபிக்கப்படாத காரணத்தினாலே அவர்களை புனர்வாழ்வுக்கு அனுப்பியாவது விடுவிக்கப்படவேண்டும் என்று நாம் வலியுறுத்தினோம். இதுதொடர்பில் இரண்டு அல்லது மூன்று நாள்களிலே முடிவு சொல்வதாக சட்ட மா அதிபர் தெரிவித்திருந்தார்.

எனினும் நேற்றுடன் (நேறறு முன்தினம்) அந்த மூன்று நாள்கள் கடந்துவிட்டன. அதனால் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை பிரதமருடன் தொலைபேசியில் உரையாடினேன். அதுதொடர்பில் சட்ட மா அதிபருடன் பேசி முடிவைச் சொல்வதாக அவர் பதிலளித்தார். ஆனால் அவருடன் தொடர்பு கொள்ள முடியவில்லை. கொழும்பு சென்றதும் அரசியல் கைதிகள் தொடர்பான அரசின் நிலைப்பாட்டைக் கேட்டறிந்துகொள்ளலாம்.

மேலும் அனைத்து அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பிலும் நாம் அரச தரப்புடன் பேச்சு நடத்தினோம். அது சம்பந்தமாக நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நீதி அமைச்சருடைய அலுவலகத்திலே சட்ட மா அதிபரும் நானும் நீதி அமைச்சருடன் சந்திப்பு நடத்தவுள்ளோம்.

அரசியல் கைதிகள் ஒவ்வொருவருடைய வழக்கு விடயங்களையும் ஆராய்ந்து அவர்களை எவ்வாறு விடுவிக்க முடியும் என்று ஆராய்வதற்காக இந்தச் சந்திப்பைக் கூட்டுகின்றோம்.

இவ்வாறு அரசியல் கைதிகள் ஒவ்வொருவருடைய வழக்குக் கோவைகளையும் ஆராய்ந்து அவர்களை விடுவிப்பதைவிட அரசியல் தீர்மானம் ஒன்றை எடுத்து அனைத்து அரசியல் கைதிகளையும் விடுவிக்க வேண்டும் என்று தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் அரச தரப்பிடம் எடுத்துக் கூறினார்.

ஜனாதிபதியுடன் இது தொடர்பில் பேசியிருக்கின்றேன். அவர் நாடு திரும்பியவுடன் அரசியல் கைதிகள் விடயம் தொடர்பில் ஆராய்வதாக உறுதியளித்தார் என்றும் சம்பந்தன் கூறினார். ஜனாதிபதியுடன் பேசி அந்தக் கூட்டத்தை தான் ஒழுங்கு செய்வதாகப் பிரதமர் தெரிவித்தார்.

அந்தச் சந்திப்பின் பிரகாரமே ஒரு அரசியல் தீர்மானத்தின் மூலம் அரசியல் கைதிகளை விடுவிக்க முடியும். 51 அரசியல் கைதிகள் வழக்கு முடிவடைந்து சிறைத் தண்டனை அனுபவிப்பவர்கள். ஜனாதிபதி மன்னிப்பு வழங்குவதன் ஊடாகவே அவர்கள் விடுதலை பெற முடியும்.

வடக்கு கிழக்கு அபிவிருத்திச் செயலணி வரும் 3ஆம் திகதி புதன்கிழமை மாலை 3 மணிக்கு ஜனாதிபதி தலைமையில் கூடுகிறது. அதில் நாம் பல விடயங்கள் பற்றிப் பேசவுள்ளோம். அரசியல் கைதிகளின் விடுவிப்புத் தொடர்பிலும் நாம் ஜனாதிபதியுடன் பேசுவோம் என மேலும் தெரிவித்தார். (மு-9)

## முதலமைச்சர் வேட்பாளராக...

கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இதனை குறிப்பிட்டுள்ளார். தொடர்ந்தும் கருத்து வெளியிட்டுள்ள அவர்,

வடமாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாப்பை மீறிவிட்டார். மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றத் தவறிவிட்டார்.

அத்துடன், மாகாணசபைக்கு ஒதுக்கப்பட்ட நிதி மக்களின் நலன்களுக்காக பயன்படுத்தப்பட வேண்டும். எனினும், ஆளுநரின் கையில் இன்னமும் நிதி உள்ளது.

இந்நிலையில், எதிர்வரும் வடமாகாண சபை தேர்தலில் கூட்டமைப்பின் சார்பில் புதியவர் ஒருவரை முதலமைச்சர் வேட்பாளராக நிறுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாக அவர் மேலும் கூறியுள்ளார்.

இதேவேளை, வடமாகாண முதலமைச்சருக்கும், தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கும் இடையிலான கருத்து மோதல் அண்மைகாலமாக வலுவடைந்துள்ளது. இரண்டு தரப்பும் பரஸ்பர குற்றச்சாட்டுகளை முன்வைத்து வருகின்றனர்.

இந்நிலையிலேயே, எதிர்வரும்வடமாகாண சபை தேர்தலில் கூட்டமைப்பின் சார்பில் புதியவர் ஒருவரை முதலமைச்சர் வேட்பாளராக நிறுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார். (மு)

### நீரோகா

திகதி 2018/09/30
சீட்டிழுப்பு இலக்கம் 453
மீனம் 04 30 53 65 05

### மஹஜன சம்பத

திகதி 2018/09/30
சீட்டிழுப்பு இலக்கம் 3757
B 2 9 9 0 3 9

### கொவிசெத

திகதி 2018.09.30
சீட்டிழுப்பு இலக்கம் 1898
C 27 45 60 61

### தன நிதானய

திகதி 2018-09-30
சீட்டிழுப்பு இலக்கம் 56
ஆங்கில எழுத்து Z
வெற்றி இலக்கங்கள் 02 04 57 66

## புதிய கட்சியில்...

எனது செயற்பாடுகள் தொடர்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் உள்ள சிலர் மகிழ்ச்சியடையவில்லை என்பது எனக்குத் தெரியும்.

நான் திரும்பத் திரும்ப, ஒரு நாடாளு மன்ற உறுப்பினரால் விமர்சிக்கப்படுகிறேன். முரண்பாட்டு அரசியலைத் தொடர நான் விரும்பவில்லை. எனக்கு அளிக்கப்பட்ட ஆணையின் படியே செயற்பட்டிருக்கிறேன்.

எனது ஆற்றலைக் கொண்டு, அதனைச் செய்திருக்கிறேன். எமது மாகாணசபையின் ஆயுட்காலம் முடிவதற்கு முன்னர், அதன் செயற்பாடுகள் தொடர்பான அறிக்கையை வெளியிடுவேன் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (மு)


வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத் தருகின்றோம்

நிறஞ்சன் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, உடுப்பிட்டி, வவுனியா, மன்னார், முல்லைத்தீவு ஆகிய பகுதிகளில் வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தை தந்து வாங்கப்படும்.

தொடர்பு:
நிறஞ்சன் நகைமாடம்
சந்தை வீதி, உடுப்பிட்டி.
0763836129
(5864)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கள்
வடக்கின் 1வது & ஒரேயொரு வெளிநாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம்
ஐந்து நட்சத்திர விருதுவென்ற ஒரே நிறுவனம்
Emerald Isle
Manpower & Travel Services
The Sri Lankan Recruitment Specialists
License No. 2268
ஆரம்பக் கட்டணம் எதுவும் இல்லை!
பதிவுக் கட்டணம் 200/- மட்டுமே
இப்போது யாழ்ப்பாணத்தில்
மத்திய கிழக்கு - ஐரோப்பா - மேலைத்தேய நாடுகள்
077 00 38 215 ☎ 021 222 00 11
(சி-4018)
221-1/1, மின்சார நிலைய வீதி, (2ம் ஒழுங்கை), யாழ்ப்பாணம்
www.emeraldisle.lk email: jaffna@emeraldisle.lk

விரைவு பொதிகள் சேவை
விசேட விலை குறைப்பு
(C-3992)
UK- 550 /=Kg
கனடா-900 /=Kg
ஜேர்மனி- 700 /=Kg
நெதர்லாந்து-700 /=Kg
(நிபந்தனைகளுக்குட்பட்டது)
DELIVERY IN 3-5 DAYS
● மானிப்பாய் ● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● சாவகச்சேரி ● நெல்லியடி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை
0768226240
V2 TRAVELS


# மரண அறிவித்தல்



## திருமதி தனபாலசிங்கம் வசந்தராணி

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பை பிறப்பிடமாகவும் சுவிஸ் Zurichஐ வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தனபாலசிங்கம் வசந்தராணி (வசந்தி) அவர்கள் கடந்த (26.09.2018) புதன்கிழமை காலமானார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் சுவிஸில் இன்று (01.10.2018) திங்கட்கிழமை காலை 10 மணி முதல் இடம்பெற்று மாலை 2 மணிக்கு பூதவுடல் தகனம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல் : அருந்தவராணி
தெய்வேந்திரம் குடும்பத்தினர்
(சகோதரி)

முல்லைத்தீவு,
புதுக்குடியிருப்பு.

(சி-4013)


வெளிநாடுகளுக்கான துரித தபால்கள், பொதிகள் சேவை

- ஆகாய மற்றும் கடல் மார்க்கமாக, அதி விரைவு, விரைவு, சிக்கன பொதிகள் சேவை.
- கடலுணவு, இறைச்சி, எண்ணை வகை, மருந்துப் பொருட்கள், பழ வகைகள்,
- பால் மா வகைகள் என்பனவற்றையும் அனுப்பிக் கொள்ள முடியும்.
- நியாயமான கட்டணத்தில் நிறைந்த சேவை.

20 வருட கால அசைக்க முடியாத நம்பிக்கை வென்ற நாம்
(சி-3991)

அருள்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட்

நெல்லியடியில் - இல.01, பெற்றோல் செற் லேன், நெல்லியடி. 076 443 1576
சாவகச்சேரியில் - இல.01, NDB வங்கிக் கட்டடம், தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி. 076 443 1576

10, மாநகர சபை புதிய கட்டடத் தொகுதி, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 222 3536

புதுக்கடை திறப்புவிழா அழைப்பு

நிகழும் விளம்பி வருடம் இன்று (01.10.2018) திங்கட்கிழமை மதியம் 12 மணியில் இருந்து 1.30 மணி வரையான சுபமுகூர்த்த வேளையில் எம்மால் புதிதாக ஆரம்பிக்கப்பட இருக்கும்

SUNJEY'S "A to Z" MART

என்னும் சுப்பர் மாக்கற் திறக்கப்பட இருப்பதால் அனைவரும் இவ்அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்று இங்கு வந்து எம்மை வாழ்த்தி மகிழ்வித்து இந்நிகழ்வில் பங்குபற்றுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

- குறிப்பாக இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட அசல் தோலால் உருவாக்கப்பட்ட சப்பாத்துக்கள், செருப்புகள், இடுப்புப்பட்டிகள் (Belt), பேஸ் வகைகள் இன்னும் பல...
- ரூ.5000/= இற்கு மேல் கொள்வனவு செய்யும் 10km சுற்று வட்டத்திற்குள் வசிக்கும் வாடிக்கையாளர்களுக்கு இலவசமாக பொருட்கள் விநியோகிக்கப்படும்.
- தொலைபேசி மூலமான ஓடர்களும் ஏற்றுக்கொள்ளப்படும்.

(சி-4052)



102, அரசடி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 20 53 077, 0777 474 111

உரிமையாளர்: லயன்.அ.ஜெயந்திரன்
சண்ஜெய் "A to Z" மாட்


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 01.10.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.